# தீராத மற்றும் கடுமையான:

## இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய மத வன்முறை



# தீராத மற்றும் கடுமையான: இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய மத வன்முறை

கெஹான் குணதிலக்க*

* கெஹான் குணதிலக்க ஒரு சட்டத்தரணி என்பதுடன், கொழும்பில் (இலங்கை) தளத்தைக் கொண்ட ஆராய்ச்சியாளருமாவார். Verité Researchஇல் அவர் ஆராய்ச்சிப் பணிப்பாளர் என்பதுடன், சிட்னி பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் வழங்கப்படும் மனித உரிமைகள், மக்களாட்சிக் கொள்கை மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் பட்டத்திற்குப் பிந்திய பயிற்சிநெறிகளைக் கற்பிக்கின்றார். அவர் தற்போது ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக, நியூ கொலேஜ்ஜில் பொதுநலவரசு கல்விமானாக விளங்குகின்றார்.

இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம் ©

**வன்முறை ஒரு நோயாகும், காரணிக்கான அக்கறையின்றி, அதைப் பயன்படுத்தும் சகலரையும் களங்கப்படுத்தும் ஒரு நோயாகும்.**

கிறிஸ்தோபர் லைன் ஹெட்ஜஸ்
(எழுத்தாளர், இதழியலாளர் மற்றும் தீவிரப்போக்காளர்)

**அறிமுகம்** ........................................................................ 3

**1. சட்ட, கொள்கை மற்றும் நிறுவனரீதியிலான வரைச்சட்டம்** ........................................ 5

*1.1 சர்வதேசத் தரங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள்* ........................................ 5

*1.2 அரசியலமைப்புத் திட்டவரை*........................................................ 9

*1.3 மத வன்முறையினதும், வெறுப்பு உரையினதும் மீதான சட்டங்கள்* ........................ 12

*1.4 கொள்கை மற்றும் நிறுவனரீதியில் வரைச்சட்டம்* ........................................ 14

**2. மத வன்முறை மீதான தரவுகள்** ........................................................ 17

*2.1 மதத் தாக்குதல்களின் வகைப்படுத்தல்* ................................................ 17

*2.2 குற்றமிழைத்தோரை வகைப்படுத்தல்* .................................................. 19

*2.3 மத தாக்குதல்களின் அளவறிதலிலான படமிடல்* ........................................ 20

*2.4 விடய ஆய்வுகள்* ................................................................ 28

*2.5 மதத் தாக்குதல்களின் குடித்தொகையியல் படமிடல்* .................................... 32

*2.6 தீராத மற்றும் கடுமையான வன்முறை*................................................ 36

**3. மத வன்முறையின் சூழமைவு**.......................................................... 38

*3.1 சமூக-கலாசாரச் சூழமைவு*.......................................................... 38

*3.2 பொருளாதாரச் சூழமைவு*............................................................ 41

*3.3 அரசியல் சூழமைவு*................................................................ 43

*3.4 குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவு*...................................................... 48

*3.5 ராஜபக்ஷவுக்கு பின்னரான முன்னேற்றங்கள்* .......................................... 49

**4. ஊடகங்களின் வகிபங்கு**.............................................................. 50

**முடிவுரை**.......................................................................... 53

**அறிமுகம்**

2009 மே மாதத்தில் இலங்கையில் மூன்று தசாப்தங்களைக் கொண்ட யுத்தத்தின் முடிவின் போது, அது நாட்டில் இனத்துவ மற்றும் மத வன்முறையின் முடிவொன்றின் எதிர்பார்ப்புக்களை உயர்த்தியது. இருந்தும், இனத்துவத் தேசியவாதத்தினதும், அடையாள அரசியலினதும் உயிர்ப்பூட்டலினை யுத்தத்திற்கு பிந்திய கருத்தாடல்கள் அடியெடுத்துக் கொடுத்துள்ளன.[1] இந்தக் கருத்தாடல்கள் புத்தம் புதிய கெடுபிடிநிலைகளையும், பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளையும் முன்வைத்ததுடன், விலக்கீட்டுரிமையுடன் மதச் சிறுபான்மையினர் மீது தாக்குதல்கள் இடம்பெறுவதற்கான சூழலொன்றுக்கும் ஆதரவளித்தது.

வன்முறையானது ‘வரையறுப்பதற்கு அபகீர்த்தியிலான கஷ்டமானது’. ஏனெனில் இது ‘பன்முகத்திலான’ தன்மையிலானதாகும்.[2] கோட்பாட்டுரீதியிலும், சாஸ்திரிய அறிவற்ற ஆய்வுகளிலும் வரைவிலக்கணம் பரவலான கவனத்தை ஈர்த்தெடுத்துள்ளது. இருந்தும், அதன் துல்லியமான சாராமாறிகள் மீது உடன்பாடு அடையப்படவில்லை. ஒன்றில் காயம், மரணம் உளவியல்ரீதியிலான கெடுதல், முறையற்ற முன்னேற்றம் அல்லது இழக்கச்செய்தல் ஆகியவற்றை விளைவிக்கின்ற அல்லது அனேகமாக அதிகளவில் விளைவிக்கின்ற ஒருவருக்கு எதிராக அல்லது குழுவொன்றுக்கு அல்லது சனசமூகமொன்றுக்கு எதிராகப் பயமுறுத்துகின்ற அல்லது உண்மையான உடல்ரீதியிலான பலத்தின் அல்லது சக்தியின் நோக்கத்திலான உபயோகம் என வன்முறையை உலக சுகாதாரத் தாபனம் வரையறுக்கின்றது.[3] இருந்தும், வன்முறையின் வரைவிலக்கணத்தினுள் உடல்சாராததும், ‘கட்டமைப்பிலானதுமான’ அம்சங்களைக் கூட உள்ளடக்குமாறு சில தத்துவவியலாளர்கள் வற்புறுத்துகின்றனர். உடல்ரீதியிலான வன்முறைக்கு முற்றுமுழுதான வரைவிலக்கணமொன்றை மட்டுப்படுத்த முடியாது என விவாதிக்கும் ரல்ப் ரானர் (Ralph Tanner), ஆனால் ‘தனிப்பட்ட சுதந்திரத்துடன் நிர்ப்பந்தத்திலான தலையீடு, மூர்க்கத்தனமான அல்லது உணர்ச்சிவயப்பட்ட நடத்தை அல்லது மொழி; இறுதியாக கட்டுக்கடங்காத உணர்ச்சி அல்லது ஆவேசம் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றார்.[4] இதனிடையே, தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலிருந்து மக்களைத் தடுப்பதன் மூலம், அவர்களைச் சமூகக் கட்டமைப்புகள் அல்லது சமூக நிறுவனங்கள் கெடுதல் செய்கின்ற ‘கட்டமைப்பிலான வன்முறை’ நிலவுவதாக ஜொஹான் கல்துங் (Johan Galtung) சுட்டிக்காட்டுகின்றார்.[5] உடல்ரீதியிலான அல்லது உடல்சாராத வன்முறையின் வரம்பினுள் மரபுரீதியில் வராத பாகுபாட்டிலான நடைமுறைகள் கட்டமைப்பிலான வன்முறையின் விரிவெல்லையினுள் உள்ளடக்கப்படலாம். மதச் சிறுபான்மையினர்களைக் குறிப்பாக இலக்குவைக்கும் வன்முறை மீது இந்த ஆய்வு நோக்கினைக் கொண்டுள்ளது. கலைச்சொல் மீதான சர்ச்சைகளை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, உடல்ரீதியிலான, உடல்சாராத மற்றும் சிறிதளவுக்கு கட்டமைப்பிலான அம்சங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் மத வன்முறைக்கான பரவலான வரைவிலக்கணமொன்றை ஆய்வு ஏற்றுக்கொள்கின்றது.

இலங்கையில், மதச் சுதந்திரத்தின் நிலையை இந்த ஆய்வு பரிசீலிக்கின்றது. இது மதத் தாக்குதல்களினதும், அத்துடன் அந்தத் தாக்குதல்களுடன் இணைந்துள்ள செயற்பாட்டாளர்களினதும் வகைப்படுத்தல்களைக் கலந்துரையாடுகின்றது. மத வன்முறை இடம்பெறுகின்ற சமூக-கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகள் ஆகியவற்றை அது பகுப்பாய்கின்றது. இந் நடைமுறையில், அதன் தன்மையினதும், சூழமைவினதும் பதங்களில் மத வன்முறையை மீள்-கட்டமைப்பதற்கு ஆய்வு முயல்கின்றது. இதன் பிரகாரம், நீண்ட காலமொன்றுக்கு மேலாக நிலைத்திருக்கும் வன்முறையின் குறைந்த தீவிரத்தன்மையிலான வடிவங்கள் எனப்படும் ‘தீராத’ அத்துடன் இங்குமங்குமாக இடம்பெறுகின்ற வன்முறையின் ‘தொடர் நிகழ்ச்சிமயமான’ வடிவங்கள் எனப்படும் ‘கடுமையான’ என்றவாறு, வன்முறையின் இரு அத்தியாவசியமான வடிவங்கள் பகுப்பாயப்படும்.

---

[1] Gamini Keerawella, ‘Post-War Sri Lanka: Is Peace a Hostage of the Military Victory? Dilemmas of Reconciliation, Ethnic Cohesion and Peace-Building’, *International Centre for Ethnic Studies: Research Paper No: 8*, June 2013.

[2] Willem de Haan, ‘Violence as an Essentially Contested Concept’ in Sophie Body-Gendrot & Pieter Spierenburg (eds.), *Violence in Europe: Historical and Contemporary Perspectives* (2008), at 28.

[3] World Health Organisation, *WHO global consultation on violence and health* (1996), at 4, cited in World Health Organisation, *Global status report on violence prevention 2014* (2015), at 2.

[4] R.E.S. Tanner, *Violence and religion: Cross-cultural opinions and consequences* (2007), at 5.

[5] Johan Galtung, ‘Violence, Peace, and Peace Research’ (1969) 6(3) Journal of Peace Research 167-191.

இவ்வாய்வு ஐந்த பிரிவுகளில் முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் மதச் சுதந்திரம் தொடர்பிலான சட்டபூர்வமானதும், நிறுவனரீதியிலானதுமான வரைச்சட்டத்தை முதலாவது பிரிவு பரிசீலிக்கின்றது. உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சட்டங்கள், மதத் தாக்குதல்களைத் தடுப்பது மீதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அத்துடன் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக வழக்குதொடுத்தல் ஆகியவற்றையும் அது பகுப்பாய்கின்றது. இரண்டாவது பிரிவு விவரணத்திலானது. இதில் மதத் தாக்குதல்களினதும், குற்றமிழைத்தவர்களினதும் வகைப்படுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் மதத் தாக்குதல்கள் மீதான தரவுகளின் அளவறிதலிலானதும், குடித்தொகையிலானதுமான திட்டமொன்றையும் இப்பிரிவு வழங்குகின்றது. சூழமைவு மீது நோக்கினை மூன்றாவது பிரிவு கொண்டிருப்பதுடன், இலங்கையில் மத வன்முறை இடம்பெறுகின்ற சமூக-கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகள் ஆகியவற்றையும் பகுபாய்கின்றது. நாட்டில் மத வன்முறையின் உத்தேசமான காரணிகளுடன் பிரிவு அத்தியாவசியமானரீதியில் பற்றிக்கொள்கின்ற அதேவேளை, காரணிகள் மீது திட்டவட்டமான முடிவுரைகள் இலகுவாக முன்வைக்கப்பட முடியாது என்பதை உணர்த்துகின்றது. வன்முறை மற்றும் இணை-வாழ்வு ஆகியன தொடர்பிலான கருத்தாடல்களை முன்னேற்றுவதில் பிரதானநீரோட்ட மற்றும் சமூக ஊடகங்கள் ஆற்றியுள்ள வகிபங்குகளை நான்காவது பிரிவு பகுப்பாய்கின்றது. இதன் பின்னர், இலங்கையில் மதச் சுதந்திரத்திற்கும், மத வன்முறைக்கும் தொடர்பான சில முக்கியமான முடிவுகளையும், பரிந்துரைகளையும் முடிவுரைப் பிரிவு முன்வைக்கின்றது. இந்தப் பரிந்துரைகள் மத இணை-வாழ்வில் நிலைத்திருக்கத்தக்க பாதுகாப்புக்கும், மேம்படுத்தலுக்கும் அத்துடன் எதிர்காலத்தில் மத வன்முறையைத் தடுப்பதற்கும் மற்றும் தணிப்பதற்கும் தொடர்பானவையாகும்.

## 1. சட்ட, கொள்கை மற்றும் நிறுவனரீதியிலான வரைச்சட்டம்

மதச் சுதந்திரத்திற்கும், மத வன்முறையைத் தடுப்பதற்கும் பிரயோகிக்கப்படுகின்ற சட்டம், கொள்கை மற்றும் நிறுவனரீதியிலான வரைச்சட்டம் ஆகியவற்றை இப்பிரிவு பரிசீலிக்கின்றது. இவ்விடயங்களுக்கு தொடர்பான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றையிட்டும் பிரிவு கலந்துரையாடுவதுடன், முழுமையான பாதுகாப்பு வரைச்சட்டத்தில் உள்ள ஏதேனும் இடைவெளிகளைப் பகிரங்கப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

### *1.1 சர்வதேசத் தரங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள்*

பல்-எண்ணிக்கையிலான சர்வதேச ஒப்பந்தங்களில் மதத்தின் சுதந்திரம் அடையாளங் காணப்படுகின்றது. 'எண்ணத்தினதும், மனச்சாட்சியினதும் மற்றும் மதத்தினதும் சுதந்திரத்திற்கு ஒவ்வொருவரும் உரிமையொன்றைக் கொண்டுள்ளார்' என்பதை மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனத்தின் [Universal Declaration of Human Rights (UDHR)] உறுப்புரை 18 வழங்குகின்றது.[6] மேலும், நபர் ஒருவரின் மதத்தின் சுதந்திரமானது 'தனது மதத்தில் அல்லது வழிபாட்டில் நம்பிக்கையை, அனுஷ்டானத்தை, நடைமுறை வழக்கத்தை மற்றும் போதனையை ஒன்றில் தனிப்பட்டரீதியில் அல்லது ஏனையோருடன் சனசமூகத்தில் வெளிக்காட்டுவதற்காக, பொதுவிடத்தில் அல்லது தனிப்பட்ட இடத்தில் மதமொன்றை அல்லது தனது தெரிவின் விருப்பினை மற்றும் சுதந்திரத்தைக் கொண்டிருப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரத்தை உள்ளடக்க வேண்டும்' என சிவில், அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தத்தின் [International Covenant on Civil and Political Rights (ICCPR)] உறுப்புரை 18 குறிப்பிடுகின்றது.[7] மதத்தின் சுதந்திரத்திற்கான ஏதேனும் கட்டுப்பாடுகள் 'சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறும், பொதுசன பாதுகாப்பு, ஒழுங்கு, சுகாதாரம் அல்லது ஒழுக்கங்கள் அல்லது அடிப்படை உரிமைகள் மற்றும் ஏனையோரின் உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறும், அவசியமானவாறும் அத்தகையை மட்டுப்படுத்தல்களுக்கு மட்டும் உட்படும்' என ஏற்பாடு செய்கின்றது.[8] இவ்வாறாக, ஒரு புறத்தில் மத நம்பிக்கையொன்றை ஏற்றுக்கொள்வதற்கும், தாங்கிப்பிடித்துக்கொள்வதற்குமான சுதந்திரம் அத்துடன் மறு புறத்தில் மத நம்பிக்கையொன்றை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் ஆகியன உட்பட மதத்தின் சுதந்திரமானது சர்வதேசச் சட்டத்தில் நன்கு தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வரைச்சட்டத்திற்கு இலங்கை ஒரு தரப்பு என்பதுடன், இதனால் மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்கும் அத்துடன் நிறைவேற்றுவதற்குமான சர்வதேசக் கடப்பாடுகளைக் கொண்டுள்ளது.

ICCPRஇல் உள்ளடங்கியுள்ள மதச் சுதந்திரத்தின் பொதுவான பாதுகாப்பு ஏதேனும் தொடர்ந்து வந்த ஒப்பந்தத்தில் விபரிக்கப்படவில்லை. 'அத்தகையதொரு ஒப்பந்தம் வரையப்படுவதை அனுமதிப்பதற்கு போதியளவு சர்வதேச ஒருமைப்பாடு அல்லது அரசியல் மனவுறுதி இருக்கவில்லை' என கரோலின் ஈவான்ஸ் (Carolyn Evans) வாதிக்கின்றார்.[9] எனினும், 1981இல் மதத்தின் அல்லது நம்பிக்கையின் மீதான அடிப்படையில் சகிப்பற்றதன்மையினதும், பாகுபாட்டினதும் சகல வடிவங்களையும் ஒழித்தல் மீதான பிரகடனத்தை (Declaration on the Elimination of All Forms of Intolerance and of Discrimination Based on Religion or Belief) ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (United Nations General Assembly) ஏற்றுக்கொண்டுள்ளது.[10] அது பின்னர் மதச் சகிப்பற்றதன்மையின் சகல வடிவங்களையும் ஒழித்தல் மீது 1993இல் தீர்மானமொன்றை

---

[6] Article 18, UN General Assembly, Universal Declaration of Human Rights, 10 December 1948, 217 A (III).

[7] Article 18(1), UN General Assembly, International Covenant on Civil and Political Rights (ICCPR), 16 December 1966, United Nations, Treaty Series, vol. 999, at 171.

[8] Article 18(3) ICCPR.

[9] See Carolyn Evans, *Legal Aspects of the Protection of Religious Freedom in Australia* (2009); Carolyn Evans, 'Time for a Treaty? The Legal Sufficiency of the Declaration on the Elimination of All Forms of Intolerance and Discrimination' (2007) Brigham Young University Law Review 617, 625–7

[10] UN General Assembly, Declaration on the Elimination of All Forms of Intolerance and of Discrimination Based on Religion or Belief, 25 November 1981, A/RES/36/55.

ஏற்றுக்கொண்டுள்ளது.[11] இக் கருவிகள் சர்வதேச ஒப்பந்தங்களைக் கட்டுப்படுத்துபவை அல்ல என்ற போதிலும், மதச் சுதந்திரத்தையிட்டு அவை விவரிக்கின்றன. உதாரணமாக, எண்ணத்தினதும், மனச்சாட்சியினதும் மற்றும் மதத்தினதும் அல்லது நம்பிக்கையினதும் சுதந்திரத்திற்கான நியாயமான முடிவுகளாக பின்வரும் குறிப்பான உரிமைகளை 1981 பிரகடனம் முன்வைக்கின்ற:

அ) மதமொன்று அல்லது நம்பிக்கையொன்று தொடர்பில் வழிபடுதல் அல்லது ஒன்றுகூடுதல் அத்துடன் இந்நோக்கங்களுக்காக இடங்களைத் தாபித்தல் அத்துடன் பராமரித்தல்;
ஆ) பொருத்தமான தருமப்பணி அல்லது மனிதாபிமான நிறுவனங்களைத் தாபித்தல் அத்துடன் பராமரித்தல்;
இ) மதமொன்றின் அல்லது நம்பிக்கையொன்றின் ஆசாரங்களுக்கும், வழக்கங்களுக்கும் தொடர்பான போதிய அளவிலான அவசியமான பண்டங்களையும், பொருட்களையும் செய்தல், ஒன்றுதிரட்டுதல் அத்துடன் பயன்படுத்தல்;
ஈ) இத் துறைகளில் சம்பந்தப்பட்ட வெளியீடுகளை எழுதுதல், வழங்குதல் அத்துடன் பரப்புதல்;
உ) மதமொன்றின் அல்லது நம்பிக்கையொன்றின் நோக்கங்களுக்காகப் பொருத்தமான இடங்களில் அவற்றைக் கற்பித்தல்;
ஊ) தனிப்பட்டவர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் தன்னிச்சையிலான நிதிசார் மற்றும் வேறு உதவுதொகைகளைக் கோருதல் மற்றும் பெறுதல்;
எ) ஏதேனும் மதத்தின் அல்லது நம்பிக்கையின் தேவைப்பாடுகளினாலும், தரங்களினாலும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ள அடுத்தமைகின்ற பொருத்தமான தலைவர்களினால் பயிற்றுவித்தல், நியமிக்கப்படுதல், தெரிவுசெய்யப்படுதல் அல்லது குறித்தொதுக்கப்படுதல்;
ஏ) ஓய்வு நாட்களை அனுசரித்தல் அத்துடன் ஒருவரின் மதத்தின் அல்லது நம்பிக்கையின் போதனைகளின் பிரகாரம் விடுமுறைகளையும், வைபவங்களையும் கொண்டாடுதல்;
ஐ) தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் மதத்தினதும், நம்பிக்கையினதும் விடயங்களில் தனிப்பட்டவர்களுடனும், சனசமூகங்களுடனும் தொடர்பிடல்களைத் தாபித்தல் அத்துடன் பராமரித்தல்.

இதனிடையே, ICCPRஇன் உறுப்புரை 18இனால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள மதத்தின் சுதந்திரத்திற்கு பொருள் விளக்கமளிக்கின்ற இல.22 பொதுக் கருத்தினை (General Comment) ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) மனித உரிமைகள் குழு (United Nations (UN) Human Rights Committee) முன்வைத்தது.[12] குறைந்தபட்சம் இரு காரணங்களுக்காக இந்தப் பொதுவான கருத்து முக்கியமானதாகும். முதலாவது 'கடவுள் நம்பிக்கையீனத்திற்கும் மற்றும் நாத்தீகக் கொள்கைகளுக்குமான' உறுப்புரை 18இன் உத்தரவாதங்களின் விரிவெல்லையை அது நீடிக்கின்றது. இரண்டாவது, மதம் மீதான சுதந்திரம் எப்பொழுது சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தலாம் என்பது மீது அது தெளிவான வழிகாட்டல்களை முன்வைக்கின்றது. பொதுவான கருத்தின்படி, மதமொன்றைக் கொண்டிருப்பதற்கும், மதமொன்றை ஏற்றுக்கொள்வதற்கும் - மதச் சுதந்திரத்தின் உள்ளக அம்சத்தை கொண்டிருப்பதற்கும் ஒரு போதும் தலையீடு செய்யப்படலாகாது. எனவே, சுதந்திரத்தின் இந்த அம்சம் முற்று முழுதானதாகும். எனினும், மதமொன்றை அல்லது நம்பிக்கையொன்றை வெளிக்காட்டுகின்ற உரிமையானது 'ஏனையோரின் உரிமைகளும், சுதந்திரங்களும்' உட்பட சில குறித்துரைக்கப்பட்ட காரணங்கள் மீது கட்டுப்படுத்தப்படலாம். 'அவை ஊர்ஜிதப்படுத்தப்படுகின்றவை மீதான குறிப்பான தேவைக்கு நேரடியான தொடர்பானவை என்பதுடன், விகிதாசாரமானவை' என்றால் மட்டுமே, அத்தகைய கட்டுப்பாடுகள் அனுமதிக்கக்கூடியவை என குழு விளக்கமளிக்கின்றது.[13]

அனேகமாக மதச் சுதந்திரத்தின் பயனறுதிவாய்ந்த பயிற்சிக்கு அவசியமான நிபந்தனையொன்று வெறுப்பு உரையிலிருந்து பாதுகாப்பின் உத்தரவாதமாகும். இனரீதியிலான பாகுபாட்டின் சகல வடிவங்களை ஒழித்தல் மீதான சர்வதேச சமவாயம்[14] [International Convention on the Elimination of

[11] UN General Assembly, 'Elimination of all forms of religious intolerance', G.A. res. 48/128, 48 U.N. GAOR Supp. (No. 49) at 247, U.N. Doc. A/48/49 (1993).
[12] UN Human Rights Committee, CCPR General Comment No. 22: Article 18 (Freedom of Thought, Conscience or Religion), 30 July 1993, CCPR/C/21/Rev.1/Add.4).
[13] *Ibid.* at para.8.
[14] UN General Assembly, International Convention on the Elimination of All Forms of Racial Discrimination, 21 December 1965, United Nations, Treaty Series, vol. 660, at 195.

all Forms of Racial Discrimination (CERD)] வெறுப்பு உரையைக் கையாளுகின்ற முதலாவது சர்வதேச ஒப்பந்தமாகும். வெறுப்பு உரையின் எல்லையினுள் பரவலாக வருகின்ற நான்கு வகைகளைக் கொண்ட செயற்பாடுகளைச் சமவாயத்தின் உறுப்புரை 4(அ) முன்வைக்கின்றது.

அ. இனரீதியான மேலாண்மை மீதான அடிப்படையில் கருத்துக்களைப் பரப்புதல்
ஆ. இனரீதியான வெறுப்பு மீதான அடிப்படையில் கருத்துக்களைப் பரப்புதல்
இ. இனரீதியான பாகுபாட்டைத் தூண்டுதல்
ஈ. இனரீதியாகச் செயல்நோக்கமளிக்கப்பட்ட வன்முறையின் செயற்பாடுகளைத் தூண்டுதல்.[15]

மதக் குழுவொன்றை இலக்குப்படுத்துகின்ற வெறுப்பு உரையை CERD நேரடியாகக் கையாள்வதில்லை. எனினும், ICCPRஇன் உறுப்புரை 20(2) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> பாகுபாட்டுக்கு, விரோதத்திற்கு அல்லது வன்முறைக்கு தூண்டலைக் கொண்டிருக்கின்ற தேசிய, இனரீதியான அல்லது *மதத்திலான* வெறுப்பு ஆகியவற்றின் ஏதேனும் ஆதரித்துவாதாடுதலைச் சட்டத்தினால் தடைசெய்ய வேண்டும் (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது)

இவ்வாறாக, குறிப்பிட்ட மதக் குழுவொன்றை இலக்குப்படுத்துகின்ற உரைக்கு ICCPR ஊடாக CERDஇல் உள்ளடங்கியுள்ள பரவலான தத்துவங்கள் நீடிக்கப்படுகின்றன. அத்தகைய வெறுப்பினை மேம்படுத்துவதற்கான நோக்கத்தினை உள்ளடக்குவதற்காக 'வெறுப்பினை ஆதரித்து வாதாடுதல்' என்ற சொற்களுக்கு தொடர்ச்சியாக பொருள்விளக்கமளிக்கப்பட்டுள்ளது.[16] எனவே, வெறுப்பு உரையின் முக்கிய பகுதியாக வேண்டுமென்றே செய்யப்படுவது கருதப்படுவதுடன், பாகுபாட்டுக்கு, விரோதத்திற்கு அல்லது வன்முறைக்கு தூண்டலைக் கொண்டுள்ள வெறுப்பினை மேம்படுத்துவதற்கு தனது உரைக்கான கருத்தினை உரையாற்றுபவர் கொண்டிருக்க வேண்டும். ஆய்வின் அடுத்த பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ள 'வெறுப்பு இயக்கங்களின் அல்லது பிரச்சாரத்தின்' வகுதியை விபரிப்பதில், இந்த வரைவிலக்கணத்திலான வரைச்சட்டம் முக்கியமானதாகும்.

குறிப்பாக சிறுபான்மை மதக் குழுக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தின் கடமையை அது விபரமாக விளக்குவதனால், வெறுப்பு உரையின் பிரச்சனைக்கு ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் இல.22 பொதுக் கருத்து தொடர்பானதாகும். ICCPRஇன் உறுப்புரை 20 (2)இனால் கருதப்படுகின்ற நடவடிக்கைகள் பின்வருவதைக் கொண்டுள்ளதாக அது விளக்கமளிக்கின்றது:

> உறுப்புரைகள் 18 மற்றும் 27 ஆகியவற்றினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகளை நிறைவேற்றுவதற்கு மதச் சிறுபான்மையினர்களினதும், வேறு மதக் குழுக்களினதும் உரிமைகளின் மீறலுக்கு எதிராகவும், இக் குழுக்களை நோக்கி நடத்தப்படுகின்ற வன்முறையின் அல்லது அடக்குமுறை அட்டூழியத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் முக்கியமான பாதுகாப்புகள்.[17]

இவ்வாறாக, மதரீதியில் செயல்நோக்கமளிக்கப்பட்டுள்ள வன்முறையின் செயற்பாடுகளிலிருந்து மதச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பது தொடர்பில் திட்டவட்டமான கடப்பாடொன்றை அரசாங்கம் கொண்டுள்ளது. இந்தக் கடப்பாட்டின் அங்கமாகவே வெறுப்பு உரையைத் தடைசெய்வது நோக்கப்படுகின்றது. வெறுப்பு உரையின் சர்வதேசத் தரங்களிலிருந்து சில நீதிபரிபாலன எல்லைகள் வழிபிறழ்கின்றன. இருந்தும், வன்முறையைத் தூண்டுகின்ற உரை மீது தடைகளைப் பேணுகின்றன. எனினும், வன்முறையைத் தூண்டுவதற்கு உத்தேசத்தைக் கொண்டுள்ளதும்,

[15] Also see CERD Committee, General Comment No. 15 of 23 March 1993.
[16] See for example, *Faurisson v. France*, UN Human Rights Committee, Communication No. 550/1993 (1996), individual opinion of Elizabeth Evatt and David Kretzmer, co-signed by Eckart Klein, at para.9.
[17] CCPR General Comment No. 22, *op. cit.* at para.9. Article 27 of the ICCPR provides: 'In those States in which ethnic, religious or linguistic minorities exist, persons belonging to such minorities shall not be denied the right, in community with the other members of their group, to enjoy their own culture, to profess and practise their own religion, or to use their own language.'

அத்துடன் அனேகமாகக் கொண்டுள்ளதுமான உரை ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பின் கீழ் பாதுகாக்கப்படுகின்றது.[18]

வன்முறையின் செயற்பாடுகளிலிருந்து சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய துல்லியமான நடவடிக்கைகள் இல.22 பொதுக் கருத்தில் தெளிவாக உச்சரிக்கப்படவில்லை. எனவே, ஒப்பந்தத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்குப் பயனை வழங்குவதற்காக அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், பொருத்தமான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கும் அரசாங்கங்கள் மீது பொதுவான கடப்பாடொன்றை இடுகின்ற ICCPRஇன் உறுப்புரை 2(2)க்கு மீளத்திரும்புவது பயனுள்ளதாக இருக்கலாம். உரிமைகள் மீறப்பட்டவர்களுக்கு 'பயனுறுதிவாய்ந்ததொரு தீர்வை' வழங்குவதற்கு மேலும் கடப்பாடொன்றை அரசாங்கம் கொண்டுள்ளது என ஒப்பந்தத்தின் உறுப்புரை 2(3) நிர்ணயிக்கின்றது.

இவ்வாறாக, வன்முறை இடம்பெறும் போது, அதற்குப் பயனுறுதிவாய்ந்ததாக பதிலிறுப்பதற்கும், எதிர்காலத்தில் வன்முறை இடம்பெறுவதிலிருந்து *தடுப்பதற்குமான* கடப்பாடுகளை அரசாங்கம் கொண்டுள்ளது. இந்தக் கடப்பாடுகள் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் இல.31 பொதுக் கருத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. வன்முறைக்கு பதிலிறுப்பதைப் பொறுத்தளவில், 'பயனுறுதிவாய்ந்த தீர்வு' ஒன்றை வழங்குவதற்கான அரசாங்கத்தின் கடப்பாடு பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது என பொதுக் கருத்து விளக்கமளிக்கின்றது:[19]

அ. நடைமுறையிலான வன்முறைகளை இடைநிறுத்துதல்
ஆ. உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் உரிமைகளின் மீறல்களின் வலியுறுத்தலைக் கவனத்திற்கு எடுப்பதற்காகப் பொருத்தமான நீதித்துறை மற்றும் நிருவாகப் பொறிமுறைகளைத் தாபித்தல்
இ. சுதந்திரமானதும், பாரபட்சமற்றதுமான உறுப்புக்களின் ஊடாக, வன்முறைகளின் சார்த்துரைகளை உடனடியாகவும், முழுமையாகவும் அத்துடன் பயனுறுதிவாய்ந்ததாகவும் விசாரித்தல்
ஈ. நஷ்டஈடு, பறிக்கப்பட்ட உரிமையை மீளளித்தல், புனர்வாழ்வு மற்றும் பகிரங்கமாக மன்னிப்பு கோருதல் போன்ற 'திருப்தியின் நடவடிக்கைகள்', பொது நினைவுச் சின்னங்கள், மீள்-நடக்காதிருப்பதற்கான உத்தரவாதங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டங்களிலும், நடைமுறைகளிலும் மாற்றங்கள் ஆகியவற்றை இழப்பீட்டினை (பாதிக்கப்பட்டவர்களுக்கு) வழங்குதல் உள்ளடக்கலாம்.

வன்முறையைத் தடுப்பது தொடர்பில், பின்வருவனவற்றைப் பொதுக் கருத்து குறிப்பிடுகின்றது: 'ஒப்பந்தத்தின் மீறலொன்று மீள-இடம்பெறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ...... கடப்பாடொன்று இன்றி, ஒப்பந்தத்தின் நோக்கங்கள் தோற்கடிக்கப்பட வேண்டும்,' ICCPRஇன் உறுப்புரை 2(2)இன் கீழான கடப்பாடு 'தகுதியற்றது என்பதுடன், உடனடியாக விளைபயனைக் கொண்டது' என்றும் 'இக் கடப்பாட்டுடன் இணங்குவதற்கு தவறுகின்ற போது, அது அரசியல், சமூக, கலாசார அல்லது பொருளாதாரக் கரிசனைகள் ஆகியவற்றுக்கான மேற்கோளினால் நியாயப்படுத்தப்பட முடியாது' என்றும் அது தெளிவுபடுத்துகின்றது.[20]

ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் பொதுவான கருத்துரைகளுக்குப் புறம்பாக, மத வன்முறையைத் தடுப்பது மீது சர்வதேசத்திலான 'சிறந்த நடைமுறைகள்' எவை என்பது மீது பகுத்தாய்கின்ற இணக்கப்பாடு இல்லை. எனினும், தோன்றுகின்ற சிறந்த நடைமுறைகளின் சில எடுத்துக்காட்டினைப் பிராந்திய வழிகாட்டல்கள் வழங்கக்கூடும். உதாரணமாக, மதத்தின் அல்லது நம்பிக்கையின் மேம்படுத்தலினதும், பாதுகாப்பினதும் மீது ஒரு தொகுதியைக் கொண்ட வழிகாட்டல்களை ஐரோப்பிய ஒன்றியம் விருத்திசெய்துள்ளது.[21] ICCPRஇலும், ஐ.நா. மனித

[18] See *Chaplinsky v. New Hampshire* (1942) 315 U.S. 568; *Brandenburg v. Ohio* (1969) 395 U.S. 444; *R.A.V. v. City of St. Paul* (1992) 505 U.S. 377. For a compelling critique of U.S. tolerance of certain types of hate speech, see Jeremy Waldron, *The Harm in Hate Speech* (2012).
[19] UN Human Rights Committee (HRC), General Comment No. 31 [80], The nature of the general legal obligation imposed on States Parties to the Covenant, 26 May 2004, CCPR/C/21/Rev.1/Add.13, at paras.15-16.
[20] *Ibid.* at para.14.
[21] Council of the European Union, *EU guidelines on the promotion and protection of freedom of religion or belief* (2013).

உரிமைகள் குழுவின் பொதுக் கருத்துக்களிலும் முன்வைக்கப்பட்டுள்ள தரங்களை வழிகாட்டல்கள் மீள்வலியுறுத்துகின்றன. 'மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உத்தரவாதமளிக்குமாறும், அவர்களது மதத்தின் அல்லது நம்பிக்கையின் மீதான அடிப்படையில், நபர்களுக்கு எதிரான வன்முறையின் சகல செயல்களை தண்டிக்குமாறும்' அரசாங்கங்களுக்கு வழிகாட்டல்கள் ஊக்கமளிக்கின்றன.[22] வன்முறையின் சகல செயல்களைக் *கண்டிக்குமாறும்,* குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் கொண்டு வருமாறும் வழிகாட்டல்கள் ஊக்குவிக்கின்றன[23] (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது). இந்த சேர்க்கப்பட்ட அம்சம் கடப்பாடொன்று அல்ல. ஆனால், மத வன்முறை எவ்வாறு வெறுப்பூட்டுகின்றது என்பதைச் சரியாக வலியுறுத்துவதில் மிகவும் சுறுசுறுப்புசார்ந்த வகிபங்கொன்றை அரசாங்கங்கள் எடுப்பதற்கான ஒரு வழிகாட்டலாகும். பகிரங்கக் கருத்தாடலை உருக்கொடுப்பதிலும், மத இணைவாழ்வினை முன்னேற்றுவதிலும் அரசாங்கம் வகிக்க வேண்டிய முக்கியமான வகிபங்கினை பகிரங்கக் கண்டனம் மீதான வலியுறுத்தல் பிரதிபலிக்கின்றது.

வன்முறையைக் கண்டனம் செய்வது இன்னுமே மிகவும் எதிர்விளைவிலானது என்பதுடன், வன்முறையாக உயர்ச்சியடைவதிலிருந்து கெடுபிடிநிலையைத் தடுப்பதற்கும் அது போதுமானதல்ல. இதற்குப் பிந்திய கண்டனத்திற்கு வெகு அப்பால், கருத்தாடலை உருக்கொடுப்பதில் அரசாங்கத்தின் வகிபங்கு நீடிக்க வேண்டும். இதன் பிரகாரம், வன்முறைக்கும், சமூக கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகளுக்கும் இடையிலான உறவு, ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறாக, வன்முறையில் ஆதாரக் காரணிகளைக் கவனத்திற்கெடுப்பது தடுப்பதற்கு முக்கியமானது என்பதுடன், 'சர்வ-நம்பிக்கையிலான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்' எனப் பதப்படுத்தப்பட்டுள்ள கடினமான கட்டத்தையும் அமைக்கின்றது. இலங்கையில் சர்வ-நம்பிக்கையிலான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் முன்னெடுப்புகள் மீது பயனுள்ள பயிற்சிக் கையேடு ஒன்றை ஐக்கிய அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட தாபனமொன்றான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான கருணா நிலையம் (Karuna Center for Peacebuilding) விருத்திசெய்துள்ளது.[24] சர்வ-நம்பிக்கையிலான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மத வன்முறையைத் தடுத்தல் ஆகியன தொடர்பிலான சில சிறந்த நடைமுறைகள் மீதான அடிப்படையைக் கையேடு கொண்டுள்ளது. ஒரு தொகையிலான சாத்தியமான தலையீடுகளை ஒன்றணைக்கின்ற மும்மடங்கிலான நடைமுறையொன்றாக சமாதானத்தைக் கட்டியெழுப்புதலை அது உருவாக்குகின்றது:[25]

1. சமூகரீதியில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்
    - அ. பரஸ்பர புரிந்துணர்வுக்கான கலந்தாய்வுகள்
    - ஆ. சகிப்புத்தன்மைக்கும், நல்லிணக்கத்திற்குமான நிகழ்ச்சித்திட்டங்கள்
    - இ. மனவதிர்ச்சிக்கும், சமூகக் குணப்படுத்தலுக்குமான தலையீடுகள்
    - ஈ. சமாதானக் கல்வி

2. பொருளாதாரரீதியில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்
    - அ. பொருளாதாரத் தூண்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்
    - ஆ. உட்கட்டமைப்பின் மீள்நிருமாணம்
    - இ. பொருளாதார முயற்சிகள் ஊடாக சமாதான உறவுகளை மேம்படுத்தல்

3. அரசியல்ரீதியில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்
    - அ. அரசியலமைப்புச் சீர்திருத்தம்
    - ஆ. இடைக்கால நீதி
    - இ. ஜனநாயக அரசியல் நிறுவனங்களை உருவாக்குதல்
    - ஈ. மனித உரிமைகளின் பாதுகாப்புக்கான பொறிமுறைகள்

---

[22] *Ibid.* at para.29.

[23] *Ibid.* at para.24.

[24] Karuna Center for Peacebuilding, A Trainers Guide to Inter-faith Peacebuilding in Sri Lanka, at http://www.karunacenter.org/uploads/9/6/8/0/9680374/__karunacenter-_inter-faith-tot-guide-2013.pdf.

[25] *Ibid.* at 7. It is noted that the manual has particular relevance to this study, as it was developed developed over the course of implementing a programme of inter-faith peace building in Trincomalee and Batticaloa Districts, and the Padaviya Division in the Anuradhapura District.

அத்தகைய நடவடிக்கைகள் சர்வ-நம்பிக்கை மோதலின் ஆதாரக் காரணிகளைக் கவனத்திற்கெடுப்பதற்கும், மத வன்முறையைத் தடுப்பதற்கும் அவசியமான தலையீடுகளின் வகைகளைப் பிரதிபலிக்கின்றன. இலங்கையில் மத வன்முறை தோன்றுகின்ற சமூக-கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகள் ஆகியவற்றுக்கு இந் நடவடிக்கைகள் நேர்த்தியாக ஒத்திசைகின்றன. இவ்வாறாக, இந்த ஆய்வின் முடிவுரைப் பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ள மிகவும் குறிப்பான தலையீடுகளை வடிவமைப்பதில் பயனுள்ள ஆரம்பப் புள்ளியொன்றை அவை வழங்க முடியும்.

### *1.2 அரசியலமைப்புத் திட்டவரை*

சர்வதேச நியமங்களுடன் இலங்கையில் மதச் சுதந்திரம் தொடர்பான முழுமையான அரசியலமைப்பு வரைச்சட்டம் இணங்குவதாகத் தோன்றுகின்றது. எண்ணத்தினதும், மனசாட்சியினதும் மற்றும் மதத்தினதும் சுதந்திரத்திற்கு, இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 10 உத்தரவாதமளிக்கின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 15இல் பின்னர் விவரிக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டுப்பாடுகளுக்கு முற்றுமுழுதான உரிமையொன்றாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது. மீஉயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நீதிபரிபாலன எல்லையினால் இந்த உரிமையை வினைப்படுத்தல் தெளிவாகத் திட்டமிடப்படுகின்றது. விடயம் மீதான சட்டவியல் ஓரளவுக்கு பற்றாக்குறையானது என்ற போதிலும், *பிரேமலால் பெரேரா எதிர் வீரசூரிய*[26] வழக்கில் நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> மதத்தில் வேர்விட்டுள்ள நம்பிக்கைகள் பாதுகாக்கப்படுகின்றன. மத நம்பிக்கையொன்று பாதுகாக்கப்படுமுகமாக தர்க்கரீதியானதாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, இசைவானதாக அல்லது புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்க வேண்டியது அவசியமல்ல. வலியுறுத்தலானது செயல்நோக்கில் தெளிவாக மதத்திலானது அல்ல என்றால் அன்றி, பாதுகாப்பினைக் கோருகின்ற நபர் தனது குறிப்பிட்ட நம்பிக்கையில் ஆணைகளைச் சரியாக மனவுணர்வினைக் கொண்டுள்ளாரா என்பதை விசாரிப்பதற்கு நீதித்துறைப் பணிக்குள்ளும், நீதித்துறை தகுதிக்குள்ளும் வரமாட்டார். வேத நூல்களின் பொருள் விளக்கத்தின் மத்தியஸ்தை நீதிமன்றங்கள் வகிக்கவில்லை என்பதுடன், மத நம்பிக்கைகளை கூறுபோடுவதையும் பொறுப்பேற்கக்கூடாது.

தேசியப் பாதுகாப்பு நிதியத்தை நோக்கி கட்டாயமான பங்களிப்பொன்றுக்கு நேர்மையான எதிர்ப்பினை வழக்கு கையாண்டது. நேர்மையான எதிர்ப்பினை வழங்குவதற்கு கழிப்பினை அறிவூட்டுவதற்காக சுற்றறிக்கை தவறிவிட்டதாகவும், அது அரசியலமைப்பின் உறுப்புரை 10இன் கீழ் தனது அடிப்படை உரிமைகளை மீறிவிட்டதாகவும் அரசாங்கப் புகையிரதத் திணைக்களத்தின் பௌத்த ஊழியர் ஒருவரான மனுதாரர் வாதிட்டார். சுற்றறிக்கையுடன் மனுதாரர் இணங்குவது மீது சுமத்தல் எதுவும் செய்யப்பட முடியாது என்பதை நீதிமன்றம் அங்கீகரித்தது. இருந்தும், இணங்காமைக்கான ஏதேனும் அபராதத்தைச் சுற்றறிக்கை சுமத்தவில்லை என்பதுடன், இதன் பிரகாரம் ஏதேனும் உரிமையை மீறவில்லை என்ற காரணங்கள் மீது விண்ணப்பத்தை அது முடிவாக தள்ளுபடி செய்தது. எனினும், மதத்தின் சுதந்திரம் முற்றுமுழுதானது என்ற நீதித்துறை அங்கீகாரத்தின் முக்கியமான உதாரணமொன்றாக தீர்ப்பு தொடர்ந்துமிருக்கின்றது.

இதனிடையே, மதத்தின் காரணங்கள் மீது பாகுபாடுகாட்டப்படக்கூடாது என்பதற்கான உரிமையை அரசியலமைப்பின் உறுப்புரை 12 உத்தரவாதமளிக்கின்றது.[27] உறுப்புரை 12(2) பின்வருமாறு குறிப்பிடுகின்றது: இனம், மதம், மொழி, சாதி, பால்நிலை, அரசியல் கருத்து, பிறந்த இடம் அல்லது ஏதேனும் அத்தகைய காரணங்கள் ஆகியவற்றின் காரணங்கள் மீது எந்தப் பிரஜையும் பாகுபாடுகாட்டப்படலாகாது. மேலும், உறுப்புரை 12(3) பின்வருமாறு குறிப்பிடுகின்றது: 'மதத்தின் காரணங்கள் மீது.... தனது சொந்த மதத்தின் வழிபாட்டிடங்கள்..... தொடர்பில் ஏதேனும் குறைபாடு, பொறுப்பு, கட்டுப்பாடு அல்லது நிபந்தனை ஆகியவற்றுக்கு எந்த நபரும் உட்படலாகாது.'[28]

அரசியலமைப்பின் உறுப்புரை 14(1) (உ) பின்வருமாறு குறிப்பிடுகின்றது: 'வழிபாட்டில், ஆசாரத்தில் அனுஷ்டானத்தில் அத்துடன் போதனையில் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை ஒன்றில் பொதுவிடத்தில் அல்லது தனிப்பட்ட இடத்தில் ஒன்றில் தன்பாட்டில் அல்லது ஏனையோருடன்

[26] [1985] 2 Sri.L.R. 177.

[27] Article 12(2) Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka 1978.

[28] *Ibid.* Article 12(3).

இணைந்து வெளிக்காட்டுவதற்கான சுதந்திரத்திற்கு ஒவ்வொரு பிரஜையும் உரித்தினைக் கொண்டுள்ளார்'. தமது மத நம்பிக்கைகளை வெளிக்காட்டுவதற்கு பிரஜைகளின் உரிமைகளை இக் குறிப்பிட்ட ஏற்பாடு உருக்கொடுக்கின்றது. எனினும், உறுப்புரை 10க்கு மறுதலையாக, உறுப்புரை 14(1)(உ)இல் அடங்கியுள்ள உரிமைகள் பின்வரும் அடிப்படையின் மீது உறுப்புரை 15(7)இனால் கட்டுப்படுத்தப்படுகின்றது.

> தேசியப் பாதுகாப்பு, பொதுசன ஒழுங்கு, பொதுசன சுகாதாரத்தின் அல்லது ஒழுக்கத்தின் பாதுகாப்பு அல்லது ஏனையோரின் உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் உரிய அங்கீகாரத்தையும், மரியாதையையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தை அல்லது ஜனநாயகச் சமூகமொன்றில் பொதுவான சேமநலனின் நியாயமான தேவைப்பாடுகளை நிறைவேற்றுதல்.[29]

மத நம்பிக்கையொன்றை ஏற்றுக்கொள்வதற்கும், தாங்கிக்கொள்வதற்குமான சுதந்திரத்திற்கும், மத நம்பிக்கையொன்றை வெளிக்காட்டுவதற்கான சுதந்திரத்திற்கும் இடையிலான வேறுபாடானது அரசியலமைப்பின் உறுப்புரை 9ஐக் கையாளும் சட்டவியலில் உறுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தத்திற்கு 'முதன்மையான இடத்தை' உறுப்புரை 9 வழங்கியுள்ளதுடன், *உறுப்புரைகள் 10 மற்றும் 14(1)(உ) ஆகியவற்றினால் சகல மதங்களுக்கும் உரிமைகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை,* புத்த சாசனத்தைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும் அரசாங்கம் மீது கடமையொன்றையும் இட்டுள்ளது (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது). இது தொடர்பில், சகல மதங்களுக்கும் இடையிலான ஒற்றுமை இன்னுமே தொழில்நுட்பரீதியில் உறுப்புரை 9இன் கீழ் பாதுகாக்கப்படுகின்றது. இருந்தும், உறுப்புரையின் நீதித்துறையிலான பொருள்விளக்கம் வேற்றுமையின் இல்லாமையொன்றை முன்வைத்தது. *இலங்கையின் மென்ஸின்ஜெனில் தூய பிரான்சிஸ்கின் மூன்றாவது கட்டளையின் தூய சிலுவையின் சகோதரி இமாகுலேட் ஜோசப்பினதும்,* 80 *கற்பித்தல் சகோதரிகளினதும்* வழக்கில் இந்த வேற்றுமையின் இல்லாமை எடுத்துக்காட்டப்பட்டது (2004). கத்தோலிக்க மதக் கட்டளையொன்றை ஒன்றிணைப்பதற்காகப் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட தனி உறுப்பினரின் சட்டமூலமொன்றுக்கான சவால் ஒன்றை வழக்கு சம்பந்தப்படுத்தியது. இதன் பின்னர் அரசியலமைப்பின் உறுப்புரை 9உடன் சட்டமூலம் முரண்பட்டுள்ளது என்ற அடிப்படையின் மீது மீஉயர் நீதிமன்றத்தில் சவால்விடுக்கப்பட்டது. வாசகம் 3இன் (சட்டமூலத்தின்) பிரகாரம் ஏற்றமைவாகக் கொள்ளப்பட்டவாறு கிறிஸ்தவ மதத்தைப் பெருக்குவதும், பரப்புவதும் பௌத்த மதத்தின் அல்லது *புத்த சாசனத்தின்* உளதாம்தன்மையைப் பலவீனப்படுத்தும் என்பதால், அனுமதிக்கத்தக்கதல்ல என நீதிமன்றம் தீர்ப்பளித்தது (அப்படியே).

இலங்கையில் முழுமையான அரசியலமைப்புத் திட்டவரை மதத்தின் சுதந்திரத்தை ஆதரிப்பதாகத் தோன்றுகின்றது. அதேவேளை, அது அந்தச் சுதந்திரத்தின் எடுத்துக்காட்டல் தொடர்பிலான எல்லைகள் மீது ஓரளவுக்கு இருமனப்போக்கு கொண்டதாக விளங்குகின்றது. உதாரணமாக, மதத்தைப் பெருக்குவது சில அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட பொருள்விளக்கத்தின் உண்மைநிலையினால் இலங்கையில் சகல மதங்களுக்கும் சமமாக வழங்கப்பட்ட உரிமையொன்றல்ல. எனவே, மதச் சுதந்திரத்திற்கான நீதித்துறையின் அணுகுமுறை மீதான பின்காட்சித்தோற்றம் ஓரளவுக்கு பரவலானதாகும். பின்காட்சித்தோற்றத்தின் ஒரு அந்தத்தில், தமது மதத்தைப் பெருக்குவதற்கு தனிப்பட்டவர்களின் சாதாரண உரிமைகளுக்கு அப்பால் பௌத்த மதத்தைப் பேணுவதற்கு அரசியல்ரீதியில் அரசாங்கம் கட்டுப்பட்டுள்ளது என்பதே அது கருத்தினைக் கொண்டுள்ளது. மறு அந்தத்தில், சிறுபான்மை மதங்களைப் பின்பற்றுதல் உளதாம்தன்மை சார்ந்த நிலையொன்றில் அதாவது சில நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கும், தாங்கிக்கொள்வதற்கும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனினும், தமது மதத்தைப் பெருக்குவதற்கு சமவளவில் பாதுகாக்கப்பட்ட உரிமைகளைத் தாங்கிக்கொள்வதாகத் தோன்றவில்லை.

இதனிடையே, 'ஏனையோரின் உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் உரிய அங்கீகாரத்தையும், மரியாதையையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக' உட்பட, சில குறிப்பான காரணங்கள் மீது சுதந்திரமான உரையை அரசியலமைப்பின் உறுப்புரை 15(7) கட்டுப்படுத்துகின்றது. இச் சூழமைவில், மதத்தின் சுதந்திரத்தை சுதந்திரமான உரை மீறினால் அல்லது பொதுசன ஒழுங்கின் பராமரிப்புக்கு ஊறுவிளைவிக்கின்ற இனவாத வன்முறையைத் தூண்டினால் அந்த உரை கட்டுப்படுத்தப்படலாம். எனவே, அனுமதிக்கக்கூடிய தோற்றப்பாட்டின் கட்டுப்பாடுகளினுள் மதச் சுதந்திரம் வைக்கப்பட்டால், உரையினதும், கருத்து வெளிப்பாட்டினதும் சுதந்திரத்தை விலக்கிவைத்துவிட்டு, மதச் சுதந்திரத்திற்கு பொருள் விளக்கமளிக்கப்படலாம். மேலும், பௌத்த

[29] *Ibid.* Article 15(7).

மதத்தை விட, மதத்தின் அல்லது நம்பிக்கைகளின் விடயத்தில், மதச் சுதந்திரத்தின் அரசியலமைப்புரீதியில் பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் அம்சமாக மதத்தைப் பரப்புதல் தோன்றவில்லை.

### *1.3 மத வன்முறையினதும், வெறுப்பு உரையினதும் மீதான சட்டங்கள்*

ஒன்றில் மத உணர்வுகளைக் காயப்படுத்தும் அல்லது இனவாத ஒற்றுமையின்மையைத் தூண்டும் உரையின் சில வகைகளின் பயன்பாட்டைத் தடைசெய்யும் சட்டத்துடன் இலங்கையின் சட்ட முறைமை பூரணத்துவமானதாகும். உதாரணமாக தண்டனைச் சட்டக்கோவை ஒரு வரிசையிலான அத்தகைய குற்றங்களை உள்ளடக்கியுள்ளது:

1. பிரிவு 290: ஏதேனும் வகுப்பைக் கொண்ட மதத்தை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் வழிபாட்டுத் தலமொன்றை சேதப்படுத்துதல் அல்லது மாசுபடுத்துதல்
2. பிரிவு 290ஆ: பிரிவு 290: ஏதேனும் வகுப்பைக் கொண்ட மதத்தை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் வழிபாட்டுத் தலங்கள் தொடர்பில் செயற்படுதல்
3. பிரிவு 291: மதரீதியில் ஒன்றுகூடுதலைக் குழப்புதல்
4. பிரிவு 291அ: மத உணர்ச்சிகளைக் காயப்படுத்துவதற்காக, வேண்டுமென்றேயான நோக்கத்துடன் வார்த்தைகளை வெளிவிடுதல்
5. பிரிவு 291ஆ: ஏதேனும் வகுப்பின் மதத்தை அல்லது மத நம்பிக்கைகளை இழிவுபடுத்துவதன் மூலம், அதன் மத உணர்ச்சிகளைத் தூஷிக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றேயானதும், வன்மம் பாராட்டுகின்றதுமான செயற்பாடுகள்

மேலதிகமாக, சமாதானத்தின் மீறல், உடல்ரீதியிலான தாக்குதல்கள், பயமுறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல் ஆகியன உட்பட மதக் குழுக்கள் மீது சில வகையிலான தாக்குதல்களுக்கு பின்வரும் சட்டவாக்க ஏற்பாடுகள் நேரடியான தொடர்பினைக் கொண்டுள்ளன:

> பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் S.79(2): அமைதியின் மீறலொன்றைத் தூண்டுகின்ற நோக்கத்துடன் அச்சுறுத்துகின்ற, தூஷிக்கின்ற அல்லது அவமதிக்கின்ற சொற்களை அல்லது நடத்தையை ஏதேனும் பொது இடத்தில் அல்லது ஏதேனும் பொதுக் கூட்டத்தில் ஏதேனும் நபர் பயன்படுத்தினால் அல்லது அதனால் அமைதியில் மீறலொன்று அனேகமாக நிகழ்ந்தால் இப் பிரிவின் கீழ் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக விளங்க வேண்டும்.

> தண்டனை சட்டக்கோவையின் S.483: ஒருவரின் உடலுக்கு, கௌரவத்திற்கு அல்லது ஆதனத்திற்கு அல்லது அந் நபருக்கு எச்சரிக்கையை விளைவிக்கும் நோக்கத்துடன் அந் நபர் அக்கறை கொண்டுள்ள ஏதேனும் ஒருவரின் உடலுக்கு அல்லது கௌரவத்திற்கு ஏதேனும் காயத்துடன் அவரை யாரேனும் ஒருவர் அச்சுறுத்தினால் அல்லது அவர் சட்டபூர்வமாகச் செய்வதற்கு கட்டுப்படாத ஏதேனும் செயற்பாட்டினைச் செய்வதற்கு அந் நபர் காரணகர்த்தாவாக இருந்தால் அல்லது அத்தகைய அச்சுறுத்தல் நிறைவேற்றப்படுவதைத் தவிர்க்கும் வழிவகைகளாக அந் நபர் சட்டபூர்வமாகச் செய்வதற்கு உரித்தான ஏதேனும் செயற்பாட்டினைச் செய்வதற்கு தள்ளிவைத்தால், அவர் குற்றவியல் அச்சுறுத்தலை இழைக்கின்றார்.

> குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின் S.81: நீதவான் மன்றொன்றின் நீதிபரிபாலனத்தின் உள்ளூர் எல்லைகளினுள் அமைதியின் மீறலொன்றை நபர் ஒருவர் அனேகமாக இழைக்கின்றார் அல்லது அமைதியின் மீறலொன்று அனேகமாக இடம்பெறக்கூடிய ஏதேனும் தவறான செயற்பாட்டினைச் செய்கின்றார் அல்லது நபர் ஒருவர் அத்தகைய எல்லைகளினுள் அமைதியின் மீறலொன்றை அனேகமாக இழைக்கின்றார் அல்லது அத்தகைய எல்லைகளுக்கு அப்பால் ஏதேனும் இடத்தில் மேலே சொல்லப்பட்டவாறு ஏதேனும் தவறான செயலைச் செய்கின்றார் என்ற தகவலை நீதவான் ஒருவர் பெறுகின்ற போதெல்லாம், இதனகத்துப் பினனர் வழங்கப்பட்டுள்ள தன்மையில், நிர்ணயிப்பதற்கு நீதிமன்றம் பொருத்தமானது என நினைக்கும் விதத்தில் இரு வருடங்களுக்கு மேற்படாத அத்தகைய காலத்திற்கு அமைதியை வைத்திருப்பதற்கு பிணையொன்றை பிணையாளிகளுடன் அல்லது அவர்கள் இன்றி நிறைவேற்றப்படுவதற்கு தான் ஏன் கட்டளையிட முடியாது என்ற காரணத்தைக் குறிப்பிடுமாறு அத்தகைய நபரை நீதவான் கோர முடியும்.

இதனிடையே மதச் சுதந்திரத்திற்கு கெடுதலான சில வகைகளைக் கொண்ட உரையைத் தடைசெய்வதற்கு பிரயோகிக்கப்படக்கூடிய ஏற்பாடுகளை சில வேறு அதிகாரச்சட்டங்கள் கொண்டுள்ளன. 'எந்த ஒரு நபரும் யுத்தத்தைப் பெருக்கக்கூடாது அல்லது பாகுபாட்டுக்கு, விரோதத்திற்கு அல்லது வன்முறைக்கு ஊக்குவிப்பினைக் கொண்டுள்ள தேசிய, இனவாத அல்லது மத வெறுப்பினை ஆதரித்து வாதாடக்கூடாது' என ICCPR அதிகாரச்சட்டத்தின் பிரிவு 3(1),

2007இன் இல.27 குறிப்பிடுகின்றது. மேல் நீதிமன்றத்தின் நீதிபரிபாலன எல்லையினுள் குற்றம் வருவதுடன், குற்றத்தைச் சம்பந்தப்படுத்தும் விசாரணைகளுக்கு நீதிமன்றத்தின் ஆகக்கூடுதலான முன்னுரிமையும் வழங்கப்படுகின்றது.

மேலும், 1979இன் இல.48, பயங்கரவாதத் தடுத்தல் சட்டத்தின் [Prevention of Terrorism Act, No. 48 of 1979 (PTA)] பிரிவு 2(1)(எ) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> நபர் ஒருவர் ஒன்றில் பேச்சிலான அல்லது வாசிக்கப்படுவதற்கு உத்தேசத்திலான சொற்களினால், சமிக்ஞைகளினால் அல்லது கட்புலப் பிரதிநிதித்துவங்களினால் அல்லது வேறுபட்ட சனசமூகங்களுக்கு அல்லது மதக் குழுக்களுக்கு இடையில் வன்முறையின் செயற்பாடுகளை, இனரீதியான அல்லது இனவாத ஒற்றுமையின்மையை அல்லது பகைமையின் உணர்வுகளை அல்லது விரோதத்தை விளைவிப்பதை உத்தேசமாகக் கொண்டிருந்தால்..... குற்றமொன்றுக்கு குற்றவாளியாக விளங்க வேண்டும்.

சர்வதேசச் சட்டத்துடன்[30] அதன் இணக்கமின்மைக்காக PTA விமர்சிக்கப்பட்டதுடன், அதிகாரச் சட்டத்தை மதிப்பாய்வதற்கும், மீளப்பெறுவதற்கும் அரசாங்கம் அண்மையில் அர்ப்பணிப்புக்களைச் செய்தது.[31] ஏதேனும் நிகழ்வில், வெறுப்பு உரையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருகின்ற நோக்கத்திற்காக பிரிவு 2(1)(எ) திட்டவட்டமாகப் பயன்படுத்தப்படவில்லை. புதிலாக, இப்பிரிவு இன்னொரு வகையிலான பிரச்சனையை உருவாக்குகின்றது. ஏனெனில் அது இனத்துவரீதியிலான சிறுபான்மையினரின் உறுப்பினர்களை - அனேகமாக சிறுபான்மையினரை நோக்கி அரசாங்கத்தின் கொள்கைகளையிட்டு விமர்சிக்கின்றவர்களைத் திட்டவட்டமாக பயன்படுத்தியுள்ளது. உதாரணமாக, 2009இல், பின்வரும் வாக்கியங்களை எழுதியதற்காக இந்த ஏற்பாட்டின் கீழ் தமிழ் இதழியலாளரான ஜே.எஸ்.திசைநாயகம் தண்டிக்கப்பட்டார்: ‘ஏதேனும் பாதுகாப்பினை (தமிழ் சிவிலியன்களுக்கு) அரசாங்கம் வழங்கப்போவதில்லை என்பது ஓரளவுக்கு வெளிப்படையானதாகும். உண்மையில் கொலைகளின் பிரதான குற்றமிழைத்தவர்கள் அரசாங்க பாதுகாப்பு படையினரேயாவர்’ (அதே நிலையில்).[32] அக்கிரமங்களை இழைப்பதாக பெருந்தொகையிலான சிங்கள இராணுவத்தைக் குற்றஞ்சாட்டுவதன் மூலம், தமிழர்களுக்கு எதிராக சிங்கள வாசகர்களினால் வன்முறையின் செயல்களைத் தூண்டுவதற்கு அவர் முயன்றுள்ளார் என வழக்கு தொடர்ந்த தரப்பு வெற்றிகரமாக விவாதித்தது. முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களை விசாரிப்பது மீது அரசாங்கத்தின் செயலின்மையை விமர்சித்த முஸ்லிம் அரசியல்வாதியான அசாத் சாலியைக் கைது செய்வதற்காக 2013இல் இதே PTA ஏற்பாடு பின்னர் பயன்படுத்தப்பட்டது.[33] மறுதலையாக, 2014 ஜூனில், ‘இலங்கையில் முஸ்லிம்களின் முடிவு தனித்த சிங்கள நபர் ஒருவருக்குக் கூட வரக்கூடாது’ என வாக்குறுதியளித்த *பொது பல சேனவின்* [*Bodu Bala Sena* (BBS)] பொதுச் செயலாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.[34] இந்த உரையைத் தொடர்ந்து வெறுக்கத்தக்க அளுத்கம இனவாதக் கலவரங்கள் இடம்பெற்றதுடன், இதில் குறைந்தபட்சம் நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும், அண்ணளவாக நூறு பேர் காயமடைந்ததாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது.[35] இருந்தும், குழுவின் எந்த உறுப்பினர் மீதும் வழக்குத் தொடரப்படவில்லை.

எனவே, மதச் சுதந்திரத்துடன் அதன் சம்பந்தத்தினதும், பிரயோகத்தினதும் தொடர்பாக பாரிய சவால்களை இலங்கையின் சட்ட வரைச்சட்டம் எதிர்நோக்குகின்றது. ஒரு புறத்தில், மதத்தின் சுதந்திரத்தையும், மதச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதையும் சரியென ஊர்ஜிதப்படுத்தும்

---

[30] See Kishali Pinto-Jayawardena, Jayantha de Almeida Gunaratne and Gehan Gunatilleke, *The Judicial Mind: Responding to the Protection of Minority Rights,* Law & Society Trust (2014).

[31] UN Human Rights Council Resolution, ‘Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka’, adopted at the 30th Session of the UN Human Rights Council, 29 September 2015, A/HRC/30/L.29, at para.12.

[32] Pinto-Jayawardena *et al*, *op. cit*. at 243. The study reveals that the judiciary routinely convicted or dismissed the petitions of Tamil litigants who had been arrested and detained under the PTA. By contrast, public security jurisprudence is littered with a host of progressive judgements benefiting Sinhalese litigants.

[33] *Ibid*. at 263.

[34] See INFORM, Repression of Dissent in Sri Lanka (June 2014), at 3.

[35] Amnesty International, *Sri Lanka: Act now to prevent further bloodshed in anti-Muslim violence*, 17 June 2014, at http://www.amnesty.org/en/for-media/press-releases/sri-lanka-act-now-prevent-further-bloodshed-anti-muslim-violence-2014-06-17.

முன்னேற்றகரமான தீர்ப்புக்கள் அளவுக்கு மிஞ்சிய விதத்தில் அபூர்வமாகவே உள்ளது. மறுபுறத்தில், மதச் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கு கருத்தினைக் கொண்ட சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்கத்தை விமர்சிக்கும் சில சிறுபான்மையினருக்கு எதிராக தெரிவுரீதியில் பயன்படுத்தப்படுகின்றது. இதனிடையே, வெறுப்பு உரை தொடர்பில் குற்றமிழைத்தவர்கள் விலக்கீட்டுரிமையையும், அடுத்த பிரிவில் விளக்கமளிக்கப்பட்டுள்ளவாறு, அரசாங்க ஆதரவையும் அனுபவித்துள்ளனர். இந்தச் சாய்வான சட்ட வரைச்சட்டம் இனவாத உறவுகளைக் குறைத்து மதிப்பிட்டுள்ளதுடன், விலக்கீட்டுரிமையுடன் வன்முறைகளை மேற்கொள்வதற்கு மிதவாத குழுக்களுக்கு இடத்தையும் வழங்கியுள்ளது.

### *1.4 கொள்கை மற்றும் நிறுவனரீதியில் வரைச்சட்டம்*

மதத்தின் சுதந்திரத்தையும், மத ஒற்றுமையின் கருத்தினையும் இலங்கையின் கொள்கை வரைச்சட்டம் தெளிவாகப் பலப்படுத்துகின்றது. இது தொடர்பில் இரு ஆவணங்கள் தனிப்பட்ட விதத்தில் குறிப்பிடப்படுவதை வேண்டுகின்றன. ஏனெனில் கடந்த ஐந்து வருடங்களின் போது, இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை அர்ப்பணிப்புக்களை அவை வெளிப்படுத்துகின்றன.

முதலாவது, 2011-2015 மனித உரிமைகளின் பாதுகாப்புக்கும், மேம்படுத்தலுக்குமான தேசிய செயல் திட்டம் [National Action Plan for the Protection and Promotion of Human Rights 2011-2015 (NHRAP)] 2011இல் வெளியிடப்பட்டது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் ஐந்து வருடத் திட்டமொன்றை வகுத்தமைப்பதற்காக 2008இல் அதன் உலகளாவிய இடையீந்த நிகழ்வு மதிப்பாய்வின் [Universal Periodic Review (UPR)] போது, இலங்கையினால் தன்னிச்சையிலான வாக்கொன்றிலிருந்து NHRAP தோன்றியது. திட்டத்தை வகுத்தமைப்பதற்கும், அமுல்படுத்துவதற்குமான பணிக்கான ஆரம்ப குவியப்புள்ளி முகவராண்மையாக இடர் முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சு விளங்கியது. 2012இல் இலங்கையின் இரண்டாவது UPRஇன் போது, ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையின் தேசிய அறிக்கையின் பிரகாரம், 'ஆரம்பத்திலிருந்து NHRAPஐ வகுத்தமைப்பதில் பங்கெடுப்பதற்கு அரசாங்க குவியப்புள்ளிகளும், சிவில் சமூகப் பிரதிநிதித்துவமும் வரவழைக்கப்பட்டன'.[36]

மத வன்முறையைத் தடுப்பதற்கு நேரடியான தொடர்பினைக் கொண்ட வாக்களிப்புக்களை NHRAPஇன் முழுமையான விரிவெல்லை உள்ளடக்குகின்றது எனத் தோன்றவில்லை. இருந்தும், மதத்தின் சுதந்திரத்திற்குத் தொடர்பான NHRAPஇல் உள்ள பெருமளவு முக்கியமான வாக்களிப்புக்களும், குறிப்பான நேரடியான அமைச்சுக்களும் இந்த வாக்களிப்புக்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக இடப்பட்டன. உதாரணமாக, பாடசாலைகளில் மதக் கல்வியின் மிதமிஞ்சிய கட்டுப்பாடு பிரச்சனையொன்றாகத் திட்டத்தில் அடையாளங்காணப்பட்டது.[37] இது தொடர்பில், திட்டம் விடுவிக்கப்பட்டு மூன்று மாதங்களினுள் பொருத்தமான கல்விச் சுற்றறிக்கைகளை வழங்குவதன் மூலம், பாடசாலையில் மதத்தின் சுதந்திரம் அடைவதை உறுதிப்படுத்துவதற்காக நிருவாகரீதியிலான நடவடிக்கையை அறிமுகப்படுத்துவதற்கான வாக்களிப்பொன்றைத் திட்டம் உள்ளடக்கியிருந்தது. இந்த வாக்களிப்பினை நிறைவேற்றுவதற்கான பணி கல்வி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மதத்தின் காரணங்கள் மீது வேலைத்தலத்தில் பாகுபாட்டினை அகற்றுவதற்கான வாக்களிப்பே மதச் சுதந்திரத்திற்கான இன்னொரு சம்பந்தப்பட்ட வாக்களிப்பாகும். பாகுபாட்டினைக் கையாள்வதற்கு வாக்களிக்கப்பட்ட அதிகாரசபையொன்று இல்லாததினால் முக்கியமான பிரச்சனையொன்றாக தனியார் துறை முனைவுபடுத்தப்பட்டதுடன், NHRAP வெளியிடப்பட்டு ஆறு மாதங்களினுள் அத்தகையதொரு அதிகாரசபையைத் தாபிப்பதற்கான பணி நீதி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டது.[38]

இந்த வாக்களிப்புக்கள் இருந்த போதிலும், செயல் புள்ளிகளை அமுல்படுத்துவதற்கு ஒருங்கிணைப்பு உறுப்பொன்று நியமிக்கப்படவில்லை. உண்மையில் இடர் முகாமைத்துவ, மனித

[36] National report submitted in accordance with paragraph 5 of the annex to Human Rights Council resolution 16/21: Sri Lanka, A/HRC/WG.6/14/LKA/1, 10 August 2012, at para.10.

[37] Government of Sri Lanka, *The National Action Plan for the Protection and Promotion of Human Rights – 2011-2016*, item 11.

[38] *Ibid*, item 16.

உரிமைகள் அமைச்சு இடைநிறுத்தப்பட்டதுடன், அது முதல் NHRAPக்கு புதிய குவியப்புள்ளியொன்று அடையாளங் காணப்படவில்லை. எனவே, NHRAPஇன் கீழ் மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட வாக்களிப்புக்கள் இன்னுமே நிறைவேற்றப்படவில்லை.

இரண்டாவது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு [Lessons Learnt and Reconciliation Commission (LLRC)] 2011இல் வெளியிட்ட அதன் அறிக்கையில்,[39] சர்வ-நம்பிக்கை ஒற்றுமையின் பிரச்சனையை விஸ்தாரமாகக் கையாள்கின்றது. 'சகல சனசமூகங்கள் மத்தியில் மேலும் தேசிய ஐக்கியத்தையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்காக...... எடுக்கப்படுவதற்கு அவசியமான நிறுவனரீதியான, நிருவாகரீதியிலான மற்றும் சட்டவாக்க நடவடிக்கைகள்' மீது விசாரிப்பதற்கும், அறிக்கையிடுவதற்கும் குறிப்பபான ஆணையொன்றுடன் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.[40] 2012 ஜூலையில் வெளியிடப்பட்ட தேசிய செயல் திட்டமொன்றினுள் LLRCஇன் பரிந்துரைகள் ஒருங்கிணைக்கப்பட்டதுடன், இது நல்லிணக்கம் மீதான அரசாங்கத்தின் கொள்கையின் அவசியமான அங்கமொன்றாகவும் அமைந்தது.

சர்வ-நம்பிக்கை ஒற்றுமையினதும், மதச் சுதந்திரத்தினதும் பிரச்சனைக்கு பெருமளவு LLRC பரிந்துரைகள் தொடர்பானவையாகும்.

சர்வ-நம்பிக்கையிலான சகிப்பற்றதன்மையின் சம்பவங்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் கடுமையான எச்சரிக்கையிலான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும், அத்துடன் அத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தணிப்பதற்கு சகல முயற்சிகளை எடுக்க வேண்டும் என்றும் LLRC பரிந்துரைத்தது.[41] இந்தப் பரிந்துரையை அமுல்படுத்தும் பணி அப்போதைய புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சுக்கும் மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கும் ஒப்படைக்கப்பட்டது. அமுலாக்கத்தின் பொறுப்பு இப்போது தற்போதைய அரசாங்கத்தின் கீழுள்ள சமமான அமைச்சுக்களினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. 2013இலும், 2014இலும் சான்று பகன்றவாறு 2015இல் சான்று பகரப்படவில்லை என்ற அளவுக்கு மத வன்முறையின் உண்மையை வழங்குகையில் ஓரளவுக்கு பரிந்துரை அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இவ்வாய்வில் பின்னர் கலந்துரையாடப்பட்டவாறு, வன்முறையின் கடந்த காலச் செயல்களின் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு 2015 ஜனவரிக்குப் பிந்திய அரசாங்கம் மெதுவாகவே விளங்கியது.

இனத்துவம், மதம் மற்றும் இலக்கியம் ஆகியன தொடர்பிலான வெறுப்பு உரையையிட்டு கையாள்வதற்கு எச்சரிக்கையிலான சட்டங்களை இயற்றுவதற்கும், அவற்றைக் கடுமையாக வினைப்படுத்துவதற்கும் ஆணைக்குழு பரிந்துரை செய்தது.[42] இப் பரிந்துரையை அமுல்படுத்துவதற்கான பொறுப்பு ஜனாதிபதி செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் ஒழுங்குபடுத்தப்படும் தேசிய நிகழ்ச்சிகளின் போது, சகல இனத்துவக் குழுக்களின் உரிமைகளையும், பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்குமாறு சகல மாவட்டச் செயலகங்களுக்கும் அரசாங்க நிருவாக அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாக 2014 செப்ரெம்பரின் அரசாங்கத்தின் LLRC முன்னேற்ற அறிக்கை குறிப்பிட்டிருந்தது.[43] உண்மையில் ஒரு புதிய சட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது என 2015 ஜூனின் அரசாங்கத்தின் முன்னேற்ற அறிக்கை வலியுறுத்திய போதிலும், வெறுப்பு உரை மீது உண்மையான ஒரு புதிய சட்டவாக்கம் மீது முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை.[44] எனினும், வெறுப்பு உரையின் பிரச்சனையை நடைமுறையிலான சட்ட வரைச்சட்டம் போதியளவு கையாள்வதுடன், நடைமுறையில் சட்டங்களின் வினைப்படுத்தலுடன் பிரச்சனை சார்ந்துள்ளது என்பதைக் கவனத்திற்கெடுப்பதும் தொடர்பிலானதாகும்.

---

[39] *Report of the Commission of Inquiry on Lessons Learnt and Reconciliation* (November 2011) ('LLRC Report').
[40] *Ibid*, Clause V of the Warrant.
[41] *Ibid*. para.9.267.
[42] *Ibid*. para.9.283.
[43] Government of Sri Lanka, *National Plan of Action for the Implementation of LLRC Recommendations – Responsibilities by Thematic Area* (September 2014).
[44] Government of Sri Lanka, *National Plan of Action for the Implementation of LLRC Recommendations – Responsibilities by Thematic Area* (June 2015).

மேலதிகமாக, கட்டுப்பாடுகளின்றி அமைதியான நிகழ்ச்சிகளையும், கூட்டங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கான சுதந்திரத்தைச் சனசமூகத் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர் உட்பட மக்களுக்கு அரசாங்கம் உத்தரவாதமளிக்க வேண்டுமென LLRC பரிந்துரைத்தது.[45] இருந்தும், அமைதியான ஒன்றுகூடல்களுக்கு தடைகளின் எண்ணற்ற அறிக்கைகள் இருந்தன. INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையத்தின் கூற்றின் பிரகாரம், 2014இல் மட்டும் ஒன்றுகூடுவதற்கும், இணைந்திருப்பதற்குமான சுதந்திரத்தின் குறைந்தபட்சம் 84 மீறல்கள் இருந்துள்ளன.[46] அத்தகைய தாக்குதல்களின் தொடர்ச்சியினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, இந்தப் பரிந்துரை அமுல்படுத்தப்படவில்லை.

சிவில் சமூக நடவடிக்கையையிட்டும் தொடர்பான சில பரிந்துரைகளை LLRC முன்வைக்கின்றது. உதாரணமாக, அது மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் சர்வ-நம்பிக்கை நல்லிணக்க, சமாதானக் குழுக்கள் தாபிக்கப்படுவதைப் பரிந்துரைக்கின்றது. 'சர்வ-இன மற்றும் சர்வ-மத ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டு நடவடிக்கைகளின் அமுலாக்கத்தில் அடிமட்ட உள்ளீடுகளை வழங்குவதன் மூலம்' சுதந்திரமான முறைப்பாடுகள் பொறிமுறையொன்றின் பணிகளுக்கு ஆதரவளிப்பதே இக்குழுக்களின் பிரதான நோக்கமாகும்.[47] அத்தகைய குழுக்கள் இனிமேல்தான் நியமிக்கப்படவுள்ள அதேவேளை, பொலன்னறுவையில் பௌத்த பிக்குகளினதும், இந்து மத குருமார்களினதும் பங்கெடுப்பினைச் சம்பந்தப்படுத்தும் சில எழுந்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் அரசாங்கத்தினால் அறிக்கையிடப்பட்டிருந்தன. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் அவை அமுல்படுத்தப்படுகின்ற பகுதிகளில் உருப்படியான திட்டமான மாற்றங்களுக்கு பொருள்விளக்கமளித்தால், நாட்டின் வேறு பகுதிகளில் இதையொத்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பயனுள்ள வார்ப்புருவை இந் நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கக்கூடும்.[48]

2015 ஏப்ரலில், தேசிய ஐக்கியத்தினதும், நல்லிணக்கத்தினதும் நிரந்தரமான அலுவலகமொன்று தாபிக்கப்படுவதை மந்திரிகளின் அமைச்சரவை அங்கீகரித்தது. அலுவலகத்தின் தற்போதைய தலைவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க என்பதுடன், பலதரப்பட்ட இனத்துவ மற்றும் மதப் பின்னணியொன்றிலிருந்து நபர்களைச் சபை கொண்டுள்ளது. செயல் நிகழ்ச்சித்திட்டமொன்றை இனிமேல்தான் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து, பரப்பவிருப்பதால், இப்புதிய அலுவலகத்தின் செயற்பாடு இனி மேல் தான் முழுமையாக வரையறுக்கப்படும். எனினும், அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆணை ஆவணம் மத ஒற்றுமையின் மேம்படுத்தலையும், மத வன்முறையைத் தடுப்பதையும் தெளிவாகத் திட்டமிடுகின்றது.

மதச் சுதந்திரத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு அத்துடன் மத வன்முறையைத் தடுத்தல் ஆகியன தொடர்பிலான சட்ட, கொள்கை மற்றும் நிறுவனரீதியிலான வரைச்சட்டம் ஆகியன மீதான முன்னமே குறிப்பிட்ட கலந்துரையாடல் நியாயமானரீதியில் சிறந்ததாகத் தோன்றுகின்றது. வெறுப்பு உரை சட்டவாக்கம் புதிய அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் உள்ள அதேவேளை, தண்டனைச் சட்டக்கோவை மற்றும் ICCPR அதிகாரச்சட்டம் ஆகியன உட்பட வெறுப்பு உரை மீதான நடைமுறையிலான சட்டங்களுக்கு குறிப்பிடத்தக்க பெறுமதியை அத்தகைய சட்டவாக்கம் சேர்த்துக்கொள்ளும் என்பது எதிர்பார்க்க முடியாததாகும். இச் சட்டத்தின் சமமானதும், நோக்கத்திலானதும் வினைப்படுத்தலின் இல்லாமையானது பிரச்சனையின் உயிர்க்கூறு எனத் தோன்றுகின்றது. பிரச்சனையானது தவிர்க்க முடியாதபடி நிறுவனரீதியான ஒன்றாகும். மதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கும், வழக்குத்தொடுப்பதற்கும் அத்துடன் மத இணை-வாழ்வின் முழுமையான சூழ்நிலையொன்றை முன்னேற்றுவதற்கும் நீதித்துறை மற்றும் சட்ட வினைப்படுத்தல் அலுவலர்கள் உட்பட அரசாங்க அலுவலர்களின் இயலாமைக்கும், தயக்கத்திற்கும் இது தொடர்பானதாகும். இந்த நிறுவனரீதியிலான இயலாமையும், உணர்ச்சியின்மையும் அனேகமாக இலங்கையின் சனசமூக உறவுகளுக்கு மேலாக நிலவுகின்ற சமூக-கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுக்கு உடலுழைப்பு முழுவதும் சார்ந்த நிறுவனரீதியிலான கீழ்படிவானதொன்றின்

[45] LLRC Report, para.9.118.

[46] INFORM Human Rights Documentation Centre, *Freedoms of Assembly and Association in Sri Lanka* (September 2014), at https://ihrdc.files.wordpress.com/2014/08/freedom-of-assembly-association-in-sri-lanka-inform-20sep2014.pdf.

[47] LLRC Report, para.9.221.

[48] Government of Sri Lanka, *National Plan of Action for the Implementation of LLRC Recommendations – Responsibilities by Thematic Area* (September 2014).

எடுத்துக்காட்டலாகும். இந்தச் சூழமைவுரீதியிலான அம்சங்கள் பின்னர் இந்த ஆய்வில் ஆராயப்படும்.

## 2. மத வன்முறை மீதான தரவுகள்

### *2.1 மதத் தாக்குதல்களின் வகைப்படுத்தல்*

மதத் தாக்குதல்களின் வகைகளில் தெளிவான வகைப்படுத்தலொன்றை இலங்கையில் மத வன்முறை மீதான சில வழங்குகின்றன. 2014 மார்ச்சில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினாலான (ஸ்ரீ.ல.மு.கா.)[49] ஆய்வொன்றை One Text Initiative (OTI) என்ற நிறுவனம் வெளியிட்டது. இது அப்போதைய மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. தாக்குதல்களின் பயனுள்ள வகைப்படுத்தலொன்றை அறிக்கை வழங்குகின்றது:

1. உடல்ரீதியிலான வன்முறை
2. ஆதனத்தின் அழிவு
3. அச்சுறுத்தல், பயமுறுத்தல் அல்லது பலாத்காரம்
4. வெறுப்பு இயக்கங்கள் அல்லது பிரச்சாரம்
5. பாகுபாட்டிலான நடைமுறை

'தாக்குதல்' என்ற பதத்தின் தெளிவான வரைவிலக்கணமொன்றை ஸ்ரீ.ல.மு.கா. ஆய்வு வழங்கவில்லை. உடல்ரீதியான வன்முறையைப் பார்ப்பதற்கு வேறு இடத்தில் பதம் வரையறுக்கப்பட்டுள்ளது.[50] நபர்களுக்கு எதிரான வன்முறையின் உடல்ரீதியான பயமுறுத்தல் மற்றும் பலாத்காரம் போன்ற வேறு செயல்கள் உட்பட அத்தகைய வெளிப்படையான செயல்கள் அனேகமாக கண்டுபிடிப்பதற்கும், அளவிடுவதற்கும் இலகுவானதாகும். இதனிடையே வெறுப்பு இயக்கங்களும், பிரச்சாரமும் அனேகமாக வன்முறைக்கும், அழிவுக்கும் அத்துடன் அவற்றின் முன்கற்பனையிலான செயல்களுக்கும் அடிப்படையை அமைக்கின்றன. வன்முறையையிட்டு தானர் (Tanner) என்பவரின் பரவலான வரைவிலக்கணத்திற்கு ஒருவர் மீளத்திரும்பினால், உடல் சாராத தாக்குதல்களை ஸ்ரீ.ல.மு.க. உள்ளடக்கியமை நியாயமானதாகத் தோன்றுகின்றது. இருந்த போதிலும், ஒப்பீட்டுரீதியில் வெறுப்பு இயக்கங்களும், பிரச்சாரமும் குறைந்தளவில் அளவிடக்கூடியவையாகும். பாகுபாட்டிலான நடைமுறைகளையும் ஸ்ரீ.ல.மு.கா. ஆய்வு உள்ளடக்கியுள்ளது. வரைவிலக்கணமானது அதிகளவு பரவலானது என்ற விமர்சனத்தை அத்தகைய உள்ளடக்கம் அனேகமாக அடியெடுத்துக்கொடுக்கும் எனக் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. இருந்தும், அரசாங்கத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்டால், பாகுபாட்டிலான நடைமுறைகள் கட்டமைப்பிலான வன்முறைக்கான, அதாவது மதத்தின் காரணத்தின் மீது அடிப்படைத் தேவைகளை நிறுவனரீதியாகக் கவர்ந்துகொள்வதற்கான அடிப்படையின் அத்தகைய உட்படுத்தலை நியாயப்படுத்த முடியும்.

தெளிவின் நோக்கத்திற்காக, ஒவ்வொரு வகுதியின் கீழ் வருகின்ற சம்பவங்களின் உதாரணங்களைக் கீழேயுள்ள அட்டவணை வழங்குகின்றது. இந்தத் தாக்குதல்களின் வரையறுக்கும் அம்சம் என்னவெனில், அவை மதரீதியாகச் செயல்நோக்கமளிக்கப்பட்டவை அல்லது குறிப்பான மதக் குழுவொன்றை அவை இலக்குப்படுத்துகின்றன. சகல உதாரணங்களும் ஸ்ரீ.ல.மு.கா. ஆய்விலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

[49] Sri Lanka Muslim Congress, *Religious Violence in Sri Lanka: January 2013 – December 2013* (2014).

[50] For example, the Centre for Policy Alternatives defines an 'attack' as 'physical violence against a religious place, and includes damage to building(s), theft of and/or damage to items within the building, injury or death of persons within'. See Centre for Policy Alternatives, *Religious Violence in Post-war Sri Lanka – Incidents and Attacks* (September 2014), available at:
http://groundviews.org/2014/09/16/infographic-religious-violence-in-post-war-sri-lanka.

**அட்டவணை 1: சம்பவங்களின் உதாரணங்கள் (வகுதியின் மூலம்)**

| வகுதி | சம்பவம் |
|---|---|
| உடல்ரீதியான வன்முறை | மன்னம்பிட்டிய தபால் நிலையத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண் ஊழியர் தாக்கப்படுகின்றார். அவரது *பர்தாவை* அகற்றுவதற்கு தாக்குதல் நடத்தியவர் முயல்கின்றார் (18 மார்ச் 2013, பொலன்னறுவை).<br><br>கிராமவாசிகளைக் கொண்ட கோஷ்டியொன்று கிறிஸ்தவப் போதகர் ஒருவரைத் தாக்குவதுடன், ஆராதனைக் கூட்டமொன்றையும் குழப்புகின்றது (24 பெப்ரவரி 2013, வென்னப்புவ, புத்தளம்). |
| ஆதனத்தின் அழிவு | பேருவளையில் முஸ்லிம் உணவகமொன்றை பிக்குகளைக் கொண்ட குழுவொன்று சேதமாக்குகின்றது (23, ஜனவரி 2013, பேருவளை).<br><br>விசுவாசிகள் ஐக்கிய தேவாலயக் கட்டிடத்தையும், ஆதனத்தையும் BBSஇன் உறுப்பினர்கள் சேதமாக்குகின்றார்கள் (24 மார்ச் 2013, அம்பலாந்தோட்டை, ஹம்பாந்தோட்டை). |
| அச்சுறுத்தல், பயமுறுத்தல் அல்லது பலாத்காரம் | ஜாதிக பல சேனாவினால் [Jathika Bala Sena (JBS)] ஒழுங்குபடுத்தப்பட்ட ஊடக மகாநாடொன்றினில் BBS புகுவதுடன் அங்கு பிரசன்னமாயிருந்த முஸ்லிம் மதகுருமார்களையும், மற்றும் JBS பொதுச் செயலாளர் வட்டரேக்க விஜித தேரோவையும் வாய்மொழி மூலமாக தூஷிப்பதுடன், பயமுறுத்துகின்றனர் (9 ஏப்ரல் 2013, கொம்பனித்தெரு, கொழும்பு).<br><br>Gospel to the World Churchஇன் ஆராதனைக் கூட்டமொன்றை உள்ளூர்வாசிகள் குழப்புவதுடன், ஆராதனைக் கூட்டங்கள் தொடர்ந்தால் விருந்தோம்புவர்கள் தாக்கப்படுவார்கள் என அச்சுறுத்துகின்றனர் (26 ஜூலை 2013, மதவாச்சி, அனுராதபுரம்). |
| வெறுப்பு இயக்கங்கள் அல்லது பிரச்சாரம் | 'கடத்தல், வருமான வரியைத் தவிர்த்தல், போதைப்பொருட்களைக் கடத்துதல் போன்ற பெரும்பான்மையிலான குற்றங்கள் முஸ்லிம்களினால் இழைக்கப்படுகின்றன' என BBS பொதுச் செயலாளர் குறிப்பிடுகின்றார் (13 ஜூலை 2013, ஊடகங்களில்).<br><br>விலங்குகளை வெட்டுவது பற்றிக் குறிப்பிடுகையில், சிங்கள மற்றும் தமிழ்ப் பகுதிகளில் முஸ்லிம்கள் தமது கொள்கைகளைப் பரப்புவதாகவும் அத்துடன் பௌத்த மதத்தை இழிவுபடுத்துவதாகவும் BBS பொதுச் செயலாளர் உறுதிப்படுத்துகின்றார். செயற்படுவதற்கு அரசாங்கம் தவறினால் 'சகலவற்றையும் BBS அழிக்கவேண்டியிருக்கும்' என அவர் எச்சரிக்கை செய்கின்றார் (12 டிசம்பர் 2013, ஊடகங்களில்). |
| பாகுபாட்டிலான நடைமுறை | புதிய தேசிய ஆளடையாள அட்டைகளுக்கு *ஹிஜாபோர் ஃபெஸ்* தொப்பியை அணிவதற்கு முஸ்லிம்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஊடகங்கள் அறிக்கையிடுகின்றன.<br><br>Assembly of God Churchஇன் ஆராதனைக் கூட்டங்களை இடைநிறுத்துமாறு பொலிஸார் உத்தரவிடுகின்றனர் (19 மார்ச் 2013, வலஸ்முல்ல, ஹம்பாந்தோட்டை). |

### *2.2 குற்றமிழைத்தோரை வகைப்படுத்தல்*

தாக்குதல்களின் வகுதிப்படுத்தலொன்றுக்கு புறம்பாக, வன்முறையின் போக்குகளைப் பகுப்பாய்வதற்கு குற்றமிழைத்தோர்களின் வகைப்படுத்தலொன்று அவசியமாகும். மீண்டும் ஒரு முறை OTIஇனால் வெளியிடப்பட்ட அறிக்கைக்குப் புறம்பாக, ஒரு தெளிவான வகுதிப்படுத்தல் தயார்நிலையில் கிட்டுவதாகத் தோன்றவில்லை. அறிக்கையில் பின்வரும் வகுதிகள் வழங்கப்படுகின்றன:

1. அரசாங்க நிறுவனம் அல்லது அரசாங்கச் சேவையாளர்
2. அரசியல் அல்லது சமூக இயக்கம் அல்லது அரசியல்வாதி
3. மத நிறுவனம் அல்லது மத குரு
4. வர்த்தக அக்கறையிலான குழு அல்லது தனியார் துறை நிறுவனம்
5. இணைப்பற்ற அல்லது அடையாளம் காணப்படாத தனிப்பட்டவர் அல்லது குழு

வகைப்படுத்தலானது பெரிதுமே பயனுள்ளதாகும். ஏனெனில் அது சமூக-அரசியல் துறை, அரசாங்க மற்றும் தனியார் துறைகள் மற்றும் மதச் சனசமூகம் ஆகியன உட்பட பலதரப்பட்ட துறைகளில் உள்ள செயற்பாட்டாளர்களின் வரிசையை உள்ளடக்குகின்றது. இலங்கையில் மதத் தாக்குதல்களின் குற்றமிழைத்தோர் இவ்வகுதிகளினுள் வருகின்றார்கள்.

'நிறைவேற்று மற்றும் நிருவாக' நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களை 'அரசாங்க நிறுவனங்கள்' உள்ளடக்குகின்றன. 'நிறைவேற்று மற்றும் நிருவாக' என்ற பதங்கள் அடிப்படை உரிமைகளின் பிரயோகங்களின் விரிவெல்லையை வரையறுக்கின்ற இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 126(1)இல் செய்யப்பட்டுள்ள மேற்கோளுக்கு ஒத்திசைவானதாகும். இப் பதங்கள் தொடர்பான சட்டவியல் அவற்றின் கருத்திற்கு பொருள் விளக்கமளிக்கையில் பயனுள்ளதாக இருக்கும். அரசாங்கத்தின் 'பயனுறுதிவாய்ந்த உரித்துரிமையினுள்ளும், கட்டுப்பாட்டினுள்ளும்' வருகின்ற அரசாங்க முகவராண்மைகளை உள்ளடக்குவதற்கான பதங்களை *ஜயக்கொடி எதிர் இலங்கைக் காப்புறுதி மற்றும் ரொபின்சன் ஹொட்டேல் கோ லிமிற், மற்றும் ஏனையோர்*[51] என்ற வழக்கில் மீஉயர் நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது. வரைவிலக்கணத்தினுள் வரும் நிறுவனங்களின் செயல்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 10இனால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளின் மீறலுக்கு உத்தேசமானரீதியில் பொறுப்பானது என்பதே இந்த வரைவிலக்கணத்தின் முக்கியத்துவமாகும். எனவே, மேலே வரையறுக்கப்பட்டவாறு, சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதியாக்கச் சபைகள், அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார முயற்சிகள் மற்றும் 'அரசாங்கத்தின் முகவர்கள்' ஆகியனவற்றை அரசாங்க நிறுவனங்கள் குறிக்கின்றன. அரசாங்கத்தினால் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட தனிப்பட்டவர்களையும் மற்றும் பொதுவாக நிறைவேற்று மற்றும் நிருவாகப் பணிகளை மேற்கொள்பவர்களையும் 'அரசாங்கச் சேவையாளர்கள்' உள்ளடக்குகின்றனர். இந்த உப-வகுதியானது மேலதிகமாக, மேலே விபரிக்கப்பட்டுள்ள 'நிறைவேற்று மற்றும் நிருவாகச்' செயற்பாட்டின் விரிவெல்லையினுள் சாதாரணமாகவே உள்ளடக்கப்படாத நீதித்துறை அலுவலர்களை உள்ளடக்குகின்றது. தனது வரைவிலக்கணத்திலான விரிவெல்லையினுள் நீதித்துறை அலுவலர்களை உண்மையாகவே ஸ்ரீ.ல.மு.கா. ஆய்வு உள்ளடக்கியதா என்பது தெளிவாக விளங்கவில்லை. ஏனெனில் ஆய்வில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள தாக்குதல்களில் எதிலுமே நேரடியாக நீதிபதி ஒருவரைத் தொடர்புபடுத்தவில்லை. இருந்த போதிலும், நீதித்துறை அலுவலர் ஒருவரினால் மதத் தாக்குதலொன்றைக் கவனத்திற்கெடுப்பதற்கான தீர்வு தவறான நடத்தையையிட்டு விசாரணையின் புறம்பான நடைமுறையொன்றைச் சம்பந்தப்படுத்துகின்றது என்பது குறித்துக்கொள்ளப்படுகின்றது. இது உருமாதிரியாக அடிப்படை உரிமைகள் பிரயோகத்தின் வரைச்சட்டத்திற்கு வெளியிலானதாகும். நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தைக்காக நீதிபதி ஒருவரை நீக்குவது ஒன்றில் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவினால் ஒழுக்காற்று விசாரணைகளை (கீழ்நிலை நீதிமன்ற நீதிபதிகளுக்கு) அல்லது குற்றப்பிரேரணை விசாரணைகளை (மேன் முறையீட்டு நீதிமன்ற மற்றும் மீஉயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு) சம்பந்தப்படுத்துகின்றது.

தேர்தல்களில் அபேட்சகர்களாக முன்வருகின்றதும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் தலைமைத்துவப் பதவிநிலைகளைக் கொண்டிருப்பதுமான சட்ட மன்றத்தின் அல்லது நிறைவேற்று உறுப்புக்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளை 'அரசியல்வாதிகள்' உள்ளடக்குகின்றனர். அரசியல் கட்சிகள், அரசியல் கூட்டிணைவுகள் மற்றும் திட்டவட்டமான குறிக்கோள்களையும்,

[51] [2001] 1 Sri. L.R. 365.

நோக்கங்களையும் பின்துரந்து செல்லும் முறைசாரா அரசியல் மற்றும் சமூக அக்கறையிலான குழுக்கள் ஆகியனவற்றை 'அரசியல் இயக்கங்களும்', 'சமூக இயக்கங்களும்' குறிக்கின்றன. அரசியல் இயக்கங்களுக்கும், சமூக இயக்கங்களுக்கும் புறம்பான வரைவிலக்கணங்களை சார்ள்ஸ் ரிலி (Charles Tilly) வழங்குகின்றார். அவர் இரு வகைகளைக் கொண்ட இயக்கங்களுக்கு இடையில் நுட்பமான, ஆனால் முக்கியமான வேற்றுமையை எடுத்துக்காட்டுகின்றார். 'ஒரு தனித்த பிரச்சனையை அல்லது பிரச்சனைகளின் தொகுதியைச் சுற்றி அல்லது பங்கிடப்பட்ட கரிசனைகளின் தொகுதியொன்றைச் சுற்றி ஒழுங்குபடுத்தப்பட்டதாக' அரசியல் இயக்கங்களை அவர் வரையறுக்கின்றார். அத்தகைய இயக்கங்கள் அனேகமாக, 'அரசியல் இடத்தினையும், நன்மைகளையும்' நாடுவதற்கு விருப்பத்தினைக் கொண்டுள்ளன. குறிப்பிட்ட இனத்துவ அல்லது மதக் குழுவொன்றின் அக்கறையைப் பலப்படுத்துவதற்கான அல்லது விஸ்தரிப்பதற்கான இயக்கமொன்று இந்த வரைவிலக்கணத்தினுள் வருகின்றது. மறுதலையாக, சமூக இயக்கங்கள், 'அரசியல் அல்லது சமூகப் பிரச்சனைகள் மீது நோக்கினைக் கொண்ட தனிப்பட்டவர்களின் குழுக்களின் அல்லது தாபனங்களின் பாரிய முறைசாரா குழவாக' அமைந்தவையாகும்.[52] இவ்வகுதியினுள் பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமைகள், சூழல் மற்றும் திருமணச் சமத்துவம் போன்ற பிரச்சனைகள் மீது நோக்கினைக் கொண்டுள்ள இயக்கங்கள் இடப்படலாம்.

நம்பிக்கை அடிப்படையிலான தாபனங்களையும், மதப் பணியில் அமர்த்தப்பட்ட தனிப்பட்டவர்களையும் 'மத நிறுவனங்களும்', 'மதக் குழுவும்' குறிக்கின்றன. முறைமையான நிறுவனங்களுக்கு அதாவது சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமான நிறுவனங்களுக்கு இவ்வகுதி மட்டுப்படுத்தப்பட்டதல்ல. எனவே, முறைசாரா நம்பிக்கைகளின் அடிப்படையிலான தாபனங்களுக்கும், சில நம்பிக்கைகளின் பிரதிநிதிகளாகத் தம்மைத் தாங்கிப்பிடிப்பவர்களுக்கும் வகுதியின் விரிவெல்லை நீடிக்கின்றது.

தனியார் துறையில் உள்ள சகல ஒன்றிணைக்கப்பட்டதும், ஒன்றிணைக்கப்படாததுமான நிறுவனங்களை 'வர்த்தக அக்கறையிலான குழுக்கள்' மற்றும் 'தனியார் துறை நிறுவனங்கள்' குறிக்கின்றன. வர்த்தக அக்கறைகளைக் கொண்ட குழுக்களின் வரைவிலக்கணத்தினுள் வர்த்தகச் சபைகளும், வியாபாரக் கூட்டிணைவுகளும் உருமாதிரியாக வருகின்றன. சட்டபூர்வ நிறுவனங்களாக முறைமையானரீதியில் அங்கீகரிக்கப்படாத ஆனால், சில 'வர்த்தக அக்கறைகளைப்' பிரதிநிதிப்படுத்தும் கைத்தொழில் அல்லது துறை குறிப்பான கூட்டிணைவுகளும், குழுக்களும் உள்ளடக்கப்படலாம். உதாரணமாக, குறிப்பிட்ட இடமொன்றில் உள்ள வியாபார உரிமையாளர்களின் முறைசாராக் கூட்டிணைவு இன்னும் இவ்வகுதியினுள் வருகின்றது. இவ்வகுதி ஒன்றிணைக்கப்பட்டதும், ஒன்றிணைக்கப்படாததுமான தனியார் வியாபார நிறுவனங்களை உள்ளடக்குகின்றது.

இறுதியாக, குறிப்பிட்ட தாபனமொன்றுக்கு இணைப்பினைக் கொண்டிருக்காத தனிப்பட்டவர்களும், குழுக்களும் அல்லது அடையாளம் தெரியாதவர்களும் புறம்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அடையாளங் காணப்படாத நபர்களினால் மேற்கொள்ளப்படும் உடல்ரீதியிலான வன்முறையும், ஆதனங்களின் அழிவும் தவிர்க்க முடியாதவாறு இவ்வகுதியினுள் வருகின்றன.

### *2.3 மத தாக்குதல்களின் அளவறிதலிலான படமிடல்*

மதத் தாக்குதல்களின் உண்மையான தொகை மீதான தரவுகள் இலங்கையில் உள்ள குறைந்தபட்சம் இரு தேசிய அரசாங்க சார்பற்ற உறுப்புக்களினால் அதாவது முஸ்லிம்களுக்கான செயலகம் (Secretariat for Muslims) மற்றும் இலங்கை தேசிய கிறிஸ்தவ எவன்ஜலிக்கல் முன்னணி [National Christian Evangelical Alliance of Sri Lanka (NCEASL)] ஆகியவற்றினால் சேகரிக்கப்பட்டு, பகுப்பாய்ப்படுகின்றன. 2013இல் மதத் தாக்குதல் மீதான தரவுகள் மாவட்ட மட்டமொன்றில் பிரிக்கப்பட்டுள்ளன.

2013இன் போது 16 அமைவிடம்-குறிப்பான முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்களின் பங்கீட்டினை பின்வரும் விளக்கப்படம் முன்வைக்கின்றது (உதாரணமாக, குறிப்பான வழிபாட்டு இடமொன்றின் மீதான ஒரு தாக்குதல்). மேலும் 75 சம்பவங்கள் அமைவிடம்-குறிப்பானவை அல்ல (உதாரணமாக, ஊடகங்களில் வெறுப்பு இயக்கங்கள்). இவை மொத்த எண்ணிக்கைகளின் தாக்குதல்கள் 241 எனக் காட்டுகின்றன.

---

[52] Charles Tilly, *Social Movements, 1768–2004* (2004), at 262.


**உருபு 1: 2013இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள்**[53]




2013இல், 69 கிறிஸ்தவ எதிர்ப்புத் தாக்குதல்கள் இடம்பெற்றன. தாக்குதல்களின் அளவு மட்டுமே கிறிஸ்தவ சனசமூகத்திற்கு எதிரான மத வன்முறையின் கடுமையானதன்மையையிட்டு எமது புரிந்துணர்வுக்கு தப்பான கருத்தை ஏற்படுத்தக்கூடாது என குறித்துக்கொள்ளப்படுகின்றது. முஸ்லிம் சனசமூகத்திற்கு எதிரானவற்றுடன் ஒப்பிடுகையில், தாக்குதல்கள் குறைந்த எண்ணிக்கையில் இடம்பெற்றிருந்தாலும், கிறிஸ்தவர்கள் மத்தியில் மதச் சுதந்திரத்தின் நிலை முஸ்லிம்கள் மத்தியில் விளங்குவதை விட, சிறந்தது என கட்டாயமாக கருத வேண்டுமென்றில்லை. சம்பவங்களின் தன்மை, அவற்றின் தீவிரத்தன்மை மற்றும் மீள-இடம்பெறுதலில் போக்குகள் (அதாவது அதே அமைவிடத்தில் வன்முறைக்கான மனோபாவம் இடம்பெறுதல்) ஆகியன தொடர்பில் வன்முறையின் கடுமையானதன்மை பகுப்பாயப்பட வேண்டும். இந்த மட்டுப்படுத்தலை மனதில் வைத்து, இந்தத் தாக்குதல்களின் பங்கீட்டினை பின்வரும் விளக்கப்படம் முன்வைக்கின்றது.

[53] Sri Lanka Muslim Congress, *op.cit.* at 2.

**உருபு 2: 2013இல் கிறிஸ்தவர் எதிர்ப்புத் தாக்குதல்கள்**[54]




இந்து வழிபாட்டு இடங்கள் மீதான தாக்குதல்களின் எண்ணிக்கை தொகைரீதிப்படுத்தப்படவில்லை என்பது குறித்துக்கொள்ளப்படுகின்றது. எனினும், இந்த வழிபாட்டு இடங்களுக்கு எதிராக


[54] *Ibid.* at 3. Similar numbers have been recorded by Christian organisations. According to the U.S. Department of State, *2013 Report on International Religious Freedom* (July 2014), 'Christian groups reported at least 60 violent attacks led by Buddhist monks against Christians or churches during the year.'

தொடருகின்ற வன்முறைகளையிட்டு தமிழர் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள், குறித்துக் கூறுவதென்றால் அதன் தலைவரான ஆர்.சம்பந்தன் அடிக்கடி சுட்டிச்சொல்லியிருக்கிறார்கள்.[55]

இலங்கையில் மதத் தாக்குதல்கள் மீதான எண்ணிக்கைகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 24ஆவது மற்றும் 25ஆவது அமர்வுகளில் கவனத்தைப்பெற்றன.[56] மனித உரிமைகளுக்கான அப்போதைய ஐ.நா. உயர் ஆணையாளர் நவிபிள்ளை 2014 பெப்ரவரியில் பிந்திய அமர்வின் போது கரிசனையை வெளிப்படுத்தினார். சில மிதவாதப் பௌத்த பிக்குகளினால் வழிநடத்தப்பட்ட மதச் சிறுபான்மையினர்களுக்கு எதிரான தாக்குதல்களிலும், சிங்கள-பௌத்த தேசியவாதக் குழுக்களினாலான வன்முறையின் தூண்டுதலிலும் குறிப்பிடத்தக்க அலைமோதலினால் தான் குழப்படைந்ததாக அவர் அங்கு குறிப்பிட்டிருந்தார்.[57]

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையின் அடிப்படையில், 2013இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள் தாக்குதலின் வகையினாலும், குற்றமிழைத்தவர்களின் வகையினாலும் மேலும் பிரிக்கப்படலாம்.

**உருபு 3: 2013இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள்**[58]





[55] See Parliamentary Debates (Hansard) – Official Report, Volume 219 - No. 3, 8 August 2013, at 325.

[56] See Oral update of the High Commissioner for Human Rights on promoting reconciliation and accountability in Sri Lanka, A/HRC/24/CRP.3/Rev.1, 25 September 2013; Promoting reconciliation and accountability in Sri Lanka: Report of the Office of the United Nations High Commissioner for Human Rights, A/HRC/25/23, 24 February 2014 ('2014 Report of the OHCHR').

[57] 2014 Report of the OHCHR, at para.20.


[58] Sri Lanka Muslim Congress, *op. cit.* at 1. One limitation in this disaggregation relates to the fact that the same incident could include more than one type of attack. Hence the total number of attacks in this figure does not reflect the total number of incidents.

**உருபு 4: 2013இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள் (குற்றமிழைத்தோரின் வகையினால்)[59]**




2013இல் கிறிஸ்தவ எதிர்ப்புத் தாக்குதல்களும் அதையொத்த பாணியில் பிரிக்கப்பட முடியும்.


**உருபு 5: 2013இல் கிறிஸ்தவர் எதிர்ப்புத் தாக்குதல்கள் (தாக்குதலின் வகையினால்)[60]**




[59] *Ibid.* It is noted that organisations such as the BBS fall into more than one definitional category. For the purposes of clarity and avoidance of duplication, and for reasons explained later in the subsection 'Political Context', BBS is classified as a political movement as opposed to a religious institution.


[60] *Ibid.* at 27.

**உருபு 6: 2013இல் கிறிஸ்தவர் எதிர்ப்புத் தாக்குதல்கள் (குற்றமிழைத்தோரின் வகையினால்)**




2014இலும் வன்முறையில் போக்கு தொடர்ந்தது. முஸ்லிம்கள் மீது குறைந்தபட்சம் 200 தாக்குதல்கள் பதிவுசெய்யப்பட்டன. இந்தத் தாக்குதல்களின் பங்கீட்டினை பின்வரும் உருபு முன்வைக்கின்றது.

**உருபு 7: 2014இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள்[61]**





[61] Source of Primary Data: National Christian Evangelical Alliance of Sri Lanka.


2013இலிருந்து தரவுகளுக்கு ஒத்ததாக, அமைவிடம் குறிப்பானவைசாராத சம்பவங்கள் மேற்படி தேசப்படம் மீது குறிக்கப்படவில்லை. தேசப்படம் மீதான சம்பவங்கள் 2014இல் இடம்பெற்ற முஸ்லிம் எதிர்ப்பு வன்முறையில் வெறுமனே அமைவிடம் குறிப்பான சம்பவங்களேயாகும். 2014இல் *Anti-Muslim Sentiment in Sri Lanka* மீதான முஸ்லிம்களுக்கான செயலகத்தின் அறிக்கையில் 'தாக்குதல்கள்' என்றவாறு பட்டியலிடப்பட்ட சம்பவங்களில் சில இவ்வாய்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 'தாக்குதலின்' வரைவிலக்கணத்தினுள் நேரடியாக வரமாட்டா என்பதைக் குறித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, அனுராதபுரத்தில் 2014 ஒக்ரோபர் 24 அன்று முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையிலான பதிவுசெய்யப்பட்ட காணித் தகராறொன்று மதத் தாக்குதலின் வரைவிலக்கணத்தினுள் பொருந்தமாட்டாது. ஏனெனில் தகராறு மதரீதியில் செயல்நோக்கமளிக்கப்பட்டது என்ற கட்டாயமில்லை. இவ்வாறாக, முஸ்லிம்களுக்கான செயலகத்தின் அறிக்கையில் பட்டியலிடப்பட்ட 214 சம்பவங்களில் 200 மட்டுமே இந்த ஆய்வில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தின் வகையினாலும், குற்றமிழைத்தவர்களின் வகையினாலும் இந்தத் தாக்குதல்களின் சுருக்கமான விளக்கத்தை அடுத்த இரு உருபுகளும் சித்தரிக்கின்றன.

**உருபு 8: 2014இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள் (சம்பவத்தின் வகையினால்)**





**உருபு 9: 2014இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள் (குற்றமிழைத்தோரின் வகையினால்)**




இதனிடையே, 2014இல் கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்கள் 88க்கு அதிகரித்தன.[62] தாக்குதல்களின் பங்கீடும், வகுதிப்படுத்தலும் கீழேயுள்ள உருபில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**உருபு 10: 2014இல் கிறிஸ்தவர் எதிர்ப்புத் தாக்குதல்கள்**





**உருபு 11: 2014இல் முஸ்லிம் எதிர்ப்புத் தாக்குதல்கள் (சம்பவத்தின் வகையினால்)**




[62] Secretariat for Muslims, *Anti Muslim Sentiment in Sri Lanka 2014* (2015).

**உருபு 12: 2014இல் கிறிஸ்தவர் எதிர்ப்புத் தாக்குதல்கள் (குற்றமிழைத்தோரின் வகையினால்)**




2013இலிருந்தும், 2014இலிருந்தும் தரவுகள் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைப் பொறுத்தளவில் இரு போக்குகளை வெளிப்படுத்துகின்றன. முதலாவது 50%க்கு மேற்பட்ட தாக்குதல்கள் உடல்ரீதியானவை அல்ல என்பதுடன், வெறுப்பு உரைக்கும், பிரச்சாரத்திற்கும் தொடர்பானவையாகும். இந்தப் போக்கின் முக்கியத்துவத்தை ஆய்வு பின்னர் ஆராயும். இரண்டாவது, அரசியல் செயற்பாட்டாளர்கள் அல்லது அரசியல் அல்லது சமூக இயக்கங்கள் 50%க்கு மேற்பட்ட தாக்குதல்களை இழைத்தன. சகல தாக்குதல்களிலும் கால்வாசிக்கு மேற்பட்டவை உண்மையில் BBS எனப்படும் தனித்த குற்றமிழைத்த அமைபொன்றுக்கு சாட்டப்படக்கூடியது. எனவே, 2013இலும், 2014இலும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களில் அதிகரிப்பானது குறிப்பிட்ட தாபனங்களின் முக்கியத்துவத்திலும், செல்வாக்கிலுமான அதிகரிப்புடன் ஒத்திசைகின்றது. ஆய்வு பின்னர் BBS போன்ற தாபனங்களின் தோற்றத்தையும் ஒன்று திரட்டலையும் பகுப்பாய்வதுடன், இலங்கையில் சமூக-கலாசர, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவு ஆகியவற்றினுள் அத்தகைய தாபனங்களைக் கண்டறிவதற்கு முயற்சிக்கும்.

முஸ்லிம் எதிர்ப்பு தாக்குதல்கள் மீதான தரவுகளுக்கு மறுதலையாக, கிறிஸ்தவர்கள் மீதான அண்ணளவாக 59%ஐக் கொண்ட தாக்குதல்கள் அடையாளங் காணப்படாத குழுவினர்களினாலும், தனிப்பட்டவர்களினாலும் இழைக்கப்பட்டுள்ளன. உடல்ரீதியிலான வன்முறை, ஆதனங்களின் அழிவு மற்றும் பயமுறுத்தல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றைச் சம்பந்தப்படுத்தும் மிகவும் பெரும்பான்மையிலான சம்பவங்களுக்கு உள்ளூர் கிராமவாசிகளும், உள்ளூர் மத குருமார்களும் பொறுப்பானர்களாவர். மேலதிகமாக, அடுத்த பிரிவில் ஆராயப்படும் ஓர் அம்சமான கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல்களில் அரசாங்க அலுவலர்கள் அடிக்கடி நேரடியாக அல்லது மறைமுகப் பங்கெடுத்தனர்.

### *2.4 விடய ஆய்வுகள்*

கடந்த இரு ஆண்டுகளின் போது, மத வன்முறையின் இரு அடையாளங்களுக்குரிய விடயங்களையும், தென் மாகாணத்தில் இரு மாவட்டங்களின் ஒரு புவியியல்ரீதியிலான விடய ஆய்வையும் இப்பிரிவு முன்வைக்கின்றது. இரு அடையாளங்களுக்குரிய விடயங்கள் முஸ்லிம் சனசமூகம் மீதான தாக்குதல்களைச் சம்பந்தப்படுத்தின. முதலாவது 2013 நடுப்பகுதியிலும், இரண்டாவது ஒரு வருடத்தின் பின்னரும் இடம்பெற்றன. இச் சம்பவங்கள் மூன்று முக்கியமான ஒத்ததன்மைகளைக் கொண்டுள்ளன. முதலாவது, இவ்வாய்வில் பின்னர் கலந்துரையாடப்பட்டவாறு இரு பகுதிகளும் இனவாதத்திலான பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளையும், கெடுபிடிநிலைகளையும் முன்வைத்த குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவுகளைக் கொண்டிருந்தன.

இரண்டாவது, இரு விடயங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட குழுக்கள் செயற்பட்டன. இக்குழுக்கள் முன்-நிலவிய கெடுபிடிநிலைகளை அதிகரித்ததுடன், பின்னர் வெடித்த வன்முறையையும் தூண்டின. மூன்றாவது, வன்முறையை ஆரம்பிப்பதற்கு 'தூண்டுகின்ற சம்பவம்' ஒன்று முன்னின்றது. 1983 ஜூலை இனக் கலவரங்களுக்கு முன்னைய சூழமைவிலும் இதே அம்சங்கள் அச்சொட்டாக நிலவியமை குறித்துக்கொள்ளப்படுகின்றது. இதனிடையே, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் கிறிஸ்தவ சனசமூகத்திற்கு எதிராக 2013இலும், 2014இலும் இடம்பெற்ற தாக்குதல்கள் மீது புவியியல்ரீதியிலான விடய ஆய்வு நோக்கினைக் கொண்டுள்ளது.

*கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் சம்பவம்*

2013க்குள், கிராண்ட்பாஸ் பகுதியில் உள்ள பிரதான பள்ளிவாசலான மஸ்ஜித்துல் தீனுள் இஸ்லாம் பள்ளிவாசல் அதன் கொள்ளளவை அடைந்துவிட்டதுடன், அடுத்தாற் போலிருந்த ஆதனத்தில் வேர்விட்டிருந்த அரச மரத்தின் காரணமாக விஸ்தரிக்க முடியாதிருந்தது.[63] ஏற்கனவே அபிவிருத்தி செய்வதற்கு அப்பகுதியைக் கையகப்படுத்துவதற்கான திட்டங்களை நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்திருந்தது. பள்ளிவாசல் பின்னர் அகற்றப்படுவது அவசியம் என்பதையே கையகப்படுத்தல் கருத்தாகக் கொண்டிருந்தது. இச் சூழ்நிலைகளின் கீழ், முஸ்லிம் தொழுகை நிலையமாக மாற்றப்பட்டிருந்த மாற்றுக் கட்டிடமொன்றில் பகுதியில் உள்ள முஸ்லிம் ஆதரவாளர்கள் தொழுவதை ஆரம்பித்தனர். பகுதியில் உள்ள சிங்களச் சனசமூகம், குறிப்பாக அண்மையில் உள்ள பௌத்த ஆலயங்களைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் மாற்று இடம் தாபிக்கப்பட்டதையிட்டு எதிர்ப்புத் தெரிவித்தனர். *சிங்கள ராவய* மற்றும் *ராவண பலய* போன்ற மிதவாதக் குழுக்கள் பிரச்சனையை அதிகரிப்பதற்கு செயற்பட்டன. பின்னைய குழு 2013 ஜூன் 9 அன்றும், ஜூலை 5 அன்றும் தொழுகை நிலையத்திற்கு எதிராக இரு போராட்டங்களை மேடையேற்றின.[64] இடத்தை அகற்றுமாறு கோரி பெருமளவு பொலிஸ் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.[65] இருந்தும், முஸ்லிம் தொழுகை நிலையமொன்றாக மாற்று இடத்தின் உபயோகத்திற்கு அனுமதிச்சீட்டொன்றை புத்த சாசன, மத விவகாரங்கள் அமைச்சு வழங்கியிருந்தது. ஆரம்பத்தில் 2013 ஓகஸ்ட் 10 வரை அனுமதிச்சீட்டு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், அது அதன் பின்னர் நீடிக்கப்பட்டிருந்தது.

நீடிப்பின் செய்தி பகுதியில் உள்ள சிங்களவர்களிடமிருந்து மூர்க்கத்தனமான பிரதிபலிப்பினைத் தூண்டியது. 2013 ஓகஸ்ட் 11 அன்று, *சிங்கள ராவயவுடன்* சார்த்துரைக்கப்பட்ட தொடர்புடனான போராட்டக்காரர்கள் வழிபாட்டு இடமொன்றாகச் செயற்படுவதற்கு அது அனுமதிச்சீட்டொன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதை வலியுறுத்தி புதிய தொழுகை நிலையத்தைத் தாக்கினார்கள்.[66] இச் சம்பவம் பகுதியில் உள்ள முஸ்லிம் சனசமூகத்திற்கும், சிங்களப் போராட்டக்காரர்களுக்கும் இடையில் இனவாத மோதல்களாக விரைவாக விரிவடைந்தது. வன்முறையை அல்லது ஆதனத்தின் அழிவினைத் தடுப்பதற்கு சட்டத்தை வினைப்படுத்தும் சம்பந்தப்பட்டவர்கள் சிறிதளவையே செய்தனர். எனினும், பின்னர் சூழ்நிலை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், விடயம் இணக்கத்திற்கும் கொண்டுவரப்பட்டது. கையகப்படுத்தல் நிறுத்தப்பட வேண்டும், மூல பள்ளிவாசலுக்கு முஸ்லிம்கள் மீளச்செல்ல வேண்டும் அத்துடன் மூலத்திலான பள்ளிவாசலின் விஸ்தரிப்புக்கு அரச மரம் அகற்றப்படுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதே நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் [Urban Development Authority (UDA)] உடன்படப்பட்ட இணக்கமாகும்.[67] எனினும், புதிய தொழுகை நிலையத்திற்கான அனுமதிச்சீட்டு பின்னர் மீளப்பெறப்பட்டது. ஆலயத்தின் இரு பிரதம குருக்களும் மற்றும் பகுதியில் உள்ள

[63] Namini Wijedasa, 'Grandpass: A commitment to peace after ugly clashes', *The Sunday Times*, 18 August 2013, at http://www.sundaytimes.lk/130818/news/grandpass-a-commitment-to-peace-after-ugly-clashes-58345.html. It is noted that Bo trees are considered sacred in Buddhism and individuals are usually prevented from removing a Bo tree regardless of its location.

[64] SLMC, *op.cit.* at 19-21.

[65] Wijedasa, *op.cit*.

[66] Latheef Farook, 'Calculated Attack on Grandpass Mosque', *The Colombo Telegraph,* 14 August 2013, at https://www.colombotelegraph.com/index.php/calculated-attack-on-grandpass-mosque/.

[67] *Ibid.*

முஸ்லிம் சனசமூகத்தின் பிரதிநிதிகளும் தாக்குதல் நடத்தியோர் 'வெளியாட்கள்' என்பதை வற்புறுத்தினர்.[68]

*அளுத்கம கலவரங்கள்*

2014 ஜூன் 15 அன்று, இலங்கையின் தெற்கில் அமைந்துள்ள பட்டினங்களான அளுத்கம, தர்கா டவுண், வலிப்பன்ன மற்றும் பேருவளை ஆகியவற்றில் இனத்துவக் கலவரங்கள் வெடித்தன. அப்பகுதிகள் பாரிய சிங்களச் சனசமூகமொன்றுடன் சேர்ந்து வாழ்ந்த பாரிய சனத்தொகையொன்றைக் கொண்டிருந்தன. அனேகமாக ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இனவாத வன்முறை வெடித்திருந்தமையினால், இரு சனசமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமை ஓரளவு சீரழிந்ததாகவே தொடர்ந்துமிருந்தது.

பகுதியில் உள்ள பௌத்த பிக்கு ஒருவருக்கும், மூன்று முஸ்லிம்களுக்கும் இடையிலான வாக்குவாதமொன்றே 2014இல் கலவரங்கள் வெடிப்பதற்கு காரணமான சம்பவமாகும் என அறிக்கையிடப்பட்டுள்ளது.[69] சம்பவத்தைத் தொடர்ந்து, பௌத்த பிக்கு மீதான சார்த்துரைக்கப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, ஜூன் 15 அன்று பாரிய கூட்டமொன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. இக் கூட்டத்தில் BBS பங்கெடுத்ததுடன், BBSஇன் பொதுச் செயலாளர் கலகொட அத்த ஞானசார தேரர் கூட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதத்திலானதும், ஆத்திரமூட்டுகின்றதுமான கருத்துக்களை வெளியிட்டார்.[70] அவரது கருத்துக்கள் சூழவிருந்த பகுதிகளில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வியாபாரங்களையும், வீடுகளையும் தாக்குவதற்கு கும்பலைத் தூண்டியது. தொடர்ந்த கலவரங்களின் போது, மூன்று முஸ்லிம்கள் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் வீடுகளும், வியாபாரத் தலங்களும் அழிக்கப்பட்டன. 'இது இலங்கையின் அண்மைய வரலாற்றில் இனத்துவ வன்முறையின் மோசமான சம்பவங்களில் ஒன்று' என மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் அலுவலகத்தினால் கலவரம் விபரிக்கப்பட்டிருந்தது.[71]

சட்டத்தை வினைப்படுத்தும் அலுவலர்கள் மீண்டும் ஒருமுறை வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறினர். முஸ்லிம் சனசமூகத்தை தாக்கிய கும்பல்கள் மத்தியில் ஒழுங்குபடுத்தப்பட்டவர்கள் செயற்பட்டதாக திட்டவட்டமான சார்த்துரைகள் இருந்தன. உதாரணமாக, பெரும்பாலான தாக்குதல் நடத்தியோர் 'பூட்ஸ்'களும், 'ஹெல்மெட்'களும் அணிந்திருந்ததாக சாட்சிகள் வலியுறுத்தியிருந்தன. இது சாதாரண சிவிலியன் ஒருவர் அடைய முடியாத இராணுவச் சாதனங்களுக்கான அடைதலை குற்றமிழைத்தோர்களில் சிலர் கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது.[72] அத்தகைய சாட்சியங்கள் கலவரங்களில் அரசாங்கத்தின் சம்பந்தத்தையிட்டு பலமான சந்தேகங்களை எழுப்பின.

*தென் மாகாணத்தில் மதத் தாக்குதல்கள்*

2013இலும், 2014இலும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்களின் பெரும்பாலானவை காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றுள்ளன. இக் காலத்தின் போது இந்த இரு மாவட்டங்களிலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மொத்தமாக 27 குறிப்பான தாக்குதல்கள் பதிவுசெய்யப்பட்டன. இச் சம்பவங்களில் 13இல் பொலிஸ் அல்லது சில வேறு அரசாங்க அலுவலர்கள் தீவிரமாக அல்லது வெளிப்படையாகப் பங்கெடுத்தனர். கீழே பெருமளவு உதாரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

---

[68] Wijedasa, *op. cit.* However, as discussed in the subsection titled 'Particular local context', the claim that the violence was caused by outsiders requires further assessment.

[69] Farzana Haniffa, Harini Amarasuriya & Vishakha Wijenayake, *Where Have All the Neighbours Gone? Aluthgama Riots and its Aftermath: A Fact Finding Mission to Aluthgama, Dharga Town, Valipanna and Beruwela*, Law & Society Trust (2015) at 1. Also see Gehan Gunatilleke, *Confronting the Complexity of Loss*, Law & Society Trust (2015), at 33.

[70] Haniffa *et al.* at 1.

[71] Oral update of the High Commissioner for Human Rights on promoting reconciliation, accountability and human rights in Sri Lanka, 22 September 2014, A/HRC/27/CRP.2, at para.46.

[72] Haniffa *et al.* at 31-32.

2013 மார்ச் 9 அன்றும், ஏப்ரல் 6 அன்றும் ஹம்பாந்தோட்டை, வலஸ்முல்லையில், சகல ஆராதனைக் கூட்டங்களையும் இடைநிறுத்துமாறு Assemblies of God Church தேவாலயத்திற்கு பொலிஸ் உத்தரவிட்டது. பின்னர் ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்தினால் விருந்தோம்பப்பட்ட மதத் தலைவர்களின் கூட்டமொன்று 2013 மே 10 அன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் முன்கூட்டிய அரசாங்க அங்கீகாரம் பெறப்படாத சகல உள்ளூர் தேவாலயங்களும் உடனடியாக மூடப்பட வேண்டும் என உள்ளூர் பௌத்த பிக்குகள் கோரிக்கைவிடுத்தனர்.

2014 ஜனவரி 5 அன்று, கல்வாரி சுயாதீன தேவாலயத்தினால் பயன்படுத்தப்படும் காலி, ஹிக்கடுவையில் வழிபாட்டுத் தலமொன்றில் ஐந்து பொலிஸ் அலுவலர்களும், பிரிவுச் செயலாளர் திணைக்களத்திலிருந்து ஓர் அலுவலரும் வந்திறங்கினர். வளவில் இடம்பெற்ற ஆராதனைக் கூட்டங்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என அலுவலர்கள் கோரிக்கை விடுத்தனர். இரு தினங்களுக்குப் பின்னர் விசாரணையொன்றுக்காக ஹிக்கடுவை பொலிஸ் நிலையத்திற்கு தேவாலயத்தின் போதகர் வரவழைக்கப்பட்டார். அதன் பின்னர், பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் முன்னிலையில் இரு பௌத்த பிக்குமார்கள் வாய்மொழியாக அவரைத் தூஷித்தனர்.

2014 ஜனவரி 26 அன்று, காலி, ரத்கமவில் அமைந்துள்ள கல்வாரி சுதந்திர தேவாலயத்தின் உறுப்பினர் ஒருவரின் வளவினுள் ஆராதனைக் கூட்டமொன்று நடந்து கொண்டிருந்த வேளை, எட்டு பொலிஸ் அலுவலர்களும், ஒரு பௌத்த பிக்குவும் பிரவேசித்தனர். பொலிஸ் அலுவலர்கள் கூட்டத்தை நிறுத்தியதுடன், விசாரணையொன்றுக்காகப் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு சகல பங்கெடுப்பாளர்களையும் அறிவுறுத்தினர். 2014 ஜனவரி 29 அன்று, அமைதியை மீறியமைக்காக தேவாலயத்தின் போதகருக்கு எதிராக காலி நீதவான் மன்றில் வழக்கொன்றைப் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

2014 பெப்ரவரி 24 அன்று, ஹம்பாந்தோட்டை, மாடதல்லவில் உள்ள Assemblies of God Church தேவாலயப் போதகர் விசாரணையொன்றுக்கு உள்ளூர் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு கோரப்பட்டார். விசாரணையில் சமூகமளித்திருந்த இரு பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சகல மதச் செயற்பாடுகளையும் இடைநிறுத்துமாறு போதகரைக் கோரினார். பகுதியில் மதச் செயற்பாடுகளை நடத்துவதற்கு புத்த சாசன, மத விவகாரங்கள் அமைச்சின் முன்கூட்டிய அங்கீகாரம் அவசியம் என விவாதிக்கப்பட்டது.

2014 ஜூன் 6 அன்று, ஹம்பாந்தோட்டை, அங்குணுகொலபலஸ்ஸவில் Assemblies of God Church தேவாலயத்திற்கு போதகர் ஒருவர் தனிப்பட்ட இடங்களில் ஆராதனைக் கூட்டங்களை நடத்துவதற்காக பகுதியின் பொறுப்பதிகாரியினால் வாய்மொழியாகத் தூஷிக்கப்பட்டார். சகல ஆராதனைக் கூட்டங்களையும் இடைநிறுத்துவதற்கு போதகர் இணக்கமற்றிருந்தால், அவர் கிராமத்தை விட்டு விலகிச்செல்ல வேண்டும் எனப் பொறுப்பதிகாரி கோரிக்கை விடுத்தார்.

இச் சம்பவங்களின் ஒவ்வொன்றும் சில உருமாதிரியான அம்சங்களை எடுத்துக்காட்டியது. முதலாவது, 'அங்காரமாளிக்கப்படாத' வழிப்பாட்டு இடங்கள் என அறியப்பட்டதில் பிரார்த்தனைக் கூட்டங்களை அல்லது மத ஆராதனைகளை நடத்துவதில் கிறிஸ்தவப் ஆராதனையாளர்களை அவர்கள் சம்பந்தப்படுத்தினர். இந்த வழிபாட்டு இடங்கள் அனேகமாக தனிப்பட்ட வதிவிடங்கள் என்பதுடன், அப்போதைய மத விவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சினால் வழங்கப்பட்ட 2008 சுற்றறிக்கையொன்றின் கீழ் வழிபாட்டு இடங்களாக பதிவுசெய்யப்படவில்லை. இரண்டாவது, இந்த வழிபாட்டு இடங்களை மூடிவிடுமாறு அல்லது ஆராதனைக் கூட்டங்களை அல்லது மத ஆராதனைகளை இடைநிறுத்துமாறு அரசாங்க அலுவலர்களை உள்ளூர் பௌத்த மதகுருமார் அடிக்கடி தூண்டினார்கள். பொலிஸ் அலுவலர்களின் அல்லது வேறு அரசாங்க அலுவலர்களின் முன்னிலையில் போதகர்களையும், தேவாலயங்களின் உறுப்பினர்களையும் பௌத்த பிக்குகள் அடிக்கடி வாய்மொழிமூலமாகத் தூஷித்தனர். சனசமூகத்தினுள் கிறிஸ்தவ மதத்தை பெருக்குவதையே இந்த மதச் செயற்பாடுகள் கொண்டுள்ளன என்ற பௌத்த மனவிசாரமே இந்த எதிர்ப்பின் மையத்தில் உள்ளது. மூன்றாவது, அரசாங்க அலுவலர்கள், குறிப்பாக பொலிஸ் அலுவலர்கள் கிறிஸ்தவப் போதகர்களையும், ஆராதனையாளர்களையும் அச்சுறுத்துவதிலும், பயமுறுத்துவதிலும் அத்துடன் மதச் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு கட்டளையிடுவதிலும் தீவிரமான வகிபங்கொன்றை எடுத்தனர்.

இந்த அம்சங்கள் குறிப்பிட்ட அமைப்பொன்றில் கிறிஸ்தவ எதிர்ப்பு வன்முறை இடம்பெறுகின்றது என்ற உண்மையைச் சித்தரிக்கின்றன. வன்முறைகள் தீவிரத்தன்மையில் அனேகமாக

குறைந்ததாகும். இருந்தும் அது தொடர்வதுடன், சில வேளைகளில் முறைமையான நிலையில் விளங்குகிறது. கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்களில் இப்போக்குகள் மத வன்முறையின் தன்மையில் சில முக்கியமான வேற்றுமைகளைப் பிரதிபலிக்கின்றன. அத்தகைய வேற்றுமைகள் இந்த ஆய்வில் பின்னர் பிரதிபலிப்பதுடன், இலங்கையில் மத வன்முறையின் ஆழமான புரிந்துணர்வொன்றையிட்டு முடிவெடுப்பதில் பயனுள்ளதாகும்.

### *2.5 மதத் தாக்குதல்களின் குடித்தொகையியல் படமிடல்*

இனத்துவத்தினதும், மதத்தினதும் பிரகாரம், அதன் பரவலாக்கத்தின் காரணமாக 'இனத்துவ-மதக் கட்டமைப்பு ஒன்றாக' இலங்கையின் சமூகம் விபரிக்கப்படுகின்றது.[73] 2012இல் அண்மைய குடிசனக் கணக்கெடுப்பின் பிரகாரம், சனத்தொகையில் அண்ணளவாக 74.9 சதவீதத்தைச் சிங்களவர்கள் கொண்டுள்ளார்கள். சனத்தொகையில் 15.2 சதவீதத்தை தமிழர்களும் (தோட்டத் துறையில் தளத்தைக் கொண்ட 4 சதவீதம் உட்பட), 9.2 சதவீதத்தை முஸ்லிம்களும் கொண்டுள்ளார்கள்.[74] இதனிடையே, 70 சதவீதத்திற்கு மேற்பட்ட சனத்தொகையினர் பௌத்த மதத்தைக் கொண்டவர்களாக உள்ள அதேவேளை, இந்துக்கள் 12.6 சதவீதத்தினராவர். சனத்தொகையில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் முறையே 9.7 சதவீதமாகவும், 7.4 சதவீதமாகவும் விளங்குகிறார்கள்.[75]

2013இனதும், 2014இனதும் போது மதத் தாக்குதல்கள் மீதான தரவுகள் சில போக்குகளையும், பாணிகளையும் வெளிப்படுத்துவதற்கு பகுப்பாயப்படலாம். இப்பகுப்பாய்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை வருமாறு: முதலாவதாக, அவை இடம்பெற்ற பிரிவுச் செயலாளர் பிரிவின் பிரகாரம் சகல தாக்குதல்களும் வகைப்படுத்தப்பட்டன. அடுத்ததாக, 2012இல் சனத்தொகைக் கணக்கீடு, புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சனத்தொகைத் தரவுகள் மதத்தின் மூலம் ஒவ்வொரு பிரதேசச் சபைப் பிரிவிலும் உள்ள சனத்தொகைகளைப் பிரிப்பதற்காகப் பகுப்பாயப்பட்டன. ஒவ்வொரு பிரிவுச் செயலாளர் பிரிவின் குடித்தொகையியல் புறவரையை உறுதிப்படுத்துவதற்காக, அதாவது மதப் பரவலாக்கத்தினாலும், மதச் சிறுபான்மையினரின் செறிவினாலும் சனத்தொகைத் தரவுகள் மேலும் பகுப்பாயப்பட்டன.

**மதப் பரவலாக்கம்:**

| | | |
|---|---|---|
| உயர்வான | - | இரண்டுக்கு மேற்பட்ட மதச் சனசமூகங்கள் >10%ஐக் கொண்ட சனத்தொகைப் பங்குகளைக் கொண்டுள்ளன. |
| நடுத்தர | - | இரு மதங்கள் >10% ஐக் கொண்ட சனத்தொகைப் பங்குகளைக் கொண்டுள்ளன. |
| குறைந்த | - | ஒரு மொழி மட்டுமே >10%ஐக் கொண்ட சனத்தொகை பங்குகளைக் கொண்டுள்ளது. |

**மதச் சிறுபான்மையினரின் செறிவு:**

| | | |
|---|---|---|
| உயர்வான | - | மதச் சிறுபான்மையினர் (அதாவது பௌத்தம் சாராதோர்) சனத்தொகையின் >66%ஐ அடக்குகின்றனர். |
| நடுத்தர | - | மதச் சிறுபான்மையினர் <66%ஐ அடக்குகின்றனர். ஆனால், சனத்தொகையின் >33% ஆகும். |
| குறைந்த | - | சனத்தொகையின் <33%ஐ மதச் சிறுபான்மையினர் அடக்குகின்றனர். |


பின்னர், குறிப்பிட்ட பிரிவுச் செயலாளர் பிரிவொன்றின் வன்முறையின் நிகழ்வுக்கும், அப்பிரிவின் குடித்தொகையியல் புறவரைக்கும் இடையிலான ஏதேனும் பரஸ்பர சம்பந்தம் உள்ளதா என்பதைச் சோதிப்பதற்கு தரவுகள் பகுப்பாயப்பட்டன. முடிவுகள் கவர்கின்றதன்மையிலான போக்கொன்றைச் சித்தரித்தன.

2013இலும், 2014இலும் நாட்டைச் சுற்றியுள்ள 88 பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் மதத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இந்த பிரிவுச் செயலாளர் பிரிவுகள் அவற்றின் மதப்

[73] See Sasanka Perera, *The Ethnic Conflict in Sri Lanka: A Historical and Sociopolitical Outline*, World Bank (February 2001), at 11.
[74] Department of Census & Statistics, Sri Lanka, *Population by ethnic group according to districts* (2012).
[75] *Ibid*.

பரவலாக்கத்திற்கும், மதச் சிறுபான்மையினரின் செறிவுக்கும் ஏற்ப புறவரைப்படுத்தப்பட்டுள்ளது. மதத் தாக்குதல்களின் பரவுகையைப் பின்வரும் விளக்கப்படம் சித்தரிக்கின்றது:

**உருபு 13: மத சிறுபான்மையினர்/பரவலாக்கல் புறவரையினால் பிரிவுச் செயலாளர் பிரிவுகளின் வகைப்படுத்தல்**




அவற்றின் குடித்தொகையியல் புறவரையினால் பிரிவுச் செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கையை மேற்படி உருபு சித்தரிக்கின்றது. மதத் தாக்குதல்கள் பதிவுசெய்யப்பட்ட 88 பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் 45 பிரிவுச் செயலாளர் பிரிவுகள் 'LL' ஆகும், அதாவது **Low** religious diversity (குறைந்த மதப் பரவலாக்கம்) மற்றும் **Low** Concentration of religious minorities (மத சிறுபான்மையினரின் குறைந்த செறிவு). 19 பிரிவுச் செயலாளர் பிரிவுகள் 'ML' ஆகும். அதாவது **Medium** religious diversity (நடுத்தர மதப் பரவலாக்கம்) மற்றும் **Low** Concentration of religious Minorities (மத சிறுபான்மையினரின் குறைந்த செறிவு). இந்த இரு குடித்தொகையியல் புறவரைகளும் மதத் தாக்குதல்கள் இடம்பெற்ற சகல பிரிவுச் செயலாளர் பிரிவுகளின் 72%க்கு மேல் பிரயோகிக்கப்பட்டன. நாட்டில் உள்ள எஞ்சியுள்ள 240 பிரிவுச் செயலாளர் பிரிவுகள் முழுவதும் முழுமையான பரவலாக்கத்தின் பங்கீட்டினதும், மதச் சிறுபான்மையினரின் செறிவினதும் பகுப்பாய்வொன்று 'LL' மற்றும் 'ML' ஆகிய பிரிவுகளில் மதத் தாக்குதல் இடம்பெறுவதற்கான உண்மையில் குறிப்பிட்டதொரு மனோபாவம் உள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

குறிப்பிட்ட இனத்துவச் சிறுபான்மையொன்றின் உயர்வான செறிவுடன், ஆனால் குறைந்த பரவலாக்கத்துடனான பிரிவுச் செயலாளர் பிரிவில் வன்முறை குறைந்தளவிலேயே வியாபித்துள்ளது என்ற உண்மையே இந்த அவதானிப்பினை மிகவும் சிக்கலாக்கச் செய்கின்றது (உதாரணமாக, பிரிவில் உயர் செறிவிலான இந்துக்கள் இருக்குமிடத்து, வேறு மதக் குழுக்களின் குறைந்தளவிலான செறிவு). எனவே, 2013இலும், 2014இலும் பதிவு செய்யப்பட்ட மூன்றில் இரண்டுக்கு மேற்பட்டவை ஒன்றில் சிறுபான்மையினரின் குறைந்த செறிவுகளுடன் அல்லது குறைந்த அல்லது நடுத்தர பரவலாக்கத்துடன் பெரும்பான்மையிலான பௌத்தப் பிரிவுகள் இடம்பெற்றுள்ளதாகத் தோன்றுகின்றது.

எனவே, எதிர்கால ஆராய்ச்சியில் அனேகமாக மேலும் ஆராய்வதற்கு பெறுமதியான போக்கொன்று அதாவது தரவுகளிலிருந்து போக்கொன்று தோன்றியுள்ளது. மதச் சிறுபான்மையினரின் சார்புரீதியில் குறைந்த செறிவுகளுடனும், அத்துடன் மதப் பரவலாக்கத்தின் குறைந்த அல்லது நடுத்தர

மட்டங்களுடனும் உள்ள பெரும்பாலான பகுதிகளிலேயே மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் இடம்பெறுவதாகத் தோன்றுகின்றது. இதனிடையே, பரவலாக்கல் மட்டங்கள் உயர்வான அல்லது மதச் சிறுபான்மையினரின் செறிவுகள் ஒன்றில் உயர்வான அல்லது நடுத்தர மட்டங்கள் உள்ள பகுதிகளிலேயே சில தாக்குதல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பின்வரும் பிரிவுச் செயலாளர் பிரிவுகள் 'LL' அல்லது 'ML' பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

**அட்டவணை 2: LL புறவரைகளுடன் மாவட்டங்கள் மற்றும் பிரிவுச் செயலாளர் பிரிவுகள்**

| மாவட்டம் | பிரிவுச் செயலாளர் பிரிவு |
|---|---|
| அம்பாறை | மஹாஓய |
| | அம்பாறை |
| அனுராதபுரம் | மதவாச்சி |
| பதுளை | மஹியங்கனை |
| கொழும்பு | மஹரகம |
| | ஹோமகம |
| | பாதுக்கை |
| காலி | பெந்தோட்டை |
| | எல்பிட்டிய |
| | இம்மாதுவ |
| | ஹிக்கடுவ |
| கம்பஹா | தொம்பே |
| ஹம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை |
| | அங்குனுகொலபெலஸ்ஸ |
| | தங்காலை |
| | சூரியவெவ |
| | வீரகட்டிய |
| | வலஸ்முல்ல |
| களுத்துறை | களுத்துறை |
| | இங்கிரிய |
| கண்டி | யட்டிநுவர |
| | ஹத்தரலியத்த |
| கேகாலை | வறக்காபொல |
| | ரம்புக்கணை |
| | ருவான்வெல்ல |
| | கேகாலை |
| | அறனாயக்க |
| குருநாகல் | நாரம்மல |
| | இப்பாகமுவ |
| | கல்கமுவ |
| | மஸ்பொத்த |
| மாத்தளை | தம்புள்ளை |
| | நாவுல |

| | |
|---|---|
| மாத்தறை | மாத்தறை |
| | அக்குரஸ்ஸ |
| | திக்வெல்ல |
| மொனராகலை | செவனகல |
| | புத்தள |
| பொலன்னறுவை | திம்புலாகல |
| இரத்தினபுரி | ஓபநாயக்க |

**அட்டவணை 3: ML புறவரைகளுடன் மாவட்டங்கள் மற்றும் பிரிவுச் செயலாளர் பிரிவுகள்**

| மாவட்டம் | பிரிவுச் செயலாளர் பிரிவு |
|---|---|
| அனுராதபுரம் | மல்வத்துஓய |
| | பலகல |
| | கெக்கிராவை |
| கொழும்பு | மொரட்டுவை |
| | ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே |
| கம்பஹா | மஹர |
| | களனி |
| | கம்பஹா |
| ஹம்பாந்தோட்டை | ஹம்பாந்தோட்டை |
| களுத்துறை | பாணந்துறை |
| கண்டி | ஹரிஸ்பத்துவ |
| கேகாலை | மாவனல்ல |
| | புளத்கொஹுபிட்டிய |
| குருநாகல் | குளியாப்பிட்டி கிழக்கு |
| | குருநாகல் |
| | மல்லவபிட்டிய |
| | ரிதிகம |
| மாத்தறை | கொடபொல |
| | வெலிகம |
| இரத்தினபுரி | பலாங்கொடை |
| | இரத்தினபுரி |
| திருகோணமலை | கந்தளாய் |

மத வன்முறையில் போக்குகளுக்கான மேலும் ஒரு பரிமாணம் கரிசனைக்கெடுக்கப்பட வேண்டும். இரு விடய ஆய்வுகளிலும் சித்தரிக்கப்பட்டுள்ளவாறு, வன்முறையில் சில 'தொடர் நிகழ்வு' நிகழ்ச்சிகளுக்கு மதரீதியில் பரவலான பகுதிகள் ஊறுபடுகின்றன. இது அனேகமாக அவற்றின் தீவிரத்தன்மையைப் பொறுத்தளவில் வேறு சம்பவங்களை மீறுகின்றன. கிராண்ட்பாஸும், அளுத்கமவும் சார்புரீதியில் உயர் மட்டங்களிலான பரவலாக்கத்தையும், மதச் சிறுபான்மைச் செறிவுகளையும் கொண்டுள்ளன. கொழும்பு பிரிவுச் செயலாளர் பிரிவில் கிராண்ட்பாஸ் அமைந்துள்ளதுடன், இது 'HH' புறவரையைக் கொண்டுள்ளது. அதேவேளை, பேருவளை பிரிவுச் செயலாளர் பிரிவில் அளுத்கம அமைந்துள்ளதுடன், இது 'MM' புறவரையைக் கொண்டுள்ளது. இப் பகுதிகள் வழமையாக மதத் தாக்குதல்களின் குறைந்த வீதங்களைக் கொண்டுள்ளன. இருந்தும், இடையிடையே தீவிரமான வன்முறையின் தொடர் நிகழ்வுகளை முன்வைக்கின்றன.

### *2.6 தீராத மற்றும் கடுமையான வன்முறை*

நாம் 'LL' அல்லது' 'ML' பிரிவுகளில் அவதானித்த வன்முறையின் வகைகளுக்கும், கிராண்ட்பாஸிலும், அளுத்கமவிலும் அவதானிக்கப்பட்ட தொடர் நிகழ்விலான வன்முறைக்கும் இடையில் வேற்றுமையொன்று ஈர்த்தெடுக்கப்படலாம். முன்னையது பிரதானமாக குறைந்த-தீவிரத்திலான வன்முறையின் அமைப்பொன்று என்பதுடன், இது 'தீராத' வன்முறையாக விபரிக்கப்படலாம். 2013இலும், 2014இலும் இலங்கையில் இடம்பெற்ற சகல மதத் தாக்குதல்களிலும் 90%க்கு மேற்பட்டவற்றை அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல், தாக்குதல், ஆதனங்களுக்கு சிறிய சேதம் மற்றும் வெறுப்பு இயக்கங்கள் மற்றும் பிரச்சாரங்கள் ஆகியனவற்றைக் கொண்டுள்ளன. இந்தத் தாக்குதல்கள் அவற்றின் குறைந்த தீவிரத்தன்மையிலான மட்டங்களில் தொடர்கின்ற காரணத்தினாலும், வன்முறையில் பரவலான காட்சித்தோற்றப்பாடுகளுக்கு அற்பமாகவே உயர்வடைவதனால் அதாவது இனவாதக் கலவரமொன்றின் போது அவதானிக்கப்பட்ட விஸ்தாரமான வன்முறையின் வகையிலானவை என்ற உண்மையினாலும் 'தீராதவையாகச்' சித்தரிக்கப்பட முடியும். தென் மாகாணத்தில் கிறிஸ்தவர் எதிர்ப்பு தாக்குதல்கள் மீதான புவியியல்ரீதியிலான விடய ஆய்வில் மீட்டுப்பார்க்கப்பட்ட சம்பவங்கள் இந்த தீராத வன்முறையின் வகுதிக்குள் வருகின்றன. வன்முறையை எதிர்நோக்குவதற்கு 'LL' மற்றும் 'MM' பிரிவுகள் சார்புரீதியில் மிகவும் ஊறுபடக்கூடியவை என்ற முடிவானது தீராத வன்முறைக்கு கருத்தினை வழங்குவதற்கு தகுதியைப் பெறவேண்டும். மறுதலையாக, வன்முறையின் பின்னைய தொடர் நிகழ்விலான அமைப்புத்தன்மையில் இங்கும் அங்கும் நிகழ்வதுடன், தீவிரத்தன்மையில் உயர்வானது என்பதுடன் 'கடுமையான' வன்முறையாகவும் விபரிக்கப்படலாம். அவசியமான பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகள், தூண்டுவோர் மற்றும் தூண்டப்படும் நிகழ்ச்சிகள் ஆகியனவற்றில் தங்கி எங்கும் அத்தகைய வன்முறை இடம்பெறலாம். இவ்வாறாக, உயர் மட்டங்களைக் கொண்ட பரவலாக்கத்துடனும், மதச் சிறுபான்மையினரைக் கொண்ட உயர்வான செறிவுடனானதுமான பகுதிகளில் கடுமையான வன்முறை இடம்பெறலாம்.

தீராத மற்றும் கடுமையான வன்முறையைப் புறம்பாக்கும் கோடு எப்பொழுதுமே தெளிவானதல்ல என்பதை அனுமதிக்க வேண்டும். உதாரணமாக, 2014 ஜனவரி 12 அன்று பௌத்த பிக்குகளினால் வழிநடத்தப்பட்ட அண்ணளவாக 300 பேர்களைக் கொண்ட கும்பலொன்று 'LL' பிரிவொன்றான ஹிக்கடுவையில் இரு தேவாலயங்களைத் தாக்கி, சேதமாக்கியது. வன்முறையின் ஏதாவது வகைப்படுத்தலினுள் சம்பவம் ஒழுங்காகப் பொருந்தவில்லை. மேலே விடய ஆய்வில் மீளக்கணக்கிடப்பட்ட ஹிக்கடுவையின் தீராத வன்முறையின் குறிப்பான தருணத்தின் பின் உடனடியாகச் சம்பவம் நடைபெற்றது. இவ்வாறாக, பின்னையதன் இங்கும் அங்குமான வெடிப்புக்களினால் அடிக்கடி பின்தொடரப்படும் முன்னையதன் நிலைத்திருக்கத்தக்க காலவரைகளை அது உறுதிப்படுத்துவதனால், தீராத மற்றும் கடுமையான வன்முறைக்கு இடையிலான உறவை அது சித்தரிக்கின்றது.

இருந்தும், கிராண்ட்பாஸில் அல்லது அளுத்கமவில் காணப்பட்ட வன்முறையின் அளவுடனும், தீவிரத்தன்மையுடனும் ஹிக்கடுவை சம்பவம் ஒப்பிடப்படுவதில்லை. எனவே, கடுமையான வன்முறையாகச் சம்பவமொன்றை வகைப்படுத்துமுகமாக, தீவிரத்தன்மையின் உயர்வான ஆரம்பமொன்றை (அனேகமாக தாக்குதலில் பங்கெடுப்பவர்களினதும், அதில் பாதிக்கப்பட்டவர்களினதும் எண்ணிக்கையுடன் சேர்த்து சேதத்தின் அளவினால் நிர்ணயிக்கப்படுகின்றது) முன்வைப்பது முக்கியமானதாகும். அத்தகையதொரு ஆரம்பம் பிரயோகிக்கப்பட்டால், உயர்வான அல்லது நடுத்தரத்திலான பரவலாக்கல் பகுதிகளில் கடுமையான வன்முறை பெரிதும் அனேகமாக இடம்பெறும். அக்குழுவின் நியாயமான உயர்

செறிவொன்று மதக் குழுவொன்றுக்கு எதிராகப் பரவலான வன்முறை அவசியப்படுவதனால் இப் போக்கானது உள்ளுணர்வு கொண்ட உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. வெறுமனே பரவலான தாக்குதல்கள் உறுதிப்படுத்துவதற்கு இலக்குப்படுத்தப்பட்ட குழு பாரியதல்ல என்ற காரணத்தினால் தீராத வன்முறையைப் பரவலாக்கத்தின் குறைந்த மட்டங்களுடனான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. மறுதலையாக, கணிசமானளவு சிறுபான்மைச் சனத்தொகையொன்றுடன் உயர்வான பன்னிலையிலான பகுதியொன்று விரைவிலேயே வன்முறையின் பரவலான தீராத அமைப்பொன்றாக உயர்வடையும். அடுத்த பிரிவில் கலந்துரையாடப்பட்டவாறு, இந்தப் பன்னிலையிலான பகுதிகளை ஊறுபடுத்தலிலிருந்து கடுமையான வன்முறைக்கு உட்படுத்துகின்ற பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளை ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவு அனேகமாக முன்வைக்கின்றது. கிராண்ட்பாஸிலும், அளுத்கமவிலும் காணப்பட்டவாறு, அத்தகைய வன்முறை அனேகமாக தூண்டப்பட்ட சம்பவமொன்றினாலும், ஒழுங்குபடுத்தப்பட்ட வெறுப்புக் குழுக்களின் தூண்டலினாலும் இடம்பெறுகின்றன.

வன்முறையின் தீராத மற்றும் கடுமையான அமைப்புக்களுக்கு இடையிலான வேற்றுமையையும் குறிப்பிட்ட குடித்தொகையில் குணவியல்புகளுடனும், சூழமைவுகளுடனும் பகுதிகளில் அவை வியாபித்திருத்தலையும் புரிந்துகொள்வதே வன்முறையை எதிர்காலத்தில் தடுப்பதற்கு முக்கியமாகும். எதிர்காலத் தலையீடுகளை வடிவமைப்பது தொடர்பில் அத்தகையதொரு புரிந்துணர்வு கொள்கைவகுப்பவர்களுக்கு உதவியளிக்கக்கூடும். அத்தகைய புரிந்துணர்விலிருந்து சட்டத்தை வினைப்படுத்தும் அதிகாரவர்க்கத்தினரும், அமைதியைக் கட்டியெழுப்பும் முன்னெடுப்புகளும் நன்மையை அடையக்கூடும். இந்த ஆய்வின் முடிவுரைப் பிரிவு இது தொடர்பிலான சாத்தியமான தலையீடுகளைக் கலந்துரையாடுகின்றது.

## 3. மத வன்முறையின் சூழமைவு

முன்னைய பிரிவில் கலந்துரையாடப்பட்டவாறு, 2013இலும், 2014இலும் மதத் தாக்குதல்களில் பிரவாகமானது நாட்டில் சிறுபான்மை எதிர்ப்பு உணர்வுகளில் குழப்புகின்ற போக்கொன்றை வெளிப்படுத்தியது. இந்த இரு வருடங்களின் போது, தொடர் நிகழ்விலான வன்முறையை நோக்கிய உயர்வானது நிலைத்திருக்கத்தக்க வெறுப்பு இயக்கங்களினால் அனேகமாக முந்திக்கொண்டது. அதன் காரணமாக, தீராத மற்றும் கடுமையான வன்முறைக்கு இடையிலான உறவு மீள்வலுவூட்டப்பட்டுள்ளது. உதாரணமாக, முஸ்லிம் சனசமூகத்திற்கு எதிராகப் பெருமளவு வெறுப்பு இயக்கங்களை BBS நடத்தியது.[76] இயக்கம் பெரிதுமே வெற்றியடைந்ததுடன், உள்ளூர் சந்தைக்கான சகல உற்பத்திப்பொருட்களிலிருந்து *ஹலால்* சான்றுப்பத்திரங்களை அகில இலங்கை ஜமாய்த்துள் உலாமா மீளப்பெறுவதை விளைவித்தது.[77]

முஸ்லிம் சனசமூகத்திற்கு எதிரான வெறுப்பு இயக்கங்களையும், பிரச்சாரத்தையும் அத்துடன் மதக் கெடுபிடிநிலைகளின் உறுதியான உயர்ச்சியையும் கொண்ட மாதங்களின் உச்சநிலையே அனேகமாக 2014 ஜூன் மாதத்தில் அளுத்கம கலவரங்களாகும். உயர்வடையும் கெடுபிடிநிலைகளின் உண்மையில் அளுத்கம உச்சநிலையென்றால், அந்த கெடுபிடிநிலைகள் எழுந்த சூழமைவின் பரந்த எல்லை அமைப்புக்களை அவிழ்ப்பது முக்கியமானதாகும். இதன் பிரகாரம், பின்வரும் உப-பிரிவுகள் இலங்கையில் மத வன்முறைக்கான சூழமைவிலான பின்னணியை ஆராய்கின்றது. எனினும், சூழ்நிலைகளின் அல்லது காரணிகளின் தனித்த இழையொன்று வன்முறைக்கு விளக்கமளிக்க முடியாது என்பது குறித்துக்கொள்ளப்படுகின்றது. யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்தில் மதக் கெடுபிடிநிலைகளின் உயர்ச்சியையும், மத வன்முறை தோன்றுவதையும் நோக்கி பலதரப்பட்ட சூழமைவிலான காரணிகளின் இணைப்பொன்று பங்களித்தது என்பது மிகவும் நேரிடக்கூடியதாகத் தோன்றுகின்றது. இவ்வாறாக, பின்வரும் பிரிவுகளில் பலதரப்பட்ட சூழமைவுகளில் வெளிப்படைத் தோற்றத்தை பல கூறுகளாகப் பிரித்தல் (அதாவது வரிசைக் கிரமமாக சமூக-கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகள்) இரு சூழமைவிலான காரணிகளுக்கு இடையில் அனேகமாக இடம்பெறுகின்ற இடைவிளைவையும் மற்றும் பரஸ்பர மீள்-வலுவூட்டலையும் குறைத்துக் கூறுவதாக விளங்கக்கூடாது.

### *3.1 சமூக-கலாசாரச் சூழமைவு*

பௌத்த பிக்குகளினால் மகாவம்சத்தில் உள்ள வரலாற்றை மீளக்கூறுதலானது 'பௌத்த மதத்தையும், சிங்கள தேசத்தையும் பாதுகாப்பதற்கு' பொறுப்பேற்கப்பட்ட இயக்கங்களாக சிங்கள ஆட்சியாளர்களினால் நடத்தப்பட்ட யுத்தங்கள் சித்தரிக்கப்படுவதையிட்டு சசங்க பெரேரா தனது அவதானத்தை வெளியிட்டுள்ளார்.[78] இந்தப் பொறுப்புக்கள் பின்னர் சிங்களப் பெரும்பான்மையினரின் உணர்வுப்பூர்வத்தன்மையில் ஆதிக்கம் செலுத்தியதுடன், சமகால இலங்கையின் சமூகக் கட்டமைப்பில் முக்கியமானதொரு அம்சத்தையும் அமைத்தது.[79] பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியின் போது தோன்றிய பௌத்த எதிர்ப்பு இயக்கமொன்றிலிருந்தே சிங்கள-பௌத்தத்தின் இந்த வரலாற்றினைப் பரப்புவதற்கான உத்வேகம் வந்தது. 1984இல் சுதந்திரத்தை இலங்கை பெற்ற நேரத்திற்குள் சிங்கள-பௌத்த தேசியவாதம் அதிகாரமுள்ள சித்தாந்தத்திலான சக்தியொன்றாக வந்தது.[80]

அதன் பின்னர், பாடசாலைப் பாடப்புத்தகங்கள் உட்பட கல்விசார் பாடவிதானம் சிங்கள-பௌத்த தேசமொன்றின் வரலாற்றை மீள்வலுவூட்டியது. தரம் 6 வரலாற்று பாடப்புத்தகத்தில் அத்தியாயம் 6 BCE 161க்கும் 137க்கும் இடையில் ஆட்சியாளர் ஒருவரான துட்டகைமுனு எவ்வாறு தமிழ் ஆட்சியாளர் ஒருவரான எல்லாளனைத் தோற்கடித்தார் என்பதைப் பற்றிய விபரமொன்றை விளக்குகின்றது. தமிழ் ஆட்சியாளர் 'வெளிநாட்டவர்' என்றும் 'வெளிநாட்டு ஆட்சியிலிருந்து நாட்டை விடுப்பதையும்,' 'நாட்டை மீள்-ஐக்கியப்படுத்துவதையும்' அத்துடன் 'பௌத்த மதத்தை

[76] See Dharisha Bastian, 'This is a Sinhala country, Sinhala Government": Bodu Bala Sena' *Daily FT*, 18 February 2013, at http://www.ft.lk/2013/02/18/this-is-a-sinhala-country-sinhala-government-bodu-bala-sena.

[77] See Kelum Bandara, 'Govt. to formulate new Halal mechanism'. *The Daily Mirror*, 14 March 2013.

[78] Sasanka Perera, *op. cit.* at 4.

[79] *Ibid*. at 8.

[80] Richard Gombrich & Gananath Obeyesekere, *Buddhism Transformed: Religious Change in Sri Lanka* (1988), at 202-238.

பாதுகாப்பதையும்' சிங்கள ஆட்சியாளர் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் என்றும் வலியுறுத்துவதன் மூலம், மகாவம்சத்திலிருந்து நேரடியாக ஆரம்பித்தாக பாடம் குறிப்பிடுகின்றது. அக்கறையையெழுப்பும் விதத்தில், தமிழர்களையும், முஸ்லிம்களையும் உள்ளடக்கும் சிங்களம் பேசாத மாணவர்களுக்கு கருத்தினைக் கொண்ட பாடப்புத்தகத்தின் தமிழ் வாசகம் சிங்கள வாசகத்திற்கு வேறுபட்ட ஒழுங்குமுறையைக் கொண்டுள்ளது. உதாரணமாக, சிங்கள வாசகத்தில் அத்தியாயத்தின் முடித்து வைக்கும் வரியானது 44 வருடங்களில் முதல் தடவையாக துட்டகைமுனு நாட்டை 'வெளிநாட்டு' ஆட்சியிலிருந்து விடுவித்து, அதை ஐக்கியப்படுத்தினார் எனக் குறிப்பிடுகின்றது. தமிழ் வாசகத்தில் ஒத்திசைவான வரியானது 44 வருடங்களில் முதல் தடவையாக துட்டகைமுனு 'நீதியுடன்' ஆட்சி செய்த அனுராதபுரத்தைக் கைப்பற்றியதாகக் குறிப்பிடுகின்றது.[81]

சுதந்திரத்திற்கு முன்னரேயே இலங்கையின் சமூக மற்றும் அரசியல் வாழ்க்கையில் அதிகாரமுள்ள சித்தாந்தரீதியிலான சக்தியொன்றாக சிங்கள-பௌத்த தேசியவாதம் தோன்றியதாக எழுத்தாளர்களான ரிச்சர்ட் கொம்ரிச் (Richard Gombrich) மற்றும் கணநாத் ஒபேசேகர ஆகியோர் தமது அவதானத்தை வெளியிட்டுள்ளனர். பாரம்பரியமான பௌத்த கோட்பாடுகள் புதிய இனத்துவ-மதச் சித்தாந்தத்துடன் உடைந்ததுடன், பௌத்த மதத்தின் ஒரு புதிய 'கண்டனத்திலான' அமைப்பு உருவாகியது. இது சிங்கள-பௌத்த தேசமொன்றின் கருத்துக்கு மிகவும் அதிகளவில் இணக்கமானதாகும்.[82] இது தொடர்பில், சிங்கள-பௌத்த தேசத்தைப் பாதுகாக்கும் நோக்கத்திற்கான அதிகாரத்தைப் பயன்படுத்துவது எல்லாளனை துட்டகைமுனு தோற்கடித்த விடயத்தைப் போன்றவாறு, தள்ளிவைக்கப்பட்டது. 1915இல் கண்டியில் பௌத்த பேரணியொன்றை முஸ்லிம்கள் குழப்பியதன் விளைவொன்றாக இலங்கையில் கலவரங்கள் வெடித்த போது, பௌத்த மதத்துடன் வன்முறை இணைந்திருந்தது.[83] இருந்தும், பரவலான சமூக-கலாசார அல்லது கலவரங்களுக்கான அரசியல் உந்துசக்தி ஆகியவற்றைப் பௌத்த தேசியவாதத்துடன் தொடர்புபடுத்துவதை சுட்டிச்சொல்வதற்கு சான்று இருக்கவில்லை. இத் தொடர்பு பெரிதும் பின்னர் படிமமாகியது. சுதந்திரத்திற்கு பின்னரான சகாப்தத்தின் போது சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் தோற்றத்தையும், ஒன்றுதிரட்டலையும் கவனமாக காலக்கிரமவரிசையில் தொகுக்கும் போது, 'பௌத்த தாபனத்தின் மையத்தில் வன்முறை' (ஏற்படுவதற்கு) வேர்விடுவதற்கு சித்தாந்தம் காரணமாக இருந்ததாக கொம்ரிச் மற்றும் ஏனையோர் விவாதிக்கின்றனர். நாட்டின் வடக்கிலும், கிழக்கிலும் ஓரளவு-தன்னிச்சையிலான தமிழ்ப் பிராந்தியமொன்றை வழங்குவதை 1987இன் இந்திய-இலங்கை ஒப்பந்தம் வலியுறுத்தியதற்கு பௌத்த குருமாரின் மூர்க்கத்தனமான பிரதிபலனின் தொடர்பில் இந்த அவதானிப்பு வெளியிடப்பட்டது.[84] இந்த அவதானிப்பை சூழ்நிலைக்கு பொருந்தச்செய்யும் போது, அகிம்சையின் மதக் கருத்துக்களுக்கு முற்றிலும் மாறான தன்மையில் ஏன் இன-தேசியவாத வன்முறை தோன்ற முடியும் என்பதை விளக்குவது முக்கியமானதாகும்.[85]

---

[81] According to R.A.L.H. Gunawardana's interpretation of the original Mahāvamsa text and alternative historical sources, Dutugemunu's campaign was unlikely to have been a 'Sinhala-Tamil confrontation'. Gunawardana argues that the campaign was merely aimed at capturing territory—not only from Elara, but also from multiple other regional rulers. See R.A.L.H. Gunawardana, 'The People of the Lion: The Sinhala Identity and Ideology in History and Historiography' (1979) 5(1) & (2), The Sri Lanka Journal of the Humanities 1-36.

[82] Richard Gombrich & Gananath Obeyesekere, *Buddhism Transformed: Religious Change in Sri Lanka* (1988).

[83] Kumari Jayawardena, 'Economic and Political Factors in the 1915 Riots' (1970) 29(2) The Journal of Asian Studies 223-233.

[84] Gombrich & Obeyesekere*, op. cit.* at x.

[85] Gunatilleke, *Confronting the Complexity of Loss*, *op. cit.* at 8. The observations of Gananath Obeyesekere in 'Buddhism, Ethnicity and Identity: A Problem of Buddhist History' (2003) 10 Journal of Buddhist Ethics 192-242, at 192 is perhaps worth reproducing: 'One of the questions often asked of us scholars from educated Westerners is why Buddhism, a religion that is given to an ethic of radical non-violence, has produced a nation like Sri Lanka that has, over the last two decades, produced a culture of extreme violence. In my view this is a wrong question to ask even though it is an obvious question. Buddhism can no more than any other world religion remain immune to the larger social and economic woes that beset a nation. However, one can ask a related question: what can concerned Buddhist lay-folk and monks do to bring about a critique of contemporary life that might in turn have some effect in creating a new vision of society, one better geared to Buddhist doctrinal values, rather than one oriented towards a destructive Sinhala nationalism.'

யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தம் நாட்டில் முஸ்லிம் எதிர்ப்பு மனோபாவத்தின் தீவிரமான அதிகரிப்பொன்றுக்குச் சான்றுபகன்றது. பெருமளவு தசாப்தங்களுக்கு தமிழர்கள் மத்தியில் தேசியவாதத்தின் ஒத்திசைவிலான அமைப்பொன்றைப் பிரித்தெடுப்பது மீது ஆரம்பத்தில் நோக்கினைக் கொண்டிருந்த சிங்கள-பௌத்த தேசியவாதம், யுத்தம் முடிவடைந்தவுடன் முஸ்லிம்கள் மீது நோக்கினைக் கொண்டிருந்தது. 1981 முதல் இலங்கையில் சோனகர்களின் முழுமையான சனத்தொகைப் பங்கில் தோற்றமான அதிகரிப்பொன்றினதும் (மொத்த சனத்தொகையில் 7.05%இலிருந்து 9.23%க்கான ஓர் அதிகரிப்பு), அடுத்த பிரிவில் அதிகளவு விபரமாக ஆராயப்படும் கருத்தொன்றாக விளங்கும் பொருளாதாரத்தை முஸ்லிம்களே கட்டுப்படுத்துகிறார்கள் என்ற மனவுணர்வொன்றினதும் காரணமாக அச்சங்கள் தோன்ற ஆரம்பித்தன. இந்த அச்சங்கள், BBS போன்ற சில மிதவாத சிங்கள-பௌத்த தேசியவாத குழுக்கள் தோன்றுவதைக் கண்டன. முஸ்லிம் எதிர்ப்பு உணர்ச்சிகளை அதிகரிப்பது மீது அனேகமாக அதன் கவனத்தை முற்றுமுழுதாக இக் குழு குவியப்படுத்தியிருந்தது. வெறுப்பு இயக்கங்களிலும், ஒழுங்குபடுத்தப்பட்ட வன்முறைச் செயல்களிலும் தெற்கில் முஸ்லிம்கள் இலக்குப்படுத்தப்பட்டனர். இக் கெடுபிடிநிலைகள் அளுத்கமவில் முஸ்லிம் எதிர்ப்பு இடம்பெற்ற அதே தினத்தன்று BBS வெறுப்பு உரையினால் தூண்டப்பட்டிருந்த கலவரங்களில் உச்சநிலையை அடைந்தன. வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் செயலற்றிருந்ததுடன், வன்முறையைத் தூண்டியதாக முஸ்லிம்களை நிந்தித்த அரசாங்கம், அதன் விளைவுகளுக்கு மன்னிப்பினையும் வெளியிடவில்லை.[86]

இதனிடையே, இலங்கையின் அண்மைய வரலாற்றின் பலதரப்பட்ட கட்டங்களின் போது, கிறிஸ்தவக் குழுக்களும் வன்முறைக்கு முகங்கொடுத்தன. பிரதானமாக, 500 வருடங்களுக்கு மேற்பட்ட ஐரோப்பிய காலனித்துவத்தினதும் அத்துடன் அதனைத் தொடர்ந்து உள்ளூர் மக்களை கிறிஸ்தவர்களாக்கியதினதும் விளைவொன்றாக, கரையோரப் பகுதிகள், குறிப்பாக மேற்குப் பகுதிகள் குறிப்பிடத்தக்க கிறிஸ்தவ சனத்தொகையைக் கொண்டுள்ளன. காலனித்துக் காலங்களின் போது, ஆங்கிலம் பேசும் உயர்ந்தோர் வகுப்பினர் மிக அதிகளவில் கிறிஸ்தவர்களாக விளங்கியதுடன், பொருளாதாரச் சலுகையையும், அரசியல் ஆதரவையும் அனுபவித்தனர். இவ்வாறாக, கிறிஸ்தவர்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையில் வரலாற்றுரீதியிலான பகைமையும், இனவாதத்திலான பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளும் நிலவின. அத்தகைய கெடுபிடிநிலைகள் இடையிடையே மோதலையும் முன்வைத்தன.

கிறிஸ்தவர்களுக்கு எதிரான பரவலான அளவிலான வன்முறையானது சார்புரீதியில் குறிப்பிடத்தக்கதொன்று என்பதுடன், அதிகளவு நுட்பத்துடன் இன்னும் ஆராயப்படவும் வேண்டியுள்ளது. எனினும், மதத்தைப் பரப்புகின்ற அல்லது அடிக்கடி 'மதமாற்றம்' என பதப்படுத்துகின்ற பிரச்சனையே சனசமூகங்களுக்கு இடையிலான பிரதான கெடுபிடிநிலைக்கு ஆதாரம் என்பதையிட்டு வாதம்புரிவது சாத்தியமாகும். மதத்தைப் பரப்புவதற்கான கிறிஸ்தவ விவிலிய குறிக்கோள்கள், பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்குமான குறிக்கோளுடன் அரசியலமைப்புரீதியில் பாதுகாக்கப்படுவதனால், அடிப்படைரீதியாகச் சமமின்மைகளில் தொடர்ந்துமிருக்கின்றன. மேலே கலந்துரையாடப்பட்டுள்ளவாறு, பௌத்த மதத்தைத் தவிர, மதங்களைப் பரப்புவது நீதித்துறை உட்பட சகல அரசாங்க நிறுவனங்களினாலும் சந்தேகத்துடன் நோக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, இலங்கையில் மதத்தைப் பரப்புதவற்காக ஏதேனும் வெளிப்படையான முயற்சி, பௌத்தத்தின் சமூக-கலாசார அதிகாரத்திற்கு பயமுறுத்தலொன்றாக மனவுணர்வு கொள்ளப்படுவதுடன், கண்டிப்புடன் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014 ஜனவரி 12 அன்று ஹிக்கடுவையில் இரு தேவாலயங்கள் கும்பல்களினால் தாக்கப்பட்டு, ஆதனத்திற்கு பாரதூரமான சேதத்தை விளைவித்த போது காணப்பட்டவாறு, அத்தகைய எதிர்ப்பானது சில வேளைகளில் மூர்க்கத்தனமாகவும் மாறியுள்ளது.[87]

இது தொடர்பில், நடைமுறையிலான சர்வ-மதக் கெடுபிடிநிலைகளின் இயற்கையான உச்சநிலையொன்றே மத வன்முறையாகும். சிங்கள-பௌத்தர்களின் பெரும்பான்மை நிலையின் உண்மைநிலையினால், சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் மனவுணர்விலான வரலாற்றுரீதியிலான

[86] P.K. Balachandran, 'Sri Lankan Government Accuses Muslims, President Orders Probe', *New Indian Express*, 22 June 2014, at http://www.newindianexpress.com/world/Sri-Lankan-Government-Accuses-Muslims-President-Orders-Probe/2014/06/22/article2293193.ece.

[87] 'Video: Buddhist Monk Led Mob Attacked Christian Church', *colombotelegraph.com*, 13 January 2014, at https://www.colombotelegraph.com/index.php/video-buddhist-monk-led-mob-attacked-christian-church.

உரித்துரிமையானது முஸ்லிம் மக்களின் வளர்ச்சியினதும், பொருளாதார விஸ்தரிப்பினதும் அத்துடன் கிறிஸ்தவத்தைப் பரப்பும் குறிக்கோளினதும் மனவுணர்வுகளுடன் அடிப்படைரீதியில் சமமின்மைகளில் தொடர்ந்துமிருக்கின்றது. இந்த சமூக-கலாசார மோதல்கள் யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்தில் தோன்றிய மத வன்முறையின் அதிகளவை கீழ்க்கோடிடுகின்றது.

### *3.2 பொருளாதாரச் சூழமைவு*

இலங்கையில் இனவாத வன்முறையின் முன்னைய உச்சநிலைகளுக்கு மத வன்முறையின் பொருளாதாரச் சூழமைவு பலமான சமாந்தரங்களைக் கொண்டுள்ளது. *The Open Economy and its Impact on Ethnic Relations in Sri Lanka* என்ற தனது கட்டுரையில், '1977 ஆண்டிலிருந்தே இனத்துவ-மதக் கலவரங்கள் அதிகளவு அடிக்கடி நடந்துள்ளன' என நியூட்டன் குணசிங்க அபிப்பிராயப்படுகின்றார். 1955க்கும் 1977க்கும் இடையில் நாட்டின் பொருளாதாரத்தை நன்கு புலப்படக்கூடிய அரசியல் ஆதரவிலான கட்டமைப்பு 1977இல் பிரித்தெடுத்தது; புதியதும், எதிர்பாராததுமான கெடுபிடிநிலைகளை திறந்த பொருளாதாரக் கொள்கை முன்வைத்தது என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.[88] 1977க்கு முன், 'சிறந்த தொழிற்றுறை உரிமையாளர்களின் சில பிரிவினர் அரசியல் ஆதரவின் அடையாளமொன்றாக விசேட சலுகைகளைப் பெறுவதை எதிர்பார்க்க முடியும்'. 'அரசாங்கத்தின் கட்டுப்பாடு அகற்றப்பட்டதனால், அத்தகைய சலுகைகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறு இல்லாமல் போனது' என்பதுடன், சந்தைச் சக்திகளும், கடனின் கிட்டுந்தன்மையுமே பொருளாதார வெற்றியை நிர்ணயித்தன என குணசிங்க வாதம்புரிகின்றார்.[89] 1977க்கு முன், குறைந்த ஊதியத்தை தொழிலின் உயர்வான வீதங்கள் மற்றும் வாழ்க்கைத் தரங்களின் சீர்கேடு ஆகியவற்றினால் குறித்துக்கொள்ளப்பட்டுள்ள 'அலுவலகளின் மோசமான நிலைக்கு' அரசாங்கமே 'பொறுப்பாக காணப்பட்டது' என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.[90] இவ்வாறாக, நகர வறியவர்களினால் உணரப்பட்ட மனக்கசப்பும், பகைமையின் ஆரம்பமும் 1976இல் வேலைநிறுத்தங்களின் அலையொன்றின் உச்சநிலையை ஏற்படுத்தி, அரசாங்க எதிர்ப்பு வழிமுறையையும் எடுத்தது.[91]

1970களின் பிற்பகுதியிலும், 1980களின் முற்பகுதியிலும் சிங்களத் தொழிற்றுறை உரிமையாளர்களைவிட, குறிப்பாக நகர வறியவர்கள் மத்தியில் திறந்த பொருளாதாரத்திலிருந்து தமிழ்-பேசும் தொழிற்றுறை உரிமையாளர்கள் அதிகளவு நன்மையடைகின்றனர் என்ற கருத்து பிரதானநீரோட்டத்திற்கு வந்தது. உதாரணமாக, இந்த அம்சத்தின் பிரதிநிதித்துவமாக புறக்கோட்டைச் சந்தை நோக்கப்பட்டது.[92] மேலும், இந் நேரத்தின் போது, தனியார் துறை தொழில் விஸ்தரித்ததுடன், அரசியல் ஆதரவு மீது நம்பியிருக்காமல், தொழில்களைப் பெறுவதற்கு பிரஜைகளுக்கு புதிய வாய்ப்புக்களையும் உருவாக்கியது. இந்த நகர்வானது சிறுபான்மையினரை அனுகூலமாக்கியது என்பது கட்டாயமில்லை. எனினும், தனியார் துறையில் வேலைசெய்யும் மொழி பெரிதுமே ஆங்கிலம் என்ற உண்மையின் காரணமாக, வேறு இனத்துவக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் உட்பட ஆங்கிலம் பேசும் உயர்ந்தோர்குழாத்தினருடன் ஒப்பிடுகையில் தொழிலை நாடிய சிங்களம் பேசுவோர் சார்புரீதியில் குறைந்தளவு போட்டிக்குரியவர்களாக விளங்கினார்கள். முக்கியமாக, சிங்களம் பேசும் மக்களே அரசாங்கத் துறையில், பொதுவாக சரீரஉழைப்புப் படையில் ஆதிக்கம் செலுத்திய 1977க்கு முற்பட்ட சகாப்தத்திற்கு பெரிதும் மறுதலையாக இப்புதிய முன்னேற்றம் விளங்கியது.[93] 1977க்கு முற்பட்ட சகாப்தத்தில், வளர்ச்சியின் இயங்குசக்தியாக

---

[88] Newton Gunasinghe, 'The Open Economy and its Impact on Ethnic Relations in Sri Lanka' in Michael D. Woost (Ed.), *Economy, Culture, and Civil War in Sri Lanka* (2004), at 99.

[89] *Ibid*. at 102.

[90] *Ibid*. at 107.

[91] *Ibid*. at 108.

[92] It is noted that economic stereotypes of Tamils and Muslims as better at business, and antagonisms between majority and minority communities over business space predated 1977. Also see Jayawardena, *op. cit*. and S. J. Tambiah, *Sri Lanka: Ethnic Fratricide and the Dismantling of Democracy* (1986), at 52.

[93] Gunasinghe, *op. cit.* at 112. Also see Harini Amarasuriya, Canan Gündüz & Markus Mayer, *Rethinking the nexus between youth, unemployment and conflict: Perspectives from Sri Lanka*, International Alert (March 2009), at 19. The others observe: 'Over the last 50 years, Sri Lanka has experienced the rise of a system of extreme political patronage built upon the use of welfare-state measures as a means of ensuring votes during elections. This includes distribution of jobs within the state-controlled labour market by political elites, largely among their own party followers.'

அரசாங்கத் துறையை தனியார் துறை பதிலீடு செய்தது. இது தொடர்பில், சிங்களவர் சாராத தொழிலை நாடியவர்கள் குறிப்பாக ஆங்கிலத்தில் வல்லமை கொண்டிருந்தவர்கள் முன்னைய அரசாங்கத் துறை செலுத்தலிலான தொழில் சந்தையில் பிரதிகூலங்களுக்கு தொடர்ந்தும் முகங்கொடுக்கவில்லை. இவ்வாறாக, சிங்கள இளைஞர் தொழிலற்றவர்களாக தொடர்ந்துமே இருந்த வேளை, தனியார் துறைத் தொழில்களை சிறுபான்மையினர் பெற்றுக்கொள்கின்றனர் என்ற கருத்து உருவாக்கப்பட்டது.

1977க்குப் பிந்திய சகாப்தத்தின் போது, சிங்களச் சனசமூகங்களுக்கும், தமிழ் சனசமூகங்களுக்கும் இடையிலான அதிகரித்த கெடுபிடிநிலைகளை இந்த பொருளாதார முன்னேற்றங்கள் கீழ்கோடிட்டன. பின்னர் இந்தக் கெடுபிடிநிலைகள் 1983 ஜூலை தமிழர் எதிர்ப்பு படுகொலையில் முடிவடைந்தது. குணசிங்க பின்வருமாறு முடித்துவைக்கின்றார்:

> அரசாங்கக் கட்டுப்பாட்டுக் கட்டத்தின் போது தாம் செய்தவாறு, அரசாங்கத்திற்கு எதிராக நகர வறியவர்களைக் கொண்ட அதிருப்தியிலான பிரிவினர் தமது விரோதத்தை தொடர்ந்துமே காட்டவில்லை. அரசாங்கத்தின் பொருளாதார வகிபங்கு அவர்களுக்கு விளிம்புநிலையிலானது எனத் தோன்றியதனால், தற்போதைய குறைபாட்டுக்கான பொறுப்பைத் தாங்கிக்கொள்வதற்கு விரோதத்திற்கான ஏதேனும் சில காரணங்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். சரியாக இங்குதான் நடுத்தர மட்டத்திலான வர்த்தகர்களிலிருந்து ஆரம்பத்தில் தோன்றிய சிங்களவர் என்ற குறுகிய வெறியிலான நாட்டுப்பற்றுச் சித்தாந்தமே சிங்களவர் மத்திய பெரும் எண்ணிக்கையிலான சமூக அடுக்கை முழுவதும் விழுங்கிக்கொள்கின்ற வளமான செயற்படுமிடமொன்றைக் கண்டறிந்தது.[94]

1983 இனக் கலவரங்களுக்கும், யுத்தத்திற்குப் பிந்திய வன்முறைக்கும் இடையில் முன்வைக்கக்கூடிய பொருளாதாரச் சமநிலைகள் மனதில் பதியதக்கவையாகும். மனதில் பதியத்தக்க வளர்ச்சி தொடர்பில் புள்ளிவிபரங்கள் இருந்தபோதிலும், யுத்தத்திற்குப் பிந்திய ஆண்டுகளில் செயற்படும் இடத்தின் உண்மைநிலைகளை நுணுக்கமாக நோக்கும் போது, அது உள்ளடங்கலானதும், நிலைத்திருக்கத்தக்கதுமான வளர்ச்சியின் இன்மையொன்றைச் சுட்டிச்சொல்கிறது.[95] யுத்தத்திற்குப் பிந்திய 75% கொண்ட பொருளாதார வளர்ச்சியின் வீதமானது உண்மையில் இறக்குமதி வர்த்தகம், போக்குவரத்து மற்றும் நிருமாணம் போன்ற ஒரு சில துறைகளிலேயே செறிந்திருந்தது. மேலும், இக் காலத்தின் போது தொழிலின்மையின் உத்தியோகபூர்வ வீதம் வீழ்ச்சியடைந்திருந்த போதிலும், இறுதியாக இந்தக் குறைப்பு புலம்பெயர் தொழிலிலும், அரசாங்கத் துறை ஆட்சேர்ப்பிலும் அதிகரிப்பொன்றுக்கு சாட்டப்பட்டிருந்தது.[96] 2013இல் வெறுமனே 53.3%[97] என்ற உடலுழைப்புப்படையின் பங்கெடுப்பு வீதமானது, பொருளாதாரத்தில் தொழில் வளர்ச்சி தொடர்பில் அடிப்படைப் பிரச்சனையொன்று உள்ளதைச் சுட்டிச்சொல்கின்றது.[98]

யுத்தத்தின் இறுதியின் பின்னர், பொருளாதாரச் சுபீட்சத்தின் வாக்குறுதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தவறியமை அனேகமாக பொருத்தமான பலி ஆடொன்றை வேண்டுகின்றது.

[94] *Ibid*. at 113. It is noted that Gunasinghe's economic analysis ought to be read alongside other interpretations of the ethnic conflict. Jonathan Spencer, for example, has delved extensively into the historical and socio-political context of the conflict. He identifies both the process of ethnicisation during the colonial era and the growth of ethno-religious nationalism during the 20th century as major factors that contributed to ethnic tensions in Sri Lanka. See Jonathan Spencer, 'Introduction: the power of the past' in Jonathan Spencer (ed.), *Sri Lanka: History and the Roots of Conflict* (1990), at 8. In this context, economic tension may have been a corollary of deeper historical fault lines.

[95] Prema-chandra Athukorala & Sisira Jayasuriya, 'Victory in War and Defeat in Peace: Politics and Economics of Post-Conflict Sri Lanka' (2015) 14(3) Asian Economic Papers; World Bank, *Sri Lanka - Country partnership strategy for the period FY2013-16* (2012), at: http://documents.worldbank.org/curated/en/2012/04/16253477/sri-lanka-country-partnership-strategy-period-fy2013-16.

[96] Athukorala and Jayasuriya, *op. cit.* (2015).

[97] Central Bank of Sri Lanka, *Annual Report* 2014 (2015).

[98] 'Defence swallows UDA, substitutes for jobless growth: think tank – Allocations for education, healthcare see no growth', *The Island*, 12 March 2013, at http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=74549.

சுபீட்சத்தைக் கொண்டுவருவதற்கான கருத்தைக் கொண்டுவந்த யுத்தத்திற்குப் பிந்திய பொருளாதாரத்துடன் சமூக அதிருப்தி இருக்கும் வரை, சிங்களச் சனத்தொகையின் பரவலான பிரிவுகள் மத்தியில் வரவேற்பினை முஸ்லிம் எதிர்ப்பு இயக்கத்தினால் கண்டறிய முடியவில்லை என அகிலன் கதிர்காமர் விளக்குகிறார்.[99] 'வர்த்தக மற்றும் வியாபார வியாபார முயற்சிகளில் முஸ்லிம் சனசமூகத்தின் பிரிவினர் பலி ஆடுகளாக விளங்கினர்' என கதிர்காமர் குறிப்பிடுகின்றார்.[100] எனவே, முஸ்லிம் சனசமூகத்தின் பொருளாதார ஆதாயங்களின் ஏகபோக உரிமைத்தனத்தைப் பற்றி அறிவுப்பிறழ்ச்சிக் கலாசாரமொன்றைப் பேணுவதன் மூலம், அதன் கொள்கைகளில் உத்தேசமான விமர்சனத்தை சிதறச்செய்வதை அரசாங்கத்திற்கு இயலக்கூடியதாகவிருந்தது. மறுபுறத்தில் இஸ்லாம் மீதான பயத்தினை மேம்படுத்தும் உள்ளூர் மற்றும் உலகளாவிய கருத்தாடல்களினால் இந்த அறிவுப் பிறழ்ச்சி ஊட்டப்பட்டு, போஷிக்கப்பட்டது.[101]

தளிர்த்தெழுகின்ற சிங்கள-பௌத்த நடுத்தர வகுப்பு உண்மையில் ஆதரவின் முறைமையொன்றின் கீழ் யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்தில் சுபீட்சமடைகின்றது என்ற வாதமே இப்பகுப்பாய்வின் விதிமுறையாகும். எனவே, வெறுமனே பொருளாதாரத்தின் விடயமொன்றுக்கு மத வன்முறையில் அதிகரிப்பினைக் குறைப்பது முக்கியமானதல்ல. வேறு சனசமூகங்களை நோக்கி விரோதத்தை உச்சநிலைக்கு கொண்டுவந்து, இந்த சிங்கள-பௌத்த நடுத்தர வகுப்பின் பிரிவுகள் மத்தியில் எண்ணத்தினில் பல்-வேறு அரசியல் முன்னேற்றங்கள் ஆதிக்கம் செலுத்தின என்பது அனேகமாக நிகழக்கூடியதாகும். இதன் பிரகாரம், யுத்தத்திற்குப் பிந்திய மத வன்முறையின் வியாபித்தலைப் பரிசீலிப்பதற்கு அரசியல் கண்ணாடிவில்லையொன்றை அடுத்த பிரிவு பயன்படுத்துகிறது.

### *3.3 அரசியல் சூழமைவு*

அண்மைய கடந்த காலத்தின் போது தோன்றிய முஸ்லிம் எதிர்ப்பில் அரசியல் சூழமைவு குறித்து *'Where Have All The Neighbours Gone? Aluthgama Riots and its Aftermath'* (2014) என்ற சட்டமும், சமூகமும் நம்பிக்கைப்பொறுப்பின் (Law & Society Trust) வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[102] காலனித்துவத்திற்கு முற்பட்ட காலங்களிலிருந்து தற்போதைய யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தம் வரை அரசியல் சித்தாந்தமொன்றாகச் சிங்கள-பௌத்தத்தின் தோற்றத்தினை ஆய்வு தேடிக்கண்டுபிடிக்கின்றது. 1956இல், பிரதானநீரோட்ட அரசியலில் சிங்கள-பௌத்த மறுமலர்ச்சியொன்றை அடியெடுத்துக்கொடுப்பதற்காக சிங்கள-பௌத்த மக்களுக்கு எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க வேண்டுகோள் விடுத்தார். இந்த மறுமலர்ச்சியை சிறிதளவு விபரமாக எ.ஆர்.எம்.இம்தியாஸ் விளக்குகின்றார். 1956இல் தேர்தலில் பண்டாரநாயக்காவின் வெற்றி, முதல் தடவையாக, சிங்கள-பௌத்த அரசியல் பாரம்பரியமொன்றின் வெளிப்படையான அரசாங்க அங்கீகாரத்திற்கான சமிக்ஞையை வழங்கியது என அவர் விவாதிக்கின்றார்.[103] பெருமளவு வருடங்களின் பின், நளின் டீ சில்வா போன்ற எழுத்தாளர்கள் இந்த அரசியல் பாரம்பரியத்தைப் பரிந்து பேசியதுடன், அதை தமிழ்ப் பிரிவினைவாதத்திற்கு எதிரான யுத்தத்தை நியாயப்படுத்துவதற்கு நீடித்தனர். ஓர் ஆய்வின் கூற்றுப்படி, இலங்கையில் கண்டறியப்பட்டுள்ள பௌத்தத்தின் அமைப்பானது 'உலகின் பிரச்சனைகளுக்கு ஒரேயொரு சாத்தியமான பதிலாகப் பாதுகாக்கப்படுவது அவசியமாகும்' என அவர் விவாதிக்கின்றார்.[104] அவர் மேலும் பின்வருமாறு விவாதிக்கின்றார்: 'புத்தரின் ஒரே சீரான எண்ணமே நவீன நெருக்கடிநிலைக்குச் சிறந்த பதிலாகும். இவ்வாறான எண்ணம் இலங்கையில் தேரவாத பௌத்தத்தில் மட்டுமே பேணப்பட முடியும். ஏனெனில் சிங்களக் கலாசாரமும் ஒத்ததன்மையிலான எண்ணத்தையே கொண்டுள்ளது.[105] இது தொடர்பில், சிங்களம் சாராத பௌத்த அதிகாரக் கருத்திட்டங்களை நோக்கிய பகைமையானது

---

[99] Ahilan Kadirgamar, 'The Political Economy of Anti-Muslim Attacks', *The Island*, 2 March 2013, at http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=73829.

[100] *Ibid*.

[101] *Ibid*.

[102] Haniffa *et al., op. cit*.

[103] A. R. M. Imtiyaz, 'Politicization of Buddhism and Electoral Politics in Sri Lanka' in Ali Riaz, *Religion and Politics in South Asia* (2010).

[104] Paul Hedges, *Controversies in Contemporary Religion: Education, Law, Politics, Society, and Spirituality* (2014), at 71.

[105] *Ibid*. Also see Nalin de Silva, *Ape Pravada* (2006), at 172-175; Nalin de Silva, *Panashye Daruwo* (2005), at 40-41.

'புத்தரின் எண்ணத்தைப் பாதுகாக்கிறது' என்ற கருத்தினைக் கொண்டுள்ளதனால், அடிப்படைரீதியில் நியாயத்திலானது என நோக்கப்படுகின்றது.[106]

சுதந்திரத்திற்குப் பின்னரான சகாப்தத்தின் போது அரசியலும் மற்றும் அரசியல் சம்பந்தமும் கவனத்திற்குரியதாகும். அனேகமாக சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியலில் முதலாவது செல்வாக்கிலான பிக்குகளில் ஒருவராக மாபிட்டிகம புத்தரகித தேரர் விளங்கினார். 1956இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவை அதிகாரத்திற்குக் கொண்டு வந்த *எக்ஸத் பிக்கு பெரமுனவின்* பின்னாலான உந்துசக்தியாக அவர் திகழ்ந்தார். பண்டாரநாயக்கவின் கொலையில் புத்தரகித தேரரின் சம்பந்தத்தைத் தொடர்ந்து, *எக்ஸத் பிக்கு பெரமுன* வீழ்ச்சியடைந்தது. எனினும், தொடர்ந்து வந்த தசாப்தங்களில் உள்ளூராட்சி மற்றும் தேசிய மட்ட அரசியலில் பௌத்த மதகுருமார் செல்வாக்கு செலுத்துவது தொடர்ந்தது. 2000ஆம் ஆண்டில், பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படுவதற்கான முதலாவது பௌத்த பிக்குவாக வண பத்தேகம சமித தேரர் விளங்கினார். 2004ஆம் ஆண்டில், பொதுத் தேர்தலில் 200 பௌத்த பிக்குகளை *ஜாதிக ஹெல உறுமய* [Jathika Hela Urumaya (JHU)] களமிறக்கியதுடன், பாராளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதில் வெற்றியீட்டியது.[107] நாட்டுக்கு சிங்கள-பௌத்த தேசியவாதத் தொலைநோக்கொன்றைக் கட்சி ஆதரித்ததுடன், புற நகர்ப்பகுதியில் சிங்கள-பௌத்த நடுத்தர வகுப்பின் மத்தியில் அதன் ஆதரவுத் தளத்தையும் கண்டறிந்தது. அரசியலில் பௌத்த மதகுருமாரின் நேரடியான சம்பந்தத்தின் ஊடாக மத மற்றும் அரசியல் ஆதிக்கங்களுக்கு இடையிலான கோடு மாற்ற முடியாதவிதத்தில் மங்கலாகியுள்ளது. இக் காலத்தின் போது, கலகொட அத்தே ஞானசார தேரர் என்ற பெயரிலான இளம் பிக்கு ஒருவர் JHUஇன் அங்கமாக அதன் பிரதம ஒருங்கிணைப்பாளராக விளங்கினார். அவர் கிரம விமலஜோதி தேரர் என்பவருடன் சேர்ந்து கட்சியானது 'பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கு அது போராடும் குணமற்றது' எனத் தெரிவித்து அதை விட்டு விலகினார்.[108] அவர்கள் பின்னர் BBS என்ற புதிய சிங்கள-பௌத்த இயக்கமொன்றின் தாபன உறுப்பினர்களாக விளங்கினார்கள். இது அதன் ஏதேனும் முற்பட்ட இயக்கங்களை விட அதிகளவு போராடும் குணமுள்ளதாகும்.

பெருமளவு பௌத்த குருமார்களையும், ஒரு சாதாரண உறுப்பினரையும் கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றின் நியமனத்துடன், 2012 மே மாதத்தில் BBS உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.[109] இது பின்னர், 2012 ஜுலையில் 1,500க்கு மேற்பட்ட மதப்பிரமுகர்களின் பங்கெடுப்புடன், தேசிய சமவாயமொன்றை நடத்தியது.[110] அது விரைவிலேயே இஸ்லாமிய மிதவாதத்திற்கு எதிராகப் பலதரப்பட்ட போராட்டங்களை மேடையேற்றுவதன் மூலம், அதன் முஸ்லிம் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலுக்கு குரலெழுப்பியது. ஆப்கானிஸ்தானில் முஜாஹிதீன் 'பயங்கரவாதக்' குழுவினால் *புத்தகயாவின்* அழிவுக்கு எதிராக பதுளையில் அத்தகையதொரு போராட்டம் இடம்பெற்றது.[111] பின்னர் BBS ஆதரவாளர்களுக்கும், முஸ்லிம் சனசமூகத்திற்கும் இடையிலான உயர்வடைந்த கெடுபிடிநிலையானது வன்முறையின் உச்சநிலையை அடைந்தது. அத்தகைய வன்முறையின் அம்சமொன்றாக, அது குற்றத்தை இழைப்பதற்கான முழுமையான விலக்கீட்டுரிமையாகும். உதாரணமாக, பூவெலிக்கடையில் நடைபெற்ற மோதலில், பெருமளவு முஸ்லிம்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், BBSஇன் உறுப்பினர்கள் அதைத் தூண்டியதாக சார்த்துரைகள் இருந்த போதும், அது பற்றி ஒருபோதுமே விசாரிக்கப்படவில்லை.[112] 2013 ஜனவரி 7 அன்று முஸ்லிம் மாணவர்களின் சார்பாக பரீட்சை முடிவுகள் மாற்றி அமைக்கப்படுகின்றன எனச் சார்த்துரைத்து, இலங்கைச் சட்டக் கல்லூரிக்கு

---

106 Hedges, *op. cit*. at 71.

107 Mahinda Deegalle, 'Politics of the Jathika Hela Urumaya Monks: Buddhism and Ethnicity in Contemporary Sri Lanka, (2004) 5(2) Contemporary Buddhism 83-103.

108 Gamini Karunasena & Wasantha Rupasinghe, 'Sri Lankan Buddhist chauvinists provoke violence against Muslims', *World Socialist Website*, 9 January 2013, at: http://www.wsws.org/en/articles/2013/01/09/sril-j09.html.

109 See 'Genesis of Bodu Bala Sena, *The Asian Tribune*, 7 April 2013.

110 See 'Buddhist clergy wants birth control operations banned', *The Island*, 29 July 2012.

111 See 'Bodu Bala Sena protest', *The Daily Mirror*, 25 October 2012.

112 See 'Sri Lankan Buddhist chauvinists provoke violence against Muslims', *World Socialist Web Site*, 9 January 2013.

வெளியே BBS போராடியது.[113] 'பௌத்தத்திற்கு எதிரானவை' என கருதப்பட்ட வியாபாரத் தாபனங்களையும் அவர்கள் தாக்க ஆரம்பித்தார்கள். உதாரணமாக, 2013 ஜனவரி 21 அன்று, புத்தருக்கு வருத்தமளிக்கின்ற இராப்போசன விருந்தொன்றை நடத்துவதாக வலியுறுத்தி பேருவளையில் உணவகமொன்றை அவர்கள் தாக்கினார்கள்.[114]

அரசியல் காட்சிப்பரப்பினுள் அதன் பகிரங்க புறவரையை உயர்த்துவதையும் BBS ஆரம்பித்தது. 2013 முற்பகுதியில், சிங்கள மக்களிலும், பௌத்த ஆலயங்களிலும் கணிசமானளவு குறைப்பொன்றுக்கு கவனத்தை ஈர்த்தெடுப்பதற்கு தாபனத்தின் செயற்பாடுகள் முக்கியமானவை என்பதை வலியுறுத்தி தனது நல்லாசிகளை BBSக்கு மல்வத்தை மகாநாயக்கர் அதி வண.திபத்துவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் அனுப்பியிருந்தார்.[115] அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷவின்[116] ஆதரவையும் BBS பெற்றுக்கொண்டதுடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்தது.[117] 2013 மார்ச் 9 அன்று, காலியில் BBSஇன் *'மெத் செவன'* என்ற கலாசார, பயிற்சி நிலையத்தைப் பாதுகாப்புச் செயலாளர் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.[118] பாதுகாப்புத் தாபனத்தின் அனுசரணையை இயக்கம் பெற்றுக்கொண்டுள்ளது, கணிசமானளவு அரசியல் அதிகாரத்தை செலுத்துகின்றது என்ற ஊகத்திற்கு இந் நிகழ்ச்சியில் பாதுகாப்பு அமைச்சரின் வரவு நம்பிக்கையை அளித்திருந்தது.

முன்னைய பிரிவில் முன்வைக்கப்பட்ட தரவுகளில் எடுத்துக்காட்டியுள்ளவாறு, 2013இன் போதும், 2014இன் போதும் மதச் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களின் மையத்தில் BBS இருந்தது. இந்தத் தாக்குதல்களின் முக்கியமான அம்சம் என்னவெனில், மீண்டும் ஒரு முறை குழுவினால் அனுபவிக்கப்பட்ட முற்றுமுழுதான விலக்கீட்டுரிமையாகும். இக்காலத்தின் போது, இதையொத்த குழுக்களும் தோன்ற ஆரம்பித்தன. இது தொடர்பில் *சிங்கள ராவய* மற்றும் *ராவண பலய* ஆகியன குறிப்பிடப்படுவது அவசியமாகும். இவையும் BBSஉடன் ஒப்பிடுகையில் சிறிய அளவில் செயற்பட்ட போதும், ஒத்ததன்மையிலான விலக்கீட்டுரிமையுடன் செயற்பட்டன. இவ்விரு குழுக்களும் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் சம்பவத்தில் முன்னணிநிலையில் செயற்பட்டன. அத்தகைய விலக்கீட்டுரிமையில் அரசியல் சூழமைவு பேணப்பட்டமை சிறிதளவு விவரணத்தை வேண்டுகின்றது. இது தொடர்பில், இலங்கையில் சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் போராட்டக்குணத்திலான அமைப்புக்களின் யுத்தத்திற்குப் பிந்திய அதிகரிப்பினையும் அத்துடன் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் அதன் சாத்தியமான அனுசரணையையும் விளக்கக்கூடிய பெருமளவு எடுகோள்கள் உள்ளன.

*சிங்கள-பௌத்த ஆதரவுத் தளமொன்றைத் தூண்டி எழுப்புதல்*

சிறந்த பொருளாதார எதிர்காலத்தைத் தேடி, கிராமியப் பகுதிகளிலிருந்து நகர பகுதிகளுக்கு புலம்பெயர்ந்த சிங்கள-பௌத்தர்கள் நகரப் பகுதிகளில் அதிகரிக்கப்பட்டிருந்த இனத்துவ மற்றும் மதப் பரவலாக்கத்தின் காரணமாக, ஒருவரிடமிருந்து இன்னொருவர் தனிமைப்படுதலின் அபாயத்திற்கு முகம்கொடுத்தனர். இது தொடர்பில், ஒரு சனசமூகத்தினுள் புறநகர் சிங்கள-பௌத்தர்களைத் தூண்டி எழுப்புதல் கங்கொடவில சோம தேரர் போன்ற பௌத்த பிக்குகளினால் வழிநடத்தப்பட்ட இயக்கங்களுக்கு பின்னாலான பிரதான அரசியல் நிகழ்ச்சிநிரல்களில் ஒன்றாகும். அத்தகைய இயக்கங்கள் புறநகர் சிங்கள-பௌத்த அடையாளத்தை மீள்புத்துயிரூட்டுவதில் வெற்றியடைந்ததுடன், இச் சனசமூகங்களை முற்றிலும் வேறுபட்ட வாக்குத் தளமொன்றினுள் தூண்டி எழுப்பும் நடைமுறையை ஆரம்பித்தது. *சிஹல உறுமய* என்ற பெயரிலான ஒரு சிங்கள-பௌத்த தேசியவாத கட்சியே இப்புதிய வாக்குத் தளத்திலிருந்து நன்மையடைந்த முதலாவது அரசியல் கட்சியாகும். இது 2000 ஆண்டுப் பொதுத் தேர்தலில் 127,000க்கு மேற்பட்ட வாக்குகளையும், பாராளுமன்றத்தில் ஆசனமொன்றையும் பெற்றுக்கொண்டது. நான்கு

[113] See 'Law school entrance delayed by a week', *Hiru News*, 8 January 2013.
[114] See 'Hotel managers arrested over 'Nirvana style' dinner event', *The Sunday Times*, 27 January 2013.
[115] See 'Malwatte Mahanayake welcomes Bodu Bala Sena', *Forum for Peaceful Co-existence Sri Lanka*, 1 January 2013, at https://mffcoexist.wordpress.com/2013/01/01/malwatte-mahanayake-welcomes-bodu-bala-sena.
[116] See 'Sri Lankan Buddhist chauvinists provoke violence against Muslims', *World Socialist Web Site*, 9 January 2013.
[117] See 'President Rajapaksa stresses need for respecting rights of all communities', *The Island*, 28 January 2013.
[118] See, 'Gota inaugurates BBS Meth Sevana', *Ceylon Today*, 10 March 2013.

வருடங்களின் பின் JHU அரை மில்லியன் வாக்குகளையும், பாராளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்களையும் பெற்று, இலங்கையில் எதிர்க்க முடியாத வாக்குதளமொன்றின் வெளிப்படுத்தலை அடையாளப்படுத்தியுள்ளது.

இந்த வாக்குத்தளமானது, தொடர்ச்சியான வாக்கு வன்மையிலான மீள்-வலுவூட்டல் அவசியப்படுகின்ற இனத்துவ-மத அடையாளத்தினால் ஒன்றுசேர தாங்கிக்கொள்ளப்படுகின்றது. அத்தகைய மீள்-வலுவூட்டல் இன்றி, பொருளாதார அபிவிருத்தியையும் மற்றும் வாக்காளர் தெரிவுகளையும் நிர்ணயிப்பதற்கு சமூக நகரும்தன்மை போன்ற வேறு குறிக்கோள்களுக்கு அது குறைந்தபட்சம் நியாயமானமென்று எனத் தோன்றும். இது தொடர்பில், இனத்துவ-மத அடையாளங்களுடன் போட்டியிடுதலைப் பேயாக்குகின்ற சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் ஒரு போராடும் குணமுள்ள அமைப்பொன்றாகும். எனவே, புறநகர்ப்புற அமைவிடங்களில் இனத்துவச் சிறுபான்மையினரை இலக்குவைத்து மூர்க்கத்தனமானதும், அந்நிய நாட்டினர்பாற் காட்டப்படும் வெறுப்பினதும் ஊடாக, இந்த அடையாளத்தை மீள்வலுவூட்டுவதற்கான நகர்வொன்றாக BBS போன்ற குழுக்களின் வருகையை விளக்க முடியும். இந்த வாக்குத் தளத்தைத் தூண்டி எழுப்புவதற்கான ஏதேனும் நடைமுறையிலிருந்து ஆளும் உயர்ந்தோர் குழாம் நேரடியாக நன்மையடைந்தது. இவ்வாறாக, இந்த தனியான வாக்குத் தளத்தின் மேலாக, கட்டுப்பாட்டினைப் பேணுவதற்காக வாக்குவன்மையிலான கருவியொன்றாக BBS செயற்பட்டிருக்கக்கூடும்.

*JHUக்கான விதிமுறை*

2010இல், ஐக்கிய பொதுசன சுதந்திர முன்னணியினுள் [United People's Freedom Alliance (UPFA)] ஆளும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் சேர்ந்து பிரச்சாரம் செய்வதற்கு JHU தீர்மானித்தது. 2004உடன் ஒப்பிடுகையில், பாராளுமன்றத்தில் அதன் அபேட்சகர்களில் மூவர் மட்டுமே ஆசனங்களைப் பெற்றுக்கொண்டதனால், இத் தேர்தல்களில் கட்சி நன்கு செயற்படவில்லை எனத் தெரிகின்றது. யுத்தத்தின் போதும், அதன் பின்னர் உடனடியாகவும் நாட்டின் ஊடாக வேகமாக அடித்துச் செல்லப்பட்ட பரவலான சிங்கள-பௌத்த தேசியவாத ஏற்பாட்டினுள் சிங்கள-பௌத்த புறநகர் ஆதரவுத் தளம் தற்போது ஒன்றிணைந்துள்ளது.

இருந்தும், பிரதானநீரோட்ட அரசியல் அதிகாரமொன்றாக JHUஇன் வெளிப்படுத்தலானது அதன் அபேட்சகர்களின் ஒருவரின் வெற்றியில் வெளிப்படையானதாகும். மூன்று JHU பாராளுமன்ற உறுப்பினர்களில் எதிர்காலத்தில் ஜனாதிபதி பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியான தலைமைப் பண்புகளைக் கொண்ட அரசியல்வாதியாக பாட்டலி சம்பிக்க ரணவக்க காணப்பட்டார். கொழும்பு மாவட்டத்தில் 120,000க்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளை ரணவக்க பெற்றுக்கொண்டார். இதுவே மாவட்டத்தின் நான்காவது ஆகக்கூடுதலான வாக்குகளாகும். இது தொடர்பில், பாரிய UPFA வாக்குத் தளத்தினுள் அரசியலில் அவரது வெற்றிக்கு JHU ஆதரவுத் தளம் முக்கியமானதாகும்.[119] முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட ஆளும் உயர்ந்தோர் குழாம் அனேகமாக அவர்களது அதிகாரத்திற்கு இது முன்னுணர்விலான அச்சுறுத்தல் என அறிந்திருந்தது. சிங்கள-பௌத்த அரசியலினுள் JHUக்கு மிகவும் தீவிரமான மாற்றுவழியொன்றை உருவாக்குவதே இந்த அச்சுறுத்தலுக்கான ஒரு சாத்தியமான பதிலிறுப்பாகும். இது தொடர்பில் BBS போன்ற போராட்டக்குணமுள்ள குழுக்கள் ஆளும் உயர்ந்தோர் குழாமுக்கு உதவியளித்தது. ஏனெனில் புறநகர் சிங்கள-பௌத்த வாக்காளர்களுக்கு மேலாக, JHUஇன் பாரம்பரியமான பிடியை அவர்கள் குறைத்து மதித்தார்கள்.[120]

---

[119] It is noted that the 2015 General Election demonstrated that Ranawaka's political appeal extended well beyond UPFA voters. Following his decision to formally cease his support to Mahinda Rajapaksa, Ranawaka sided with Maithripala Sirisena at the Presidential Election of January 2015. He later came forward as a candidate at the General Election under the United National Front for Good Governance—a coalition formed by the UNP. He went on to secure over 100,000 preferential votes, thereby demonstrating his ability to adjust to new political contexts.

[120] The JHU's voter base declined due to Mahinda Rajapaksa's strategy of co-opting more radical Sinhala-Buddhist elements. During the January 2015 presidential election, the JHU split, with Udaya Gammanpila siding with Mahinda Rajapaksa and Champika Ranawaka with Maithripala Sirisena. The split persisted during the August 2015 general election. As noted above, Ranawaka performed impressively, as he secured over 100,000 preferential votes. However, Gammanpila who came forward as a UPFA candidate secured nearly 200,000 preferential votes. Thus the JHU's voter base had been largely subsumed by the UPFA.

*இராணுவமயப்படுத்தல், தேசியப் பாதுகாப்பு மற்றும் அதிகாரத்தைத் தக்கவைத்தல்*

2009இல் 30 வருட யுத்தத்தின் முடிவு 'சமாதானத்தைப் பெறுவதிலிருந்து' 'பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுதல்' என்றவாறு அரசாங்கம் மீதான எதிர்பார்ப்புகளுக்கு இடம்மாறியது. எல்.ரி.ரி.ஈ.ஐத் தோற்கடிப்பதற்கும், நாட்டை 'ஐக்கியப்படுத்துவதற்குமான' ஆணையொன்றின் மீதான அடிப்படையில், 2005இல் ராஜபக்ஷ அரசாங்கம் நிறுவப்பட்டது. 2006க்கும் 2009க்கும் இடையில் தேசிய பாதுகாப்பு நிலையொன்றைத் தாபிப்பதையும் அத்துடன் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகவும் கொடூரமான அவசரகாலச் சட்டங்களின் சிலவற்றின் வினைப்படுத்தலையும் நியாயப்படுத்துவதற்காக இந்த ஆணை பயன்படுத்தப்பட்டது.[121] 2010 ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷவின் வெற்றிக்கு தேசிய பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதிலும், பேணுவதிலும் சாதனைகள் பலவழிகளிலும் அடிப்படையிலானதாக விளங்கின. எனினும், தேசியப் பாதுகாப்புக்கான 'அச்சுறுத்தல்கள்' நடுநிலையாக்கப்பட்டு, துரிதமான பொருளாதார வளர்ச்சியின் எதிர்பார்ப்புக்கள் அரசாங்கத்தின் மீது அதிகளவு தங்கியிருந்ததினால், யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்தின் போது, தேசியப் பாதுகாப்பு நிலையொன்றுக்கான கோரிக்கை மெதுவாகக் குறைவடைய ஆரம்பித்தது. நாட்டில் அவசரகால நிலையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான தனது தீர்மானத்தை அறிவிப்பது மீது 2011 ஓகஸ்ட் 25 அன்று பாராளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரையொன்றில் ஜனாதிபதியின் சொந்த வாக்குவன்மையானது பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல் வியாபித்துள்ளது, சிவிலியன் நிருவாகத்திற்கு மீளத்திரும்புவது சமீபித்துள்ளது என்ற கருத்தினைத் தெளிவாக வலுவூட்டியது.[122] எனினும், இந்த வாக்குவன்மையானது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக அதன் இராணுவமயமாக்கலுக்கான ஏற்பாடும், தேசியப் பாதுகாப்பு வாக்குவன்மையும் முக்கியமானவை என்பதனால், அது அரசாங்கத்திற்கு குழப்பமான நிலையை முன்வைத்தது.

ஒரு புறத்தில், அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் இராணுவத்தின் தொடருகின்ற சம்பந்தம் மீது தங்கியிருந்தது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தித் துறைகள் ஓர் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதுடன், இதில் கோத்தாபாய ராஜபக்ஷ செயலாளராக விளங்கினார். உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் இராணுவம் மீது பெரிதும் தங்கியிருந்ததுடன், இது 2011க்குள் பாரிய அளவிலான நிருமாணத்திலும், நகர 'அழகுமயமாக்கலிலும்' ஈடுபடுவதை ஆரம்பித்தது. மேலும், வர்த்தகக் கருத்திட்டங்கள் உட்பட பலதரப்பட்ட நோக்கங்களுக்காக இராணுவத்தினால் வடக்கிலும், கிழக்கிலும் பாரிய தரிசுக் காணிகள் கையகப்படுத்தப்பட்டன.[123] அபிவிருத்தியின் யுத்தத்திற்குப் பிந்திய உந்துசக்தியின் உள்மைய அங்கமொன்றாக இராணுவம் விளங்கியது.[124]

மறுபுறத்தில், பொதுசனப் பாதுகாப்பினைப் பேணுவதை விட வேறு காரணங்களுக்காக ஆயுதப் படைகளை அழைப்பது அரசாங்கத்திற்கு சாத்தியமாக இருக்கவில்லை. இது தொடர்பில், 1947இன் இல.25 பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் [Public Security Ordinance (PSO)] பிரிவு 12இன் கீழ், நாட்டின் சகல 25 மாவட்டங்களிலும் ஆயுதப் படைகளை அமர்த்தும் பழக்கத்தினை ஜனாதிபதி கொண்டிருந்தார். சிவில் நிருவாகத்தில் ஏதேனும் இராணுவச் சம்பந்தம் மேற்படி கட்டளைச்சட்டத்தின் கீழ் மாதாந்தம் ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட கட்டளைகளிலிருந்து தவிர்க்க முடியாதபடி வெளிப்பட்டது. எனினும், 'பொது பாதுகாப்புக்கு அபாயம் விளைவிக்கும் சூழ்நிலைகள் எழுந்துள்ளன' என்பதுடன், 'அத்தகைய சூழ்நிலையைக் கையாள்வதற்கு பொலிஸார் போதுமானதாக இல்லை' என ஜனாதிபதி கருத்தினைக் கொண்டிருந்தாலேயே ஆயுதப்படைகளை அமர்த்துவதற்கு மட்டுமே அவரை மேற்படி கட்டளைச்சட்டம் அங்கீகரிக்கின்றது. எனவே, இராணுவத்தினால் நிறைவேற்றப்படுகின்ற 'பொதுசனப் பாதுகாப்பு' நிகழ்ச்சிநிரலொன்று உள்ளது என்ற கருத்தின் மீதே ஆட்சியாளரின் பொருளாதார நிகழ்ச்சிநிரல் வெளிப்படையாகத்

---

121 For a more in-depth analysis of this issue, see International Commission of Jurists, *Authority without Accountability: The Crisis of Impunity in Sri Lanka* (October 2012).

122 Parliamentary Debates (Hansard) Volume 201 - No. 7, Thursday, 25 August, 2011.

123 See Gehan Gunatilleke & Vidya Nathaniel, 'Illegal Land Dispossession' in *Sri Lanka Governance Report – Transparency International Sri Lanka* (May, 2014).

124 Also see Rajesh Venugopal 'The Politics of Market Reform at a Time of Civil War: Military Fiscalism in Sri Lanka', (2011) 46 Economic & Political Weekly 67. The author examines data from the 1980s to the early 2000s to demonstrate the relationship between 'the steady growth in the numbers of the security' and 'reduction in civilian public sector employment'. The analysis also uncovers early trends in the 'logic' of militarisation, which the Rajapaksa government is likely to have applied in the post-war context.

தங்கியிருந்தது. இவ்வாறாக, ஆயுதப் படைகளை அமர்த்துவதையும், அவர்கள் அமர்த்தப்படுவதற்கான உண்மையான நோக்கங்களையும் அங்கீகாரமளிக்க சட்ட ஏற்பாடுகளைப் பொறுத்தளவில் ஆழமானதும், முழுவதும் ஊடுருவியுள்ளதுமான பொருத்தமின்மை நிலவியது. பொதுப் பாதுகாப்புக்கு உண்மையான அச்சுறுத்தலொன்று எப்படியாவது கட்டப்பட்டிருந்தால், இந்தப் பொருத்தமின்மை பயனுறுதிவாய்ந்ததாகத் தீர்க்கப்பட்டிருக்கும். எனவே, முஸ்லிம் சனசமூகத்திற்கும், போராட்டக்குணமுள்ள சிங்கள-பௌத்த குழுக்களுக்கும் இடையிலான கெடுபிடிநிலைகளின் பொதுசனப் பாதுகாப்பு அச்சுறுத்தலொன்றின் உருவாக்கம் ஆட்சிசெய்யும் உயர்ந்தோர் குழாமுக்கு நன்மையாகவே விளங்கியது. பயமுறுத்தலொன்றிலிருந்து ஸ்திரத்தன்மையைக் கட்டுவதற்கான கவனமான மூலோபாயமொன்றின் விளைவே BBS என்பதுடன், இதை ராஜபக்ஷ அரசாங்கம் மட்டுமே கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருந்தது.

### *3.4 குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவு*

முழுமையான சமூக-கலாசார, பொருளாதார அல்லது அரசியல் சூழமைவுகள விட, வன்முறையின் குறிப்பிட்டதொரு சம்பவத்தை நோக்கி குறிப்பிட்ட உள்ளூர்மயப்படுத்தப்பட்ட சூழமைவுகள் அடிக்கடி அதிகளவு கடுமையாகப் பங்களிக்கின்றன. உதாரணமாக, அளுத்கமவின் 2014 ஜூனின் கலவரம் அச்சொட்டான அமைவிடத்தில் இடம்பெற்ற முதலாவது தடவையிலான இனவாத வன்முறை அல்ல எனக் குறித்துக்கொள்ளப்படுகின்றது. 2006இல், நடமாடும் தொலைபேசி ஒன்று தொடர்பில் சிங்களவர் ஒருவருக்கும், முஸ்லிம் ஒருவருக்கும் இடையில் மேம்போக்கானதும், அற்பமானதுமான வாக்குவாதம் கலவரமொன்றாக உயர்வடைந்ததுடன், இதில் பகுதியில் உள்ள ஒரு தொகையிலான கடைகள் சேதமாக்கப்பட்டன.[125] இவ்வாறாக, அளுத்கமவில் மதக் கெடுபிடிநிலைகளின் குறிப்பிட்டதொரு உள்ளூர் சூழமைவு நிலவுவதாகத் தோன்றுகின்றது. மேற்பரப்பின் கீழே நிலவுகின்ற இந்தப் பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகள் பரவலான வன்முறையை எவ்வாறு ஒரு மேம்போக்கான தீங்கற்ற நிகழ்ச்சியாக முன்வைக்கின்றது என்பதை விளக்குகின்றது.

2013 ஓகஸ்ட் 11 அன்று கொழும்பு, கிராண்ட்பாஸில் முஸ்லிம் வழிபாட்டு நிலையமொன்றின் மீதான தாக்குதல் எவ்வாறு ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவானது மத வன்முறையை முன்வைக்கும் என்பதற்கான இன்னொரு சிறந்த உதாரணமாகும். புதிய மதக் கட்டிடங்கள் மீது புரியப்படுகின்ற தாக்குதலின் பொதுவான வகையொன்றாக 'அங்கீகாரமளிக்கப்படாத' கட்டமைப்பொன்றின் மீது தாக்குதல் நடத்தியோர் மனவுணர்வு கொண்டுள்ளமை மீதான முஸ்லிம் எதிர்ப்பு தாக்குதலொன்றாக இலகுவாக தாக்குதல் அர்த்தம் காணப்படலாம். எனினும், வன்முறை வெடித்த குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவை சம்பவத்தின் ஆழமான பகுப்பாய்வொன்று வெளிப்படுத்துகின்றது. அக்கறையூட்டுகின்ற விதத்தில், UDAஇன் உத்தேசமான கையகப்படுத்தல் பழைய மஸ்ஜிதுல்தீனுள் இஸ்லாம் பள்ளிவாசலுக்கு மிகக் கிட்டியதாகவுள்ள சமாதி விகாரை எனப்படும் பௌத்த ஆலயமொன்றையும் உள்ளடக்குகின்றது. இவ்வாறாக, UDAஇன் கையகப்படுத்தல் இரத்துச்செய்யப்பட்டதனால், அது ஆலயத்திற்கு நன்மையாகவிருந்தது. இது புதிய வழிபாட்டு நிலையத்திற்கு எதிரான போராட்டங்கள் ஆலயத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதைப் பொறுத்தளவில் அதிகாரநலக் கும்பலினால் தூண்டப்பட்டதா என்ற வதந்திக்கு இட்டுச்சென்றது. மேற்பரப்பின் கீழே சார்ந்திருக்கின்ற சூழமைவிலான சிக்கல் நிலைமைகளை நிகழ்ச்சி எடுத்துக்காட்டுகின்றது. இக் காரணத்திற்காகவே, மத வன்முறையை விளக்கமளிப்பதற்கான பரவலான சமூக-கலாசார, பொருளாதார அல்லது அரசியல் சூழமைவுக் காரணிகளைப் பிரயோகிப்பது அனேகமாக போதுமானதல்ல. பெருமளவு விடயங்களில், வன்முறைக்கான அவசியமான கூட்டுப்பொருள்களை ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவு கொண்டிருக்கக்கூடும்.

கிராண்ட்பாஸ் மற்றும் அளுத்கம ஆகிய சம்பவங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு, வன்முறையை முன்வைப்பதற்கு 'தூண்டுதல் நிகழ்ச்சி' ஒன்றை இந்த பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளும் அனேகமாக வேண்டுகின்றன. இது ஏன் குறிப்பிட்ட தருணங்களிலும், ஏனையவற்றுக்கு இல்லாமலும் வன்முறை இடம்பெறுகின்றது என்பதையிட்டு விளக்கமளிக்கக்கூடும். இவ்வாறாக, இந்தப் பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளின் தன்மையையும், அளவையும் அத்துடன் 'தூண்டல் நிகழ்ச்சிகளை' முன்வைப்பதில்

125 125 Haniffa, *et al*. at 39.

தகுதியிலான செயற்பாட்டாளர்களையும் புரிந்துகொள்வது வன்முறையைத் தடுப்பதற்கும், தணிப்பதற்குமான பதிலாகும்.

### *3.5 ராஜபக்ஷவுக்கு பின்னரான முன்னேற்றங்கள்*

2015 ஜனவரியில், ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டதுடன், 'பொது எதிர்த்தரப்பு' அபேட்சகர் மைத்திரி சிறிசேன மக்களினால் தெரிவுசெய்யப்பட்டார். உண்மையில் ராஜபக்ஷவின் சொந்த அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக சிறிசேன இருந்தார். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகளின் கூட்டணியுடனும், ஒவ்வொரு மட்டத்திலும் மக்களின் பங்கெடுப்புடனும் சேர்த்து எதிர்பார்க்க முடியாத ஆட்சி மாற்றமொன்றில் உச்சநிலையை அடைந்த இயக்கமொன்றை சிறிசேன மேடையேற்றினார்.

சிறிசேனவின் ஜனாதிபதி ஆட்சியின் கீழ், BBS போன்ற குழுக்களின் விலக்கீட்டுரிமை குறைந்துள்ளது. மேலும், வெறுப்பு உரைக்கு எதிராகச் சட்டமொன்றை வரைதல் அத்துடன் அச்சட்டத்தின் அமைச்சரவை அங்கீகாரம் போன்றவாறு வெறுப்பு உரையைக் கட்டுப்படுத்துவதற்கு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.[126] முற்றிலும் மாறானதன்மையில், ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய வெறுப்பு இயக்கங்கள் குறைந்தளவு கண்கூடானவை என்ற உண்மைக்கு முற்றிலும் மாறான தன்மையில், மதப் பாரபட்சமும், சகிப்பற்றதன்மையும் அத்துடன் வன்முறையும் தொடர்ந்துமே இருந்தன. முஸ்லிம்களுக்கான செயலகத்தின் அண்மைய அறிக்கையொன்றின் பிரகாரம், 2015 ஜனவரி முதல் முஸ்லிம் சனசமூகத்திற்கு எதிராக குறைந்தபட்சம் 37 மதத் தாக்குதல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.[127] இச் சம்பவங்களின் மத்தியில், 2015 ஏப்ரல் 4 அன்று இரத்தினபுரி, குரகலவில் பள்ளிவாசலொன்றை அழிப்பதற்கான முயற்சியும் அடங்குகின்றது. பொலிசாரின் தலையீட்டின் ஊடாக, அழிக்கப்படுவது தடுக்கப்பட்டது. இச் சம்பவத்தில் *சிங்கள ராவய* எனக் கூறப்படும் சுமார் 150 போராட்டக்காரர்களைக் கொண்ட கும்பலொன்றைப் பொலிஸார் துரத்தினர்.

இதனிடையே, கடந்த காலத்தில் மத வன்முறையை இழைத்தவர்களுக்கு எதிராக வழக்கு இன்னுமே தொடரப்படவில்லை. இது தொடர்பில், மத வன்முறையின் குறிப்பிட்ட வகையில் அப்பட்டமான அமைப்புக்களின் குறைப்பொன்றை மட்டுமே 2015 ஜனவரிக்கு பின்னரான சகாப்தம் உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த காலத்தில் குற்றமிழைத்தவர்களை நீதிக்கு கொண்டுவருவதன் மூலம், விலக்கீட்டுரிமையை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நேர்மையான நடவடிக்கைகளை புதிய நிருவாகம் எடுக்குமா என்பது காலக்கிரமத்திலேயே தெரியவரும்.

---

126 'Decisions Taken at the Cabinet Meeting Held on 1st April, 2015', *News.lk*, at http://www.news.lk/cabinet-decusions/item/6928-decisions-taken-at-the-cabinet-meeting-held-on-1st-april-2015.

127 Secretariat for Muslims, *2015 Anti Muslim Sentiment In Sri Lanka: Hate Incidents – January To April 2015* (2015).

## 4. ஊடகங்களின் வகிபங்கு

மதச் சுதந்திரம் மீதான கருத்தாடலைப் பொறுத்தளவில் ஊடகங்களின் வகிபங்கு அளுத்கம கலவரங்களின் போதும், அதன் பின்னரும் அதன் அண்மைய வகிபங்கினை கரிசனைக்கெடுக்கையில், சிறப்பாகப் புரிந்துகொள்ளப்படலாம். அளுத்கம சம்பவங்கள் அவை கட்டவிழ்க்கப்பட்ட போது பிரதானநீரோட்ட ஊடகங்களால் உள்ளடக்கப்படவில்லை. கலவரங்களின் தினத்தன்று, பகுதியில் சங்கடமான சூழ்நிலையொன்று எழுந்துள்ளது என்பதை வெறுமனே எடுத்துக்காட்டி, புதுப்பித்தல்களைப் பிரதானநீரோட்ட ஊடகங்கள் வெளியிட்டன.[128] அதன் பின், அவை என்ன நடந்துள்ளது என்பதைச் செம்மையாக அறிக்கையிடுவதற்குத் தவறியது. குறிப்பாக அரசாங்க ஊடகங்கள் சம்பவங்களின் திரிபுபடுத்தப்பட்டதும், துப்பரவுபடுத்தப்பட்டதுமான கூற்றொன்றினை முன்வைத்தன. 2014 ஜூன் 17 அன்று *டெயிலி நியூஸ்* என்ற அரசாங்கத்தின் ஆங்கில மொழிமூலச் செய்திப்பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கமானது சம்பவத்தை 'தனிமைப்படுத்தப்பட்டது' என்றும், அது மிகைப்படுத்தப்படுகிறது என்றும் வலியுறுத்தி சம்பவத்தை குறைத்து எடைபோட்டது.[129] இதனிடையே, வெகுஜன தொடர்பாடல், தகவல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிக்கையொன்றை விடுத்ததுடன், அது *டெயிலி நியூஸில்* வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில், 'பொறுப்புடன் செயற்படுமாறு' ஊடகங்களுக்கு அவர் அறிவுறுத்தியிருந்ததுடன், அச் சம்பவம் உணர்ச்சிவசப்படுத்தப்படுவதாக மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தார்.[130] தனியாருக்குச் சொந்தமான *ஐலண்ட்* மற்றும் *டெயிலி மிரர்* போன்ற செய்திப்பத்திரிகைகள் சம்பவம் மீது மிகவும் சிறிதளவு தகவலையே முன்வைத்தன. உண்மையில், 2014 ஜூன் 16 அன்று *ஐலண்ட்* பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் முஸ்லிம் சனசமூகம் மீதே குற்றம் சார்ந்துள்ளதென்று மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்ததுடன், BBS கூட்டத்தில் பங்கெடுப்பாளர்களே முதலில் தாக்கப்பட்டனர் என அது வலியுறுத்தியிருந்தது.[131] சம்பவங்களின் பிரதானநீரோட்ட ஊடகங்களின் கூற்று அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கூற்றுக்கு அனேகமாக நெருக்கமாக ஒத்திருந்தது.[132]

இக் காலத்தின் போது, தகவலில் மாற்று வழியாக சமூக ஊடகங்கள் வெளிப்பட்டன. முகநூல் மற்றும் 'டுவிட்டர்' போன்ற சமூக ஊடக மேடைகளைப் பயன்படுத்தி, அளுத்கமவில் இடம்பெற்ற சம்பவங்களை உண்மை நேரத்தில் அறிக்கையிடுவதைப் பொறுத்தளவில் காரணகர்த்தாக்களாகச் சுயேட்சையான இதழியலாளர்கள் விளங்கினார்கள். பிரதானநீரோட்ட ஊடகங்கள் மீது அரசாங்கம் பயன்படுத்திய அதிவிசேடமான கட்டுப்பாடுகள் சமூக ஊடகங்களுக்கு நீடிக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. கட்டவிழ்க்கப்பட்ட சம்பவங்களின் கலக்கப்படாததும், பதிக்கப்படாததுமான கூற்றை முன்வைப்பதற்காக தகவலையும், புதுப்பித்தல்களையும் சுயேட்சையான இதழியலாளர்கள் சுதந்திரமாகப் பரிமாறினார்கள்.[133] அத்தகைய தகவல் இறுதியாக அளுத்கம கலவரங்களின் பொதுசன விழிப்பியலைத் தோற்றுவிப்பதில் கருவியாக விளங்கியது. சம்பவம் மீது அறிக்கையிடுவதற்கு சமூக ஊடக மேடைகளைப் பயன்படுத்திய சுயேட்சையான இதழியலாளர்களின் மதிப்பைக் குறைப்பதற்கு முயற்சித்ததன் மூலம், இந்த காரணகாரியத்திற்கு அரசாங்கம் கடுமையாகப் பதிலிறுத்தது. 2014 ஜூன் 17 அன்று 'சில்லறை அரசியல் முடிவுகளை சமூக ஊடகங்கள் பின்துரந்து செல்கின்றன' என *டெயிலி நியூஸின்* ஆசிரியர் தலையங்கம் விமர்சித்திருந்தது.[134] சமூக ஊடகங்கள் மீது எந்தளவு சிறிய கட்டுப்பாட்டினைக் கொண்டிருந்தது என்பதைப் பற்றி அது கரிசனை கொண்டுள்ளது என்பதற்கான சமிக்ஞைகளைக் காட்டுவதற்கு அரசாங்கம் ஆரம்பித்தது. சமூக ஊடகங்களினுள் இயற்கையாகவே அனாமதேயத்தன்மையும், நிலையற்றதன்மையும் அமையப்பெற்றிருந்ததால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசாங்கத்தை மிகவும் கஷ்டமாக்கியது.

---

128 'Tense situ in Aluthgama', *The Daily Mirror*, 12 June 2014, at http://www.dailymirror.lk/48354/tense-situ-in-aluthgama.

129 See 'They Try in Vain', *The Daily News*, 17 June 2014, at http://www.dailynews.lk/?q=editorial/they-try-vain.

130 See 'Act with responsibility - Minister Keheliya', *The Daily News*, 17 June 2014, at http://www.dailynews.lk/?q=local/act-responsibility-minister-keheliya.

131 See 'Police curfew clamped in Alutgama, Beruwala', *The Island*, 16 June 2014, at http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=105187.

132 Balachandran, *op. cit.*

133 See for example, 'What happened in Aluthgama, a verified account', *Republic Square*, 15 June 2014, at http://www.therepublicsquare.com/news/2014/06/what-happened-in-aluthgama-yesterday.

134 'They Try in Vain', *The Daily News*, 17 June 2014, at http://www.dailynews.lk/?q=editorial/they-try-vain.

இக் காலத்தின் போது, அளுத்கம கலவரங்கள் தொடர்பில், அரசாங்கத்தின் செயலின்மையை விமர்சிக்க சுயேச்சையான இதழியலாளர்கள் ஆரம்பித்தனர். இது தொடர்பில் தரிஷ பஸ்தியான்ஸ் போன்ற இதழியலாளர்கள் காரணகர்த்தாக்களாக விளங்கியதுடன், *Daily FT* போன்ற பிரதானநீரோட்டச் செய்திப் பத்திரிகைகளில் கூட அவரது கட்டுரைகள் வெளியிடப்பட்டன. 'Striking the Match' என்ற தலைப்பிலான தைரியமானதும், ஆத்திரமூட்டுவதுமான கட்டுரையில் அவர் பின்வருமாறு தனது அவதானிப்பினை வெளியிட்டிருந்தார்:

> இனவாதக் கெடுபிடிநிலையின் தூண்டலைக் கையாண்டதாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் இதழியலாளர் ஜே.எஸ்.திசைநாயகம், அரசியல்வாதி அஸாத் சாலி, மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருகி பெர்னாண்டோ மற்றும் வண பிரவீன் மகேசன் ஆகியோரைக் கைது செய்த அரசாங்கம், கலகொட அத்தே ஞானசாரரின் விடயத்தில் சட்டத்தை முழுவதுமாகக் கைவிட்டுள்ளது.[135]

சமூக ஊடகங்களும், சுயேட்சையான இதழியலும் முன்வைத்த புதிய அச்சுறுத்தலின் அளவை பாதுகாப்புத் தாபனம் புரிந்துகொண்டது. 2014இன் இறுதிப் பகுதியின் போது சுயேச்சையான இதழியலாளர்களை அச்சுறுத்துவதற்காக இயக்கமொன்றை அது ஆரம்பித்ததுடன், தேசிய பாதுகாப்புக்கு ஓர் அச்சுறுத்தலாக சமூக ஊடகங்களைச் சித்தரித்தது.[136] உண்மையில், 2014 ஜூலை 8 அன்று அளுத்கம சம்பவம் பற்றிய அவரது செய்தி குறித்து இதழியலாளர் தினோர் கொலம்பகே பொலிஸின் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு, நான்கு மணித்தியாலங்களுக்கு விசாரிக்கப்பட்டார்.[137] சமூக ஊடகங்கள் ஊடாக அளுத்கமவில் சூழ்நிலை மீது பொதுசனத்திற்கு புதுப்பித்தல்களை வழங்குவதில் கொலம்பகே காரணகர்த்தாவாக விளங்கினார். 2014 ஜூலையில், பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட கடிதமொன்றின் ஊடாக சிவில் சமூகத் தாபனங்களின் செயற்பாடுகள் மீது கட்டுப்பாடுகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.[138] இதழியலாளர்களுக்கு பத்திரிகை மகாநாடுகளையும், செயலமர்வுகளையும் மற்றும் பயிற்சிகளையும் மேற்கொள்வதிலிருந்து விலகியிருக்குமாறு சகல சிவில் சமூகத் தாபனங்களுக்கும் கடிதம் அறிவுறுத்தியிருந்தது. இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரநெஷனலினால் (Transparency International Sri Lanka) ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்ந்தறிதல் இதழியல் மீதான செயலமர்வுகள் பின்னர் ஒழுங்குபடுத்தப்பட்ட கும்பல்களினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு குழப்பப்பட்டதைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டது.[139] பாதுகாப்பு அமைச்சின் கடிதம் சட்டத்தின் அதிகாரத்தைக் கொண்டிருக்காத போதும், அது தாபனங்களை அச்சுறுத்தியதுடன், சிவில் சமூக நிகழ்ச்சிகள் குழப்பப்படுவதையும் ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூடத் தோன்றுகின்றது. பாதுகாப்புத் தாபனத்தின் இயக்கத்தின் நேர ஓட்டமும், குறியீட்டுச் சொற்களும் அளுத்கம சம்பவங்கள் மீது எவ்வாறு சுயேட்சையான இதழியலாளர்கள் அறிக்கையிட்டனர் என்பதற்கான அதன் ஏக்கத்திற்கு வெளிப்படையான தொடர்பைக் கொண்டிருந்தது.

---

135 See Dharisha Bastians, 'http://www.ft.lk/article/313452/Striking-the-match' *The DailyFT*, 26 June 2014, at http://www.ft.lk/article/313452/Striking-the-match#sthash.kg9F0kFc.dpuf.

136 Gotabaya Rajapaksa, 'Sri Lanka's National Security', Ministry of Defence - *defence.lk*, 19 August 2014, at http://www.defence.lk/new.asp?fname=Sri_Lankas_National_Security_20140819_02; Gotabaya Rajapaksa, 'Reconciliation will enhance national security', *The Sunday Observer,* 31 August 2014, at http://www.sundayobserver.lk/2014/08/31/fea02.asp. The Defence Secretary observed: 'The final threat to Sri Lanka's national security is the emergence of new technology-driven media, including social media sites such as Facebook, Twitter and other websites…Particularly due to increasing internet penetration and computer literacy in Sri Lanka, many youth are familiar with social media; they use them to gather information as well as to propagate ideas. Those with vested interests can exploit social media, causing problems in Sri Lanka or any other country, by circulating certain ideologies online and mobilizing and organizing people. This can be done with a minimal physical presence, and therefore constitutes a threat that is difficult to contain through the traditional tools of national defence.'

137 'Journalist quizzed by CID over Aluthgama', *The DailyFT*, 8 July 2014, at http://www.ft.lk/article/318944/Journalist-quizzed-by-CID-over-Aluthgama;

138 K. Ratnayake, 'Sri Lankan government imposes political gag on NGOs' *The World Socialist Website*, 10 July 2014, at https://www.wsws.org/en/articles/2014/07/10/sril-j10.html.

139 Dinouk Colombage, 'Sri Lanka accused of trying to gag NGOs', *Al-Jazeera*, 22 September 2014, at http://www.aljazeera.com/indepth/features/2014/09/sri-lanka-accused-trying-gag-ngos-201492263518312357 .html.

2013இனதும், 2014இனதும் போது, மதச் சிறுபான்மையினர்களுக்கு தாழ்வு ஏற்படும் வகையில் போராட்டக் குணமுள்ள சிங்கள-பௌத்த வாக்காளர் தளமொன்றைத் தூண்டி எழுப்பும் பெறுமதியை முன்னைய அரசாங்கம் முழுமையாகத் தவறாகக் கணக்கிட்டது. விளிம்புநிலைக்கு தள்ளப்பட்ட மதச் சிறுபான்மையினர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர். மேலும், அவரது அரசாங்கத்தினால் அடக்கப்பட்ட சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும், சுயேச்சையான இதழியலாளர்களும் அவரது எதிராளியான மைத்திரிபால சிறிசேனவுக்கு வாய்மொழியாகப் பிரச்சாரம் செய்தனர். வஞ்சகப்புகழ்ச்சியை முடிப்பதற்காக, சிறிசேனவின் பிரச்சாரத்தை முன்னேற்றுவதில் சமூக ஊடக மேடைகள் கருவிகளாக விளங்கின. இது பின்னர் சிறந்த ஆட்சிக்கான பிரச்சாரமொன்றாக உருவாக்கப்பட்டது. சுருங்கச்சொல்லின், யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்தில், மத வன்முறை தொடர்பில் அரசாங்கத்தின் செயலின்மையும், கூட்டுச்சதியும் 2015 ஜனவரி 8இல் குறிப்பிடத்தக்க ஆட்சி மாற்றத்தை நோக்கி அடிப்படைரீதியில் பங்களித்துள்ளது.

## முடிவுரை

இலங்கையில் மத வன்முறை மீது முன்நகர்கின்ற கலந்துரையாடலிலிருந்து பெருமளவு முக்கியமான முடிவுகள் வெளியாகியுள்ளன. இம் முடிவுகள் நிச்சயமாக சகல அம்சங்களும் அடங்கியவை அல்ல. எனினும், விடயம் மீதான தரவுகளிலிருந்தும், இலக்கியத்திலிருந்தும் கற்கக்கூடிய சில பரவலான போதனைகளை அவை பிரதிபலிக்கின்றன.

முதலாவது, இலங்கையில் மத வன்முறை இரு அத்தியாவசிய அமைப்புக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒரு புறத்தில், வெறுப்பு இயக்கத்திலிருந்தும், பிரசாரத்திலிருந்தும், அச்சுறுதல்களுக்கும், பயமுறுத்தலுக்கும், ஆதனங்களின் சிறிய அழிவுக்கும் அத்துடன் இடையிடையே உடல்ரீதியிலான வன்முறைக்கும் என்றவாறு தொடர்ச்சியானதும், குறைந்த தீவிரத்தன்மையினதும் தாக்குதலுக்கு மதச் சிறுபான்மையினர் உட்பட்டுள்ளனர். இவ்வகையிலான வன்முறை 'தீராத' வன்முறை என விபரிக்கப்படலாம். மறுபுறத்தில் உயர்வான-தீவிரத்தன்மையிலான வன்முறையின் சிதறலான நிகழ்ச்சிகளில் மோதியுள்ளனர். அத்தகைய வன்முறையின் தன்மை குறிப்பாக அளவிட முடியாததுடன், பரவலான உடல்ரீதியிலான தாக்குதல்கள், ஆதனங்களின் அழிவினாலும், சட்டத்திலும், ஒழுங்கிலும் ஒரு பொதுவான சீர்குலைவினாலும் சித்தரிக்கப்படுகின்றன. அத்தகைய வன்முறை 'கடுமையான' வன்முறை என விபரிக்கப்படலாம். 'தீராத மற்றும் கடுமையான வன்முறைக்கு' இடையிலான கோடு எப்பொழுதுமே தெளிவானதல்ல என்பதை மனதில் வைத்திருக்க வேண்டும். மேலும், வகைப்படுத்தலானது கடுமையின் எடுத்தக்காட்டலொன்று என்பது அவசியமில்லை. இலக்குப்படுத்தப்பட்ட சனசமூகம் மீது நிலைத்திருக்கத்தக்க மறுதலையானதும், நீண்ட காலத்திலானதுமான தாக்கமொன்றை அது கொண்டிருக்கும் என்பதனால், தீராத வன்முறை உறுதியாகவே முக்கியத்துவத்தில் குறைத்துக் கூறப்படலாகாது. இருந்தும், இலங்கையில் மத வன்முறையின் பிரச்சனையின் சிக்கலை அகற்றுவதற்கும், பயனுறுதிவாய்ந்த தலையீடுகளைக் கண்டறிவதற்கும் இந்த இரு கூறாக்குதலைப் புரிந்துகொள்வது முக்கியமானதாகும்.

இரண்டாவது, மதத் தாக்குதல்கள் மீதான புவியியல் சார்ந்த தரவுகளைத் குடித்தொகையியல் தரவுகளுடன் ஒப்பிடும் போது, முக்கியமான போக்கொன்று வெளிப்படுகின்றது. இது தொடர்பில் தீராத-கடுமையான இரு கூறாக்குதல் குறிப்பிட்ட விதத்தில் தொடர்பானதாகும்.

மதப் பரவலாக்கத்தின் குறைந்த அல்லது நடுத்தர மட்டங்களுடனும் அத்துடன் மதச் சிறுபான்மையினரின் சார்புரீதியில் குறைந்த செறிவுகளுடனானதுமான பகுதிகள் மதச் சிறுபான்மையினருக்கு எதிரான தீராத வன்முறையை அனேகமாக அதிகளவு சான்றுபகன்றுள்ளன. இம் முடிவானது இயல்பாகவே அமைவிடம்-குறிப்பான தாக்குதலுக்கு மட்டுப்பட்டதாகும். இவ்வாறாக, 'LL' அல்லது 'MM' புறவரைகளுடனான பகுதிகள் 'உயர் அபாயத்திலான' பகுதிகளாகக் கருதப்படலாம். இவற்றில் அமைவிடம் குறிப்பான தீராத வன்முறை இடம்பெறலாம். மதச் சிறுபான்மையினரின் உயர்வான பரவலாக்கல் மட்டங்களுடனான அல்லது உயர்வான செறிவுகளுடனான பகுதிகளில் தீராத வன்முறை இடம்பெறலாம். மேலும், வரைவிலக்கணத்தினால் அமைவிடம் குறிப்பானவையற்ற தீராத தாக்குதல்கள் பொதுவாகவே தோன்ற முடியும். உதாரணமாக, ஊடகங்களில் வெறுப்பு இயக்கங்கள் அமைவிடம் குறிப்பானவையல்ல. அத்தகைய புறநீங்கல்களுக்கு முற்றிலும் மாறானதன்மையில், குறிப்பான 'LL' அல்லது 'ML' பிரிவுச் செயலாளர் பிரிவுகளில் அட்டவணைகள் 2 மற்றும் 3 ஆகியவற்றை அடையாளம் காணப்பட்டுள்ளவற்றில் வாழ்கின்ற மதச் சிறுபான்மையினர் தீராத வன்முறைக்கு குறிப்பிட்ட விதத்தில் ஊறுபடுந்தன்மைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். தீராத வன்முறையை நோக்கி ஏன் அத்தகைய பிரிவுகள் அதிகளவு போக்குகளை எடுத்துக்காட்டுகின்றன என்பதை அனுமானிப்பது சாத்தியமாகும். ஒரு புறத்தில் இலக்குப்படுத்தப்பட்ட சிறுபான்மைச் சனசமூகத்தைச் சார்ந்த நபர்களின் சார்புரீதியிலான குறைந்த எண்ணிக்கையானது பாதுகாப்பற்றவர்கள் என்றவாறு முன்னுணர்வு கொள்ளப்படுவதற்கான அபாயத்திற்கு அவர்களை வெளிப்படுத்துகின்றது. பகுதியில் உள்ள பெரும்பான்மையிலான சனசமூகத்திலிருந்து குற்றத்தை இழைப்போர் திருப்பித் தாக்கப்படுவதையிட்டு அச்சம் கொள்ளலாம் என்பதுடன், இதனால் ஓரளவுக்கு துணிவுள்ளவர்களாக விளங்குவார்கள். மறுபுறத்தில், குறைந்த பரவலாக்கலானது 'விருந்தோம்புவர்'-'விருந்தளிப்பவர்' இயக்காற்றலை முன்வைக்கலாம். இதில் பெரும்பான்மைச் சனசமூகத்தினர் தம்மைப் பகுதியின் 'விருந்தோம்புவர்களாக' நோக்குவதுடன், சிறுபான்மைச் சனசமூகத்தினர் தம்மை

'விருந்தினர்களாக' நோக்குகின்றனர்.[140] உதாரணமாக, இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதன் மூலம் இந்த ஒழுங்கின் மட்டுப்படுத்தல்களைச் சிறுபான்மைச் சனசமூகம் வரம்பு மீறும் போது, 'விருந்தோம்புவர்-ஊடுருபவர்' இயக்காற்றலொன்றுக்கு சூழமைவு நகர வேண்டும். அத்தகையதொரு சூழமைவில், உளதாம்தன்மைசார்ந்த பயமுறுத்தலொன்றாக முற்றுகையை பெரும்பான்மையிலான சனசமூகம் மனவுணர்வுகொள்ளக்கூடும். அச்சுறுத்தல்கள் மற்றும் பயமுறுத்தல்கள் உட்பட தீராத தாக்குதல்களை, இடையிடையிலான தாக்குதல் அல்லது ஆதனங்களின் அழிவு ஆகியன பின்தொடரக்கூடும்.

உயர்ந்த பரவலான பகுதிகள் வேறுபட்ட வகையிலான பிரச்சனையொன்றை எதிர்நோக்கும். அத்தகைய பகுதிகள், தீராத வன்முறையின் சார்புரீதியில் சிறிதளவு தருணங்களைப் பார்க்கக்கூடும். இருந்தும், ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவொன்றின் விளைவொன்றாக சில இனவாதரீதியிலான பாரிய பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகள் நிலவுகின்ற கடுமையான வன்முறையை அவர்கள் எதிர்நோக்கக்கூடும். ஒழுங்குபடுத்தப்பட்ட குழுவொன்றினால் தூண்டலுடன் சேர்த்து ஒரு காரணமாகவுள்ள தொடர் நிகழ்ச்சியானது அத்தகைய கடுமையான வன்முறை வெடிப்பதற்கு அவசியமான நிலைமைகளை உருவாக்கக்கூடும். கிராண்ட்பாஸிலும், அளுத்கமவிலும் வன்முறையானது வெறுப்புக் குழுக்களினால் தூண்டலுக்குப் பக்கத்துக்குப்பக்கமாக நெம்புகோல்படுத்தும் சில நிகழ்ச்சிகளின் காரணமாக, கடுமையான வன்முறையினுள் குறிப்பிட்ட உள்ளூர் கெடுபிடிநிலைகள் வெடிக்கக்கூடியதன்மையை உண்மையாகவே எடுத்துக்காட்டும்.

மூன்றாவது, மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது, மேம்படுத்துவது அத்துடன் மத வன்முறையைத் தடுப்பது ஆகியன தொடர்பாக இலங்கையில் உள்ள சட்ட மற்றும் கொள்கைத் திட்டவரை நியாயமான விதத்தில் சிறந்ததாகவுள்ளது. கடந்த காலத்திலானதும், தற்போதிலுமான அரசாங்கங்களின் கொள்கைக் கூற்றுக்களின் பக்கம்பக்கமான முழுமையான அரசியலமைப்பு மற்றும் நியதியாக்க வரைச்சட்டம் மத வன்முறையை, குறிப்பாக கடுமையான வகையொன்றை உத்தேசமானரீதியில் தடுப்பதற்கான பாதுகாப்புத் திட்டவரையொன்றை முன்வைத்துள்ளது. இந்தத் திட்டவரையைப் பலப்படுத்துவதற்கு புதிய சட்டங்களும், கொள்கைகளும் அறிமுகப்படுத்தப்படலாம் என்ற அதேவேளை, நடைமுறையிலான வரைச்சட்டம் தொடர்பில் அடிப்படைப் பிரச்சனையானது வினைப்படுத்தலின் ஒன்றாகும்.[141] இந் நாட்டில் மதச் சுதந்திரம் மீதான விரிவான சட்டவியல் சார்ந்த ஆய்வுகள், மதச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் நீதித்துறை இணக்கமின்மையை வெளிப்படுத்தியுள்ளது.[142] இதனிடையே, யுத்தத்திற்குப் பிந்திய சகாப்தத்தின் போது, மத வன்முறை மீதான விவரணத்தின் பொதுவான அம்சமொன்றே சட்டத்தை வினைப்படுத்தும் சம்பந்தப்பட்டவர்களின் செயலின்மையாகும். இவ்வாறாக, கடுமையான வன்முறை இடம்பெறுவதற்கு இன்றியமையாத ஆதாரம் பொருளாதார மத வன்முறையைத் தூண்டுதல், பொதுவாக வெறுப்பு உரை சகித்துக்கொள்ளப்படுகின்ற விலக்கீட்டுரிமையின் சூழ்நிலையொன்றினுள் இடம்பெறுகின்றது. கடுமையான மத வன்முறையின் ஆக்கக்கூறுகளின் குறைந்தபட்சம் ஒன்றை அகற்றுவதற்கு, வெறுப்பு உரை தொடர்பில் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதும், தண்டனை அளிப்பதும் முக்கியமானதாக இருக்கும். BBS, *சிங்கள ராவய* மற்றும் *ராவண பலய* போன்ற குழுக்களின் சம்பந்தமின்றி, கடுமையான வன்முறையின் பெருமளவு சம்பவங்கள் நடந்திருக்கமாட்டா. உண்மையில், 2015 ஜனவரிக்குப் பிந்திய சகாப்தத்தில் கடுமையான வன்முறையின் தெளிவாகத் தெரிகின்ற வீழ்ச்சியானது இக் குழுக்களுக்கான இடத்தில் வீழ்ச்சிக்கு ஒத்திசைவாகவுள்ளது. எனவே, எதிர்காலத்தில் கடுமையான மத வன்முறையைத் தடுப்பதைப் பொறுத்தளவில் முன்னுரிமையாக நீதித்துறையினதும், சட்டத்தை வினைப்படுத்தும் சம்பந்தப்பட்டவர்களினதும் தொடர்பில் சட்டங்களின் கடுமையான வினைப்படுத்தலும், வலுவான நிறுவனரீதியிலான சீர்த்திருத்தமும் விளங்கும்.

---

[140] This idea has been explored by Verité Research in its weekly publication *The Media Analysis*. See for example, Verité Research, *The Media Analysis*, Vol.3 Issue No.4 (4 to 10 February 2013).

[141] This observation is also made elsewhere. See Centre for Policy Alternatives, *Constitutional and Legal Framework Governing Religious Freedom and Related Issues* (July 2014) and Shilpa Samaratunge & Sanjana Hattotuwa, *Liking violence: A study of hate speech on Facebook in Sri Lanka*, Centre for Policy Alternatives (September 2014), at 7.

[142] Pinto-Jayawardena *et al*, *op. cit*.

இதனிடையே, சனசமூக மட்டத்தில் தீராத வன்முறை உள்ளூர் அரசியல் நிறுவனங்களின் ஆதரவுடன் அல்லது ஆட்சேபனையின்றி ஒத்துக்கொள்ளலுடன் சனசமூக மட்டத்தில் தீராத வன்முறை இடம்பெறுகின்றது. உதாரணமாக, சிறுபான்மைச் சனசமூகமொன்றைத் தொந்தரவு செய்வதற்கும் அல்லது அச்சுறுத்துவதற்கும் ஆதரவை நாடி உள்ளூர் பொலிஸ் நிலையத்தை, நீதவானை அல்லது பிரதேச சபையை (அதாவது உள்ளூராட்சி சபை) பெரும்பான்மையிலான மதச் சனசமூகமொன்று அணுகக்கூடும். 2014இல் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பெரும்பான்மையிலான தாக்குதல்கள் உண்மையில் ஒன்றில் அரசாங்க சேவையாளர் ஒருவரை அல்லது நிறுவனத்தை சம்பந்தப்படுத்தியிருந்தது. இந்தத் தாக்குதல்கள் தன்மையில் பெரிதுமே தீராதவை என்பதுடன், மத வழிபாட்டினைத் தடுப்பதற்கான அல்லது வழிபாட்டு இடங்களை மூடிவிடுவதற்கான தீர்மானங்களையே அனேகமாகச் சம்பந்தப்படுத்தியிருந்தன. எனவே, சனசமூக மட்டத்திலான தகராறுகளைக் கையாள்வதில் அளப்பரிய நோக்கத்தன்மையை ஊட்டுவதற்கான பரவலான நிறுவனரீதியிலான சீர்திருத்தம் எதிர்காலத்தில் தீராத வன்முறையைத் தடுப்பதில் முக்கியமாக இருக்கும்.

நான்காவது, மத வன்முறை இடம்பெறுகின்ற சமூக-கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவில் கவனமான பகுப்பாய்வொன்று நாட்டில் சில பொதுவான பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளை வெளிப்படுத்துகின்றன. குறிப்பிட்ட சனசமூகமொன்றினுள் விருந்தோம்பல்-அழையாவிருந்தாளி இயக்காற்றலொன்றை முன்வைப்பதற்கு சூழமைவுரீதியிலான காரணிகள் ஒன்றுதிரட்டி செலுத்தும் போது, மதச் சிறுபான்மையினருக்கு எதிரான தீராத வன்முறை இடம்பெறுகின்றது. மேலும், 2013இலும், 2014இலும் மத வன்முறையில் பல்-எண்ணிக்கையிலான உதாரணங்களில் காணப்பட்டவாறு, பரவலான சூழமைவுரீதியிலான காரணங்களை விட மிகவும் செம்மையான பதங்களில் வன்முறை வெடிப்பதை ஒரு குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவு விளக்கமளிக்கலாம். இந்தச் சிக்கலான சூழமைவுரீதியிலான சூழ்நிலைக்குப் பதிலிறுப்பது சட்ட வினைப்படுத்தலுக்கும், நிறுவனரீதியிலான சீர்திருத்தத்திற்கும் அப்பால் நீடிக்கின்ற அணுகுமுறையொன்றை வேண்டுகின்றது. இவ்வாறாக, உள்ளூர் சூழமைவுகள் ஆழமாகத் தோண்டப்பட்டு, இறுதியாக தீர்வுகள் கண்டறியப்பட்டு, சனசமூக மட்டத்தில் அமுல்படுத்தப்படுவது முக்கியமானதாகும்.

இறுதியாக, மத வெறுப்பினையும், வன்முறையையும் எதிர்ப்பதற்கு அவசியமான ஜனநாயக இடத்தைப் பேணுவதில் சமூக ஊடகங்கள் கருவியாக விளங்கின. சமூக ஊடகங்கள் உண்மையிலேயே இரட்டை விளிம்பிலான வாளொன்றாகும். ஒரு புறத்தில், வெறுப்பு உரை அனேகமாக சமூக ஊடகங்கள் ஊடாக அனுப்பப்படுவதை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஷில்பா சமரதுங்க மற்றும் சஞ்ஜனா ஹத்தோட்டுவ ஆகியோரினால் அவதானிக்கப்பட்டவாறு, மதச் சுதந்திரத்தையும், வெறுப்பைப் பெருக்குவதையும் மீறுவதற்கான ஒரு மேடையாக வர முடியும்.[143] எனினும், மறுபுறத்தில், பிரதானநீரோட்ட ஊடகங்கள் மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை வெற்றிகரமாக சமமாக எடைபோடுவதற்கு சமூக ஊடகங்களினால் முடியும் என்பதைப் புரிந்து கொள்வது சமவளவில் முக்கியமானதாகும். அனேகமாக, நடந்து கொண்டிருக்கும் தாக்குதலையும், உடனடியான தாக்குப்பிடித்தலையும் பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு அரசாங்க-அனுசரணையிலான மதத் தாக்குதல்களை ஆவணப்படுத்துவதற்கும், அறிக்கையிடுவதற்கும் அது ஒரேயொரு கட்டுப்படுத்தப்படாத வழிமுறையாக விளங்குகிறது. மேலும், பொது ஆட்சியெல்லையில் வெறுப்பு உரை கட்டியெழுப்பப்படுவதை வியாபிக்கச்செய்வதற்கு உதவக்கூடிய 'எதிர்-செய்தியனுப்புதலுக்கு' சமூக ஊடக மேடைகள் முக்கியமானவையாகும்.[144] இந்த சாதகபாதகங்கள் கவனமாக எடைபோடப்பட்டவுடன், இலவசமான இடத்தை அதாவது சமூக ஊடகங்களைப் பேணுவது அதன் தன்மையில் இயற்கையாய் அமையப்பெற்ற அபாயங்களுக்கு பெறுமதியானது எனத் தோன்றுகின்றது. மத வன்முறை இடம்பெறும் போதெல்லாம், அதன் மீது அறிக்கையிடுவதற்கு அந்த இடத்தை சுயேட்சையான இதழியலாளர்களும், செயற்பாட்டாளர்களும் கொண்டிருக்க வேண்டும். மேலும், சமூக ஊடகங்கள் மீது மிக உயர்வாக செயற்படுகின்ற *புரவசி பலய* (பிரஜைகளின் சக்தி) மற்றும் *அலுத் பரபுர* (புதிய சந்ததி) போன்ற புதிய சிவில் சமூக இயக்கங்கள் அவற்றின் எதிர்-செய்தியனுப்பல் முயற்சிகளில் ஆதவரளிக்கப்பட வேண்டும்.

---

143 Samaratunge & Hattotuwa. *op. cit.* The authors analyse hate content found on the pages of 20 Facebook groups and raise serious concerns over the growth of such digital content. Also see Sanjana Hattotuwa, 'Liking violence: A study of hate speech on Facebook in Sri Lanka', *groundviews*, 24 September 2014, at http://groundviews.org/2014/09/24/liking-violence-a-study-of-hate-speech-on-facebook-in-sri-lanka.

144 Samaratunge & Hattotuwa. *op. cit* at 63.

எதிர்காலத்தில் மத இணைவாழ்வினை முன்னேற்றுவதில் முக்கியமான வகிபங்கொன்றை இக் குழுக்கள் அனேகமாக ஆற்றும்.

மேற்படி முடிவுகள் தொடர்பில் கொள்கைவகுப்போரும், சிவில் சமூகமும் கரிசனைக்கெடுக்கக்கூடிய தலையீடுகளைக் சுட்டிச்சொல்வதன் மூலம் இந்த ஆய்வு முடிவடைகின்றது.

1. வெறுப்பு உரை மீதான சட்டங்களை வினைப்படுத்தல்

வெறுப்பு உரை மீது சட்டத்தைக் கடுமையாக வினைப்படுத்துவதற்கான ஆதரவைச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் நாடியதுடன், அத்தகைய வினைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கொள்கைவகுப்போர் ஏற்றுக்கொள்வது அவசியமாகும். கடுமையான வன்முறையில் முக்கியமான ஆக்கக்கூறொன்றாக பாகுபாட்டுக்கும், விரோதத்திற்கும் மற்றும் வன்முறைக்குமான தூண்டல் தொடர்ந்துமிருக்கின்றது. அனேகமாக அத்தகைய காட்சியிலான வன்முறையைக் கட்டியெழுப்புவதற்கு குறிப்பிடத்தக்க வகிபங்கொன்றை வெறுப்புக் குழுக்கள் ஆற்றுவதுடன், இலங்கையில் அவ்வாறு விலக்கீட்டுரிமையுடன் அவை செய்துமுள்ளன. இவ்வாறாக, தண்டனைச் சட்டக்கோவை மற்றும் ICCPR அதிகாரச்சட்டம் ஆகியன உட்பட வினைப்படுத்தல் சட்டங்களும், வெறுப்பு உரையில் ஈடுபடுகின்ற தனிப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்தலும் கடுமையான வன்முறை இடம்பெறுவதிலிருந்து தடுப்பதற்கு முக்கியமானதாகும். எனினும், அத்தகைய உரையானது பாகுபாட்டினை, விரோதத்தை அல்லது வன்முறையை விளைவிப்பதற்கான இரு நோக்கங்களுக்கும், நிகழக்கூடியதன்மைக்கும் சட்டரீதியான கவனிப்பை எடுப்பது அவசியமாகும். வெறுப்பு உரையை 'ஒன்லைன்' மூலமாக கட்டுப்படுத்தும் சூழமைவில், சட்டங்கள் பின்வருமாறு இருக்க வேண்டும் என அன்ஜா கொவக்ஸ் (Anja Kovacs) பரிந்துரைக்கின்றார்.

> மிகவும் குறைந்தபட்சத்தில் உண்மையானதும், நடைமுறையிலானதுமான அபாயச் சோதனையை உள்ளடக்க வேண்டும்: அபாயத்தின் அல்லது வன்முறையின் உண்மையான சாத்தியக்கூறொன்று இருக்க வேண்டும் என்பதுடன், அத்தகைய அபாயம் அல்லது வன்முறை உடனடியாக நிகழக்கூடியதாகவும் இருக்க வேண்டும். தூண்டலின் செயற்பாடானது பகிரங்கமாக இருக்கவேண்டும். அத்துடன் குற்றமொன்றை இழைப்பதற்கான சட்டத்தை மீறுவதற்கான, கெடுதலைச் செய்வதற்கான அல்லது பாகுபாட்டைக் காட்டுவதற்கான நோக்கம் எடுத்துக்காட்டப்படுவது அவசியம் என்பதுடன், தீய எண்ணமானது வெளிப்படையாவதும் அவசியமாகும். இத் துறைகளின் ஒவ்வொன்றிலும் உயர்வான நுழைவாயிலைத் தாபிப்பதன் மூலம் மட்டுமே தகவலின் சுதந்திரமான ஓட்டம் மீது ஆர்வத்தைத் தணிக்கின்ற விளைவொன்றை வெறுப்பு உரைச் சட்டங்கள் கொண்டிருக்கமாட்டா என்பதை அது உறுதிப்படுத்தும்.[145]

இலங்கையில் எதிர்-பயங்கரவாதச் சட்டங்கள் துஷ்பிரயோகிக்கின்ற பெரிதும் அதேவழியில், அரசாங்கத்தின் அரசியல் எதிர்ப்பாளர்களை இலக்குப்படுத்துவதற்கு வெறுப்பு உரைச் சட்டங்கள் தெரிவுரீதியில் பிரயோகிக்கப்பட முடியும் என்ற பாரதூரமான அபாயமொன்றுள்ளது. எவ்வாறு வெறுப்பு உரைச் சட்டங்கள் வினைப்படுத்தப்பட முடியும் என்பது தொடர்பில் செயற்பாட்டாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். எனவே, வெறுப்பு உரையின் வினைப்படுத்தலுக்கு அழைப்பு விடுக்கும் தலையீடுகள், நிறுவனரீதியிலான தகுதியும், பாரபட்சமின்மையும் பலப்படுத்தப்படுகின்றவாறு ஒழுங்குமுறையான சீர்திருத்தத்தினால் நெருக்கமாக இணைந்திருக்க வேண்டும்.

2. பலப்படுத்துகின்ற நிறுவனங்கள்

மத வன்முறையைத் தடுப்பதற்கும், சனசமூக மட்டத்திலான தகராறுகளைத் தீர்ப்பதற்கும் பொறுப்பான அரசாங்க நிறுவனங்களைச் சீர்திருத்துவதை நோக்கி கொள்கை வகுப்போரும், சிவில் சமூகத்தினரும் பணியாற்ற வேண்டும். நீதித்துறையின் பரவலாக அறிக்கையிடப்பட்டதும், பகுப்பாயப்பட்டதுமான பாராமுகத்தையும், சட்டவினைப்படுத்தலின் ஆற்றலின்மையையும் அக்கறையின்மையையும் வழங்குகையில், இந் நிறுவனங்களைச் சீர்படுத்துவதற்கு சிறந்த செயல் திட்டமொன்றை அரசாங்கம் வகுத்தமைப்பது முக்கியமானதாகும். பாரதூரமான நிறுவனரீதியிலான தவறுகையின் சூழமைவிலும், அரசாங்கம் சதித்திட்டத்தில் பங்குகொள்ளும் காரணமாகவுள்ள

---

[145] Anja Kovacs *Regulating social media or reforming section 66A? Our recommendations to the Law Commission of India* (August 2014), at 4, cited in Samaratunge & Hattotuwa, *op. cit.* 59.

தருணங்களிலும் அனேகமாக தீராத வன்முறை இடம்பெறுகின்றது. மேலும், அரசாங்க அலுவலர்களின் ஆதரவுடன் அல்லது எதிர்ப்பின்றி தீராத வன்முறை அனேகமாக இடம்பெறுகின்றது. எனவே, நிறுவனரீதியிலான சீர்திருத்தம் இரு காரணங்களுக்காக முக்கியமானவையாகும். முதலாவது, வெறுப்பு உரை மீதான பலமான தடுக்கக்கூடிய சட்டங்களின் சமமானதும், நோக்கத்திலானதுமான பிரயோகம் சட்டவினைப்படுத்தல் மற்றும் நீதித்துறை அலுவலர்களின் கட்சி சார்பற்ற அணுகுமுறை மீது தங்கியுள்ளது. சட்ட வினைப்படுத்தல் முகவராண்மைகளின் தகுதியையும், பாரபட்சமின்மையையும் அத்துடன் நீதித்துறையில் சுதந்திரத்தையும் பழைய நிலைக்குக் கொண்டுவராமல், இச் சட்டங்களைக் கடுமையாக வினைப்படுத்துவதற்கான ஆதரவைத் தேடும் ஏதேனும் முன்னெடுப்பை மேற்கொள்வது அபாயகரமாக இருக்கலாம். இரண்டாவது, வன்முறையின் தீராத அமைப்புக்கள் அரசாங்க நிறுவனங்களினால் பாரிய அளவொன்றுக்கு சகித்துக்கொள்ளப்படுகின்றது. எனவே, அத்தகைய வன்முறைக்குப் பதிலிறுப்பது அந்நிறுவனங்கள் தொடர்ந்தும் நோக்கத்திலானதாக இருப்பதை இயலச்செய்கின்ற வலுவான நிறுவனரீதியிலான சீர்திருத்தத்தை வேண்டுகின்றன.

மதச் சுதந்திரத்தின் பாதுகாப்பினையும், மேம்பாட்டினையும் பொறுத்தளவில், நீதித்துறையிலான கூருணர்வுப்படுத்தலையும், ஆற்றலளவைக் கட்டியெழுப்புதலையும் நோக்கி இயக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நீதித்துறை சேவை ஆணைக்குழுவினதும், நீதிபதிகள் பயிற்சி நிறுவனத்தினதும் இணைப்புடன் விருத்திசெய்யப்பட வேண்டும். மேலும், வெளிநாட்டு உதவியுடன் ஏற்கனவே அமுல்படுத்தப்படும் சனசமூக ஒழுங்கை நிலைநிறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் மத வன்முறையைத் தடுப்பது மீதான மூலக்கூறுகள் உள்ளடக்கப்படுவதற்கு அனுசரிக்கப்படலாம்.[146] 2014 ஏப்ரலில் அமைக்கப்பட்ட மதத் தகராறுகளைக் கையாள்வதற்காக பொலிஸ் படையினுள் தாபிக்கப்பட்ட விசேட அலகுக்கு அனேகமாக, வன்முறை உயர்ச்சியடைவதிலிருந்து தகராறுகளைத் தடுப்பதிலும், மதத் தாக்குதலை ஆய்வுசெய்வதிலும் பாரிய செயற்பாட்டிலான வகிபங்கொன்று வழங்கப்படலாம். வன்முறையின் தீராத மற்றும் கடுமையான அமைப்புக்களிலிருந்து மதச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதற்கு ஆற்றலைக் கொண்டதும், அதை நோக்கி செயல்நோக்கமளிக்கப்பட்டதுமான சட்ட வினைப்படுத்தல் அலுவலர்களை செயல் திட்டம் உறுதிப்படுத்துவது அவசியமாகும். சனசமூகங்களுக்கிடையில் தகராறுகளின் சமமானதும், நோக்கத்திலானதுமான தீர்வை இயலச்செய்வதற்காக உள்ளூர் மட்டத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மத்தியில் மனோநிலைகளைச் சீர்திருத்துவதற்கும் அது குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய தலையீடுகள் இறுதியாக சிறுபான்மைச் சனசமூகங்களுக்கும், அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையில் நேர்மையான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான குறிக்கோளையும் கொண்டிருக்க வேண்டும்.

3. சனசமூக அடிப்படையிலான முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகள்

குறிப்பாக தீராத வன்முறைக்கு ஊறுபடத்தக்க பகுதிகளில் முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளை அமைப்பதில் ஆற்றுவதற்கான முக்கியமான வகிபங்கொன்றை சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் கொண்டுள்ளனர். குடித்தொகையியல் புறவரைகளிலும், மத வன்முறையில் உள்ள போக்குகளையும் வழங்குகையில், 'LL' அல்லது 'ML' புறவரைகளைக் கொண்டுள்ள பிரிவுகளில் சனசமூக-அடிப்படையிலான முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளை அமைப்பது பயனுள்ளதாக இருக்கும். அதன் இறுதி அறிக்கையில் அத்தகைய முறைமைகளை LLRC பரிந்துரைக்கின்றது என்பது குறித்துக்கொள்ளக்கூடியதாகும். அத்தகைய முறைமைகள் இனவாதக் கெடுபிடிநிலைகளைக் கண்காணிப்பதற்கு பணியாற்ற முடியும். அவை தகராறுகளைத் தீர்ப்பதற்கு சனசமூகத் தலைவர்களுக்கும், சட்ட வினைப்படுத்தலுக்கும் மேடைகளை வழங்கவும் முடியும். இம் முறைமைகள் சனசமூகத்தினுள் இருந்து செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அடிமட்ட பரிமாணமொன்றை எடுப்பது தவிர்க்கமுடியாததாகும்.

பிரச்சனைகளையிட்டுக் கலந்துரையாடுவதற்கும், தகராறுகளைத் தீர்ப்பதற்கும் கிரமமாக ஒன்றுகூடும் சர்வ-நம்பிக்கைக் குழுக்களை முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகள் உருவத்தை எடுக்க முடியும். முன்கூட்டிய கட்டமொன்றில் பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளைக் கண்டறிவதற்கும், வன்முறையாகக் கெடுபிடிநிலைகள் உயர்வடைவதிலிருந்து தடுப்பதற்கும் அத்தகைய பொறிமுறைகள் உதவ முடியும். பெண்களினதும், வயது மூப்படைந்தவர்களினதும்

---

[146] See, 'UK-funded Community Policing Project in North of Sri Lanka', 3 September 2014, at https://www.gov.uk/government/world-location-news/uk-funded-community-policing-project-in-north-of-sri-lanka.

பங்கெடுப்பு உட்பட இம் முறைமைகளில் பரவலான பங்கெடுப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மறுபுறத்தில், அத்தகைய பங்கெடுப்பு கடந்த கால சனசமூக அனுபவங்கள் மீது அடிப்படையிலானவை என்பதையும், தொடர்பிலானவை அத்துடன் எதிர்வுகூறக்கூடியவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. அடுத்த பரிந்துரையில் ஆராய்ந்துள்ளவாறு, இந்தச் சனசமூக அடிப்படையிலான முறைமைகள் பாரிய சனசமூக ஒட்டுந்தன்மையைக் கட்டுவதற்காக அமைதியைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் மீதும் நோக்கினைக் கொண்டுள்ளன.

4. அமைதியைக் கட்டியெழுப்புதல் மற்றும் கருத்தாடல் உருமாற்றம்

இலங்கையில் மத வன்முறையின் உள்மையத்தில், சனசமூகங்களுக்கு இடையில் நிலவுகின்ற பரவலானதும், உள்ளூர்மயப்படுத்தப்பட்டதுமான பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகள் உள்ளன. மத வன்முறைக்கான அவசியமான நிலைமைகளை முன்வைப்பதற்கு சமூக-கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவுகள் உள்ளடக்கக்கூடியதன்மையை இந்த ஆய்வு கலந்துரையாடியுள்ளது. அத்தகைய வன்முறையில் நிகழ்வினை நோக்கி எவ்வாறு குறிப்பிட்ட உள்ளூர் சூழமைவுகள் பங்களிக்கின்றன என்பதையும் அது பரிசீலித்துள்ளது. இந்த சூழமைப்புரீதியிலான பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகள் சட்ட வினைத்திறனிதும், நிறுவனரீதியிலான சீர்திருத்தத்தினதும் அத்துடன் முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளினதும் மூலம் மட்டும் மென்மைப்படுத்த முடியாது. இணைவாழ்வில் எமது புரிந்துணர்வின் உருமாற்றமொன்று சமவளவில் அவசியமானதாகும்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் கருணா நிலையத்தினால் சுட்டிச்சொல்லப்பட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான மும்முனை அணுகுமுறை ஒரு பயனுள்ள ஆரம்பப் புள்ளியாகும். இந்தப் பல்-துறையிலானதும், முற்றுமுழுவதுமான அணுகுமுறையானது வழங்கப்பட்டுள்ள சூழமைவொன்றில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளுக்கு பதிலிறுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அத்தகையதொரு அணுகுமுறையானது நல்லிணக்கம், சமாதானக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், பொருளாதாரப் புறத்தூண்டல் மற்றும் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இடைக்கால நீதி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்க முடியும். இலங்கையில் வெளிப்படையாகவுள்ள குறிப்பிட்ட இனவாதப் பின்விளைவிலான முரண்பாடான பிரச்சனைகளைப் பதிலிறுக்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்வதில் சிவில் சமூகத்துடன் ஒன்றுசேர தேசிய ஐக்கியத்திற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் போன்ற நிறுவனங்கள் முன்னெடுப்பினை எடுக்க வேண்டும். அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் இறுதியாக இரு நோக்கங்களைச் சாதிப்பதற்கான குறிக்கோளைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவது, சகல மதச் சனசமூகங்களின் சமமான அந்தஸ்தை வலியுறுத்துவதற்காக மதச் சுதந்திரம் மீது தேசிய கருத்தாடல்களை அவர்கள் உருக்கொடுக்க வேண்டும். இரண்டாவது, உள்ளூர் மட்டத்தில், குறிப்பாக சிங்களப் பெரும்பான்மைப் பகுதிகளில் நிலவுகின்ற ‘விருந்தோம்புபவர்-விருந்தினர்’ இயக்காற்றலை அவர்கள் உருமாற்ற வேண்டும். இலக்கரீதியிலான ஏற்றத்தாழ்வு இருந்த போதிலும், சமமான அந்தஸ்துடனான மதக் குழுக்களுக்கு இடையிலான இணைவாழ்வின் சூழ்நிலையொன்றினால் அத்தகையதொரு இயக்காற்றல் இறுதியாகப் பதிலீடு செய்யப்பட வேண்டும்.

5. சமூக ஊடகங்களின் ராஜ்யத்தைப் பாதுகாத்தல்

இறுதியாக, தேவையற்ற கட்டுப்பாட்டிலிருந்து சமூக ஊடகங்களின் ராஜ்யத்தைப் பாதுகாப்பது நோக்கி சிவில் சமூகம் பணியாற்ற வேண்டும். அதன் கலப்படமற்ற பெறுமதிக்காக இந்த ராஜ்யம் பாராட்டப்பட வேண்டும் என்பதுடன், ஏதேனும் முழுமையான கட்டுப்பாடுகளுக்கும் உட்படக்கூடாது. அதன் காரணமாக, வெறுப்பு உரை மீதான நடைமுறையிலானதும், உத்தேசமானதுமான சட்டவாக்கம் சமூக ஊடகங்கள் ஊடாக அனுப்பப்படுகின்ற உரையின் பொருளை உள்ளடக்குவது கட்டாயமானதாகும். எனவே, சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தவதற்கான அல்லது தணிக்கைக்கான மூலப்பிரமாணத்தை அறிமுகப்படுத்துவதற்கான ஏதேனும் முன்மொழிவுகளை சிவில் சமூகம் விழிப்புடன் எதிர்க்க வேண்டும். பதிலாக, வேறு ஊடகங்களின் மேலாக ஆட்சியாக்கத்தின் கட்டுப்பாட்டின் நேரங்களிலும், எதிர்-செய்தியனுப்புதலைப் பொறுத்தளவிலும் அதன் ஈடுசெய்ய முடியாத பெறுமதியை மனதில் வைத்து, இந்த ராஜ்யம் பாதுகாக்கப்பட வேண்டும். இறுதியாக, சமூக ஊடகங்களின் சுதந்திரத்திற்கு மதச் சுதந்திரம் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிச்சொல்வது நியாயமானதாகும்.

எவ்வாறு அத்துடன் ஏன் மத வன்முறைகள் இடம்பெறுகின்றன என்பதையிட்டு எமது புரிந்துணர்வை மேம்படுத்தும் நம்பிக்கையில் இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய மத வன்முறையின் விடயத்தை இவ்வாய்வு பரிசீலிக்கின்றது. வன்முறையைத் தடுப்பதற்கு பிரயோகிக்கப்படுகின்ற முழுமையான சட்டக் கொள்கையையும், நிறுவனரீதியிலான சட்டவரையையும் பற்றி அது கலந்துரையாடுகின்றது. அது வன்முறையில் போக்குகளையும், அத்தகைய போக்குகளைச் செயல்நோக்கமளிக்கின்ற சூழமைப்புரீதியிலான காரணிகளையும் பகுப்பாய்ந்துள்ளது. ‘தீராத மற்றும்’ ‘கடுமையான’ வன்முறை என்ற இரு முக்கியமான அமைப்புக்களில் இலங்கையில் மத வன்முறை இடம்பெறுவதைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகின்றது. இந் நாட்டில் மத வன்முறையின் தன்மையையிட்டு எமது புரிந்துணர்வை இந்த வேறுபாடு அறிவிக்க வேண்டும் என்பதுடன், தடுப்பதற்கும், குணப்படுத்துவதற்குமான தலையீடுகளைச் சிறப்பாக வடிவமைப்பதற்கு உதவவும் வேண்டும். வன்முறையானது பெரிதுமே நோய் போன்றவாறு பன்னிலையிலான அமைப்புக்களில் வருகின்றது. குணங்குறியறிதல் செம்மையாக இருக்க வேண்டும். நோயொன்றுக்கான சிறந்த சிகிச்சையளிப்பு போன்று வன்முறைக்கான பதிலிறுப்பு வீரியத்துடன் இருப்பதற்கு துல்லியமாகவும் இருக்க வேண்டும்.

# தீராத மற்றும் கடுமையான:

## இலங்கையில் யுத்தத்திற்குப் பிந்திய மத வன்முறை

INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

equitas
Centre international d'éducation aux droits humains
International Centre for Human Rights Education

ISBN 978-955-580-168-3
9 789555 801683